கல்கி



KALKI 4.2.1968 40 காசு


கல்கி பொருளடக்கம்


பிலவங்க, தை, 21 ❋ பிப்ரவரி, 4

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பட விளக்கம் பக்கம் 16





கருத்து: யு. எஸ். நியூஸ் & வொரல்டு ரிப்போர்ட்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ★ இதழ் 27

தமிழக அரசாங்கத்தின் தீர்மானம்

யூனியன் ஆட்சிமொழி, ராஜ்யங்களுக்கிடையேயான தொடர்பு மொழி ஆகியன குறித்துத் தமிழக சட்டசபை நிறைவேற்றியுள்ள தீர்மானம் தெளிவாக இருக்கிறது. ஆனால் இதை நடைமுறைக்குக் கொண்டு வந்து, சர்ச்சையை யுக்தமான முடிவுக்குக்கொண்டு வருவதற்கு என்ன செய்தாக வேண்டும், எவ்விதமான எதிர்ப்புச் சக்திகளை உருவாக்க வேண்டும் என்பதே கேள்வி. ஹிந்தி அபிமானமிக்க, பிடிவாத மத்திய சர்க்கார் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்குத்தான் அசைந்து கொடுக்கிறது என்பது அநுபவபூர்வமான உண்மையாயினும், இப்போது கோபம் கொண்டுள்ள நம் மாணவர்கள் வன்முறையும் ஒழுங்கீனமும் மேற்கொண்டு தேசியச் சொத்தை நாசம் செய்வது தவறான முறையாகும். இதை அநுமதிப்பதற்கில்லை. வன்முறையும் ஒழுங்கீனமும் ஏற்பட்டால், அது ராஜ்ய சர்க்காரை அகற்றிவிட்டுத் தமிழ் நாட்டை ராஷ்டிரபதி ஆட்சியின் கீழ்க் கொண்டு வருவதற்கு மத்திய சர்க்கார் முயற்சி புரிய உதவி செய்ததாகவே ஆகும். அவ்வாறு நடந்தால் மாணவர்கள் தங்களுக்குப் போராட்டத்தில் பெரும் பலமாக இருந்துவரும் ஆதரவை இழந்து விடுவார்கள். இதை மாணவர்களில் நல்லறிவு மிகுந்த பகுதியினர் உணர்ந்துள்ளனர். இதனால்தான் அவர்கள் வன்செயல்களில் ஈடுபடலாகாது என்ற முதன்மந்திரியின் புத்திமதியை ஏற்றிருக்கிறார்கள். மேலே சொன்ன காரணத்தினாலேயே, மத்திய சர்க்காரைச் சரியான வழியில் செயல்படச் செய்வதற்காகச் சக்தி வாய்ந்த எதிர்ப்பை உருவாக்குவதில் தமிழக மந்திரி சபையின் பொறுப்பு அதிகமாகிறது.

தென்னக மாணவர்களின் மீது விழுந்துள்ள அதிகப் படிப்பு பாரத்தைச் சமனக்குவதற்கு வழி காணப் போவதாகப் பிரதமர் அவர்கள் பார்லிமெண்டின் தமிழக அங்கத்தினர்களிடம் வாக்குத் தருகிறார். தென்னக மாணவர் மீது விழுந்துள்ள மிகப் பெரிய பாரம், படிப்பைக் காட்டிலும் அநீதியால் இழைக்கப்பட்டுள்ள தாப உணர்ச்சிச் சுமையேயாகும். ஹிந்தி பேசுவோருக்கு மட்டும் சாதகமாக நேர்மையற்ற முறையில் செய்யப்படும் வித்தியாசம் குறித்து ஏற்பட்டுள்ள உணர்ச்சிச் சுமை, பல மொழிகளைப் படிப்பதால் ஏற்படும் சுமையை விடப் பெரிது.

ஃ ஃ ஃ

இன்றைய தமிழக சர்க்காரின் மிகவும் உறுதி வாய்ந்த நண்பர்களில் நான் ஒருவன். அதற்கு நன்மையைக் கோருபவர்களில் நான் ஒருவன். எனினும், பதினான்கு பிரதேச மொழிகளையும் யூனியனின் அகில இந்திய ஆட்சி மொழிகளாக்க வேண்டும் என்று தமிழக சர்க்கார் கோருவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சாஸனத்தின் பதினேழாம் பிரிவு ஹிந்தியை மட்டும் ஆட்சி மொழியாக்கி அதற்கு மற்ற மொழிகளுக்கு இல்லாத சலுகையைத் தருவதால், அதற்கு எதிர்வாதமாக எல்லாப் பிரதேச மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்க வேண்டும் என்று சிறிது காலமாகவே சொல்லப்பட்டு வந்துள்ளது. பட்சபாதத்தை எதிர்க்கும் ஒரு வாதமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, நடைமுறைக்கான நிர்வாகக் கோரிக்கையாகக் கொள்வதற்கில்லை. யூனியன் நிர்வாகத்தை நடத்துகிற அகில இந்திய ஆட்சிமொழிகளாகப் பதினான்கு மொழிகளையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற யோசனை காரியசாத்தியமற்றது. எனவே, பதினான்கு மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்கும் காலம் வரும் வரையில் ஆங்கிலம் மட்டுமே யூனியன் ஆட்சி மொழியாகவும், ராஜ்யங்களுக்கிடையே தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்று கோரியிருப்பது, உண்மையில் சாஸனத்தின் பதினேழாம் பகுதி விதிப்படி ஆங்கிலத்துக்குப் பதில் ஹிந்தியைத் திணிக்கக்

கூடாது என்று பொருள்படுவதாக மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். சாத்திய மற்ற நிபந்தனையைக் கோருவது நிபந்தனை யற்ற கோரிக்கையேயாகும்.'

பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழி களாக அங்கீகரிக்கப்படும் வரையில் ஆங் கிலம் மட்டுமே யூனியன் ஆட்சி மொழியாக வும், ராஜ்யங்களுக்கிடையே தொடர்பு மொழியாகவும் நீடிக்க வேண்டும் என்று தீர் மானம் செய்யாமல், ஆங்கிலம் மட்டுமே யூனியன் ஆட்சி மொழியாகவும் ராஜ்யங் களுக்கிடையே தொடர்பு மொழியாகவும் நீடிக்க வேண்டும் என்று வியக்தமாகவும் தெளிவாகவும் தீர்மானித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

ஃ ஃ ஃ

தமிழக அரசின் தீர்மானத்தைச் சட்ட சபையில் எதிர்க்கட்சியாக உள்ள காங் கிரஸ்காரர்களும் எதிர்த்து வோட் செய்ய வில்லை. கட்சியின் கட்டளைக்கிணங்கியதால் அவர்கள் தமிழக சர்க்காருக்கு ஆதரவாக வோட் செய்யுமளவுக்குப் போகாவிடினும், ராஜ்ய மக்களுடைய கருத்தின் பலத்தை உணர்ந்திருப்பதால் தில்லியின் ஆட்சி மொழிச் சட்டத்தை ஆதரிக்கத் துணிவு பெறவில்லை.

ஃ ஃ ஃ

நமது ராஜ்ய மாணவர்களின் ஆங்கில அறிவை வலுப்படுத்த வேண்டும் என்று முதன் மந்திரி சட்ட சபையில் கூறியிருக் கிறார். கல்லூரிகளில் தமிழைப் போதனை மொழியாக்கியபோதிலும் மாணவர்களின் ஆங்கில அறிவுத் தரத்தை உள்ளபடி காப்ப தற்கோ அல்லது மேலும் உயர்த்துவதற்கோ சர்வகலாசாலை உப அத்யட்சகர்களைக் கலந் தாலோசிக்கப் போவதாக அவர் கூறியுள் ளார். இவ்விஷயத்தில் மாணவர்களுக்குப் போதனை தரும் அனுபவம் பெற்றவர்க ளுடைய யோசனையைக் கேட்டுச் சரியான படி காரியம் நடந்தவேண்டுமே யொழிய அரசியல் கட்சிகளின் உபதேசங்கள் இவ் விஷயத்தில் உதவாது.

எது நடந்தாலும் சரி, தென்னகத்திலுள்ள இளைஞர்கள் அரசியல்வாதிகள் காட்டும் தவறான வழியில் செல்லாமல் நல்ல ஆங்கிலப் பயிற்சி பெற வேண்டும். தென்னாட்டின் வருங்கால சந்ததிகளின் எதிர்காலம் இதைச் சார்ந்ததே. பாடமாக விதிக்கப்பட்ட புத் தகங்கள் மட்டுமின்றி மற்ற நல்ல ஆங் கிலப் புத்தகங்களில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு படிக்கவேண்டும். இது போன்ற படிப்புத்தான் மாணவர்களுக்கு நல்ல ஆங் கிலப் பயிற்சியைத் தரும். 'பாடமாக வைக் காத நல்ல ஆங்கிலப் புத்தகங்களை இவ்வளவு படித்திருக்கிறேன்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள மாணவர்கள் ஆசைப் பட வேண்டும். அதோடு தயாரித்த சொற் பொழிவுகளை நிகழ்த்தாமல், நிதானமாகவும் தெளிவாகவும் சரியாகவும் ஆங்கில வார்த் தைகளை உபயோகித்துச் சம்பாஷிக்கப் பயில வேண்டும். கல்லூரிகளிலுள்ள ஆங்கிலப் பேராசிரியர்களும், போதகர்களும் இதற் கெல்லாம் உதவி புரிய வேண்டும்.

சென்னை, மற்றும் தென்னாட்டிலுள்ள சர்வகலாசாலைகளின் மாணவர்கள் இதைச் செய்வாராயின் வட இந்திய சர்வகலா சாலை மாணவர்களிடையேயும் போட்டி உணர்ச்சி உண்டாகி அது ஒரு மகத்தான சக்தியாகப் பதிந்து அவர்களையும் ஆங்கில மொழி விஷயத்தில் பகுத்தறிவுக்குத் திருப்பிவிடும்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

என்ன சேதி?

ஒத்துழைப்போம்

“மகாராஷ்டிரத்தில் உள்ள வேலை வாய்ப்புக்களில் பெரும்பகுதி மகாராஷ்டிரர்களுக்கே கிடைக்க வேண்டும்” என்ற குறுகிய மனப்பான்மை கொண்ட கிளர்ச்சி மனத் துயர் ஏற்படுத்துகையில் ராஜ்யங்கள் பரஸ்பர நேச மனப்பான்மையை வளர்த்துப் பொருளாதார சுபிட்சத்துக்கு வழி வகுக்க முடியும் என்பதை எடுத்துக் கூறும் முதன் மந்திரிகளும் நாட்டில் இருப்பது ஆறுதல் தருகிறது. சமீபத்தில் பஞ்சாப் முதன் மந்திரி திரு லட்சுமணசிங் கில், ராஜ்யங்கள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார். அதற்கு உதாரணமாகத் தமது ராஜ்யத்திலுள்ள தொழில் நுட்பம் தெரிந்த மக்களை இயற்கை வளம் மிகுதியாக உள்ள பீகாருக்கு அனுப்பி அங்கு பல தொழிற்கூடங்களை ஏற்படுத்த வகை செய்யலாம் என்கிறார். அதேபோல் மகாராஷ்டிரம் தனது மூலதனத்தையோ, தொழில் நுட்பம் தெரிந்தவர்களையோ, ஆந்திர நாட்டுக்கோ கேரளத்துக்கோ அனுப்பிப் பெரும் தொழிற்திட்டங்களை நிறைவேற்றலாம் என்கிறார்.

தமிழ் நாட்டில் அண்டை ராஜ்யமான மைசூரிலிருந்து முப்பது கோடி யூனிட் மின்சாரம் ஆண்டு ஒன்றுக்கு வாங்க ஓர் ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தாகியிருக்கிறது. இந்தப் புது யுகத்தில் மின்சாரத்தினால் ஆகாதது ஒன்றில்லை! இதனால் பல தொழில்கள் பெருகி நாடு சுபிட்சமடைய வழி ஏற்படும் என நம்புவோமாக!

கிடைத்தற்கரிய கைங்கரியம்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் மகாமகத்தில் எவ்விதத்திலேனும் பங்கு பெறுவது ஒரு பாக்கியம். மகாமகம் என்றவுடன் குடந்தையின் புனித நினைவு அனைவருக்கும் வரும். அங்குள்ள மகாமகக் குளத்தில் திருநாளன்று நீராடிப் புனிதம் பெறத் தேவர்களே விழைவதாகக் கூறப்படும் போது மானுடரைப் பற்றிக் கேட்பானேன்? இவ்வாறு லட்சக்கணக்கான மக்கள் வருகிற பதினைன்காம் தேதி மகாமகத்தின் போது கும்பகோணத்தில் குழுமுவர். இச்சமயத்தில் பக்தகோடிகளுக்கு உணவளிப்பது கிடைத்தற்கரிய புண்ணியமாகும். குடந்தை சென்று மகாமக ஸ்நானம் செய்ய இயலாதவர்களும் இந்த அன்னதானத்தில் பங்கு கொண்டால் மகாமக நீராட்டுப் பலனைப் பெறுவர். ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்களின் ஆக்ஞைப்படி கும்பகோணம் ஸ்ரீமடத்தில் அன்னதானமும் அதிருத்ரமும் நடைபெறவிருக்கின்றன. இரு பணிகளுக்குமாக ரூ. 70,000 தேவைப்படும். இந்த நிதியம் திரளவும் அன்னதான — அதிருத்ரப் பணிகள் சிறப்புற நிறைவுறவும் ஆஸ்திகர்கள் அனைவரும் உதவி புரிய வேணும். கீழ்க்கண்ட விலாசங்களில் ஒன்றுக்குப் பணமோ, வேறு திரவியமோ அனுப்பி வைக்கலாம்:

வி. விகவேசய்யர், வக்கீல், சகாஜி நாயக்கன் தெரு, கும்பகோணம்;
கே. நாராயணசாமி அய்யர், 6, டபீர் கிழக்கு தெரு, கும்பகோணம்;
டாக்டர், எம். கே. சுப்ரமணிய அய்யர், பெஸண்ட் சாலை, கும்பகோணம்;
ஏ. கோபாலய்யர், ஆசிரியர், காமகோடி, 24, டபீர் நடுத்தெரு, கும்பகோணம்;
கே. நீலகண்டய்யர், பி. ஜி. பால் கம்பெனி, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1.

அடுத்த இதழில் . . .

இம்மாதம் பதினைன்காம் தேதி கும்பகோணத்தில் மகாமக விழா நடக்கிறதெனில் அதற்கு முன்தினம் மற்றொரு நன்னாளாகும்.

திருக் குடந்தையுடன் தனித்ததொரு தொடர்பு கொண்ட காஞ்சி சங்கர மடத்தின் ஏடுகளில் அது ஒரு பொன்னாளாகும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் பீடம் ஏறியது பிப்ரவரி பதின்மூன்றும் தேதியன்றே. இம்மாதம் பதின்மூன்றும் தேதி அவர்களது அருளாட்சி அறுபத்தோராண்டுகளைப் பூர்த்தி செய்கிறது. இவ்விரு பெருவிழாக்களை ஒட்டி அடுத்த கல்கி இதழில் சிறப்பு அம்சங்கள் வெளியாகின்றன.

இச்சிறப்புக்களின் சிரோமணியாக அடுத்த இதழில் ஸ்ரீ காஞ்சி ஆசாரியார்களின் திவ்விய பூஜைக் கோலத்தை அற்புத வண்ண ஓவியமாக ‘வினு’ வழங்கியிருக்கிறார். தனியே எடுத்துப் பூஜைக்கு வைக்கும் விதத்தில் இதழில் இடம் பெறுகிறது இந்தப் பல வர்ணப் படம்.



ராஜாஜியின் கருத்துக்கள்

ராஜ்யம் முழுவதையும் ஓரமைப்பாகக் கொண்டு அதிலுள்ள திறமைசாலிகளுக்கு வைத்தியக் கல்லூரிகளில் அட்மிஷன் தருவதற்குப் பதிலாக, மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஜனத்தொகைக்கு ஏற்ற விகிதாசாரத்தில் ஸ்தானங்கள் ஒதுக்கும் விதி செல்லத்தக்கதல்ல என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது நல்ல சமாசாரம். மாவட்டரீதியில் ஸ்தானங்கள் ஒதுக்கியதால் தகுதியற்ற சிலருக்கு அட்மிஷன் கிடைத்துவருகையில் சில சிறந்த மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்க முடியாமல் இருந்தது. இதனால் பலவிதமான தப்பபிப்பிராயங்கள் ஏற்பட இடம் இருந்தது.

ஃஃஃ

வன்முறைச் செயல்களினால் லாபம் பெறும் சுய அக்கறை கொண்ட கூட்டங்களின் சகாயம் பெற்று நம் இளைஞர்களில் சிலர் வன்முறைச் செயல்களில் இறங்கித் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொண்டுள்ளனர். இன்று மொழிக்காக வன்முறை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் வெறித்தனம் மற்ற துறைகளுக்கும் மாற அதிக காலம் வேண்டியதில்லை. ஒரு சிறிய மக்கள் தொகை பெரிய விஷமம் செய்துவிட முடியும். ஒரே ஒரு தீக்குச்சி பெரிய வைக்கோற் போர் முழுவதையும் கொளுத்திவிட முடியும்.

ஃஃஃ

முன்பு இந்தியாவில் அமெரிக்க தூதராக இருந்தவரும், இப்போது ஹார்வர்டில் பொருளாதாரப் பேராசிரியராக இருப்பவருமான ஸ்ரீ ஜான் கென்னத் கால்பிரெய்த் அவர்கள், பொதுத் துறை, தனியார் துறை இவற்றைப் பற்றி 'அமெரிக்கன் ரிவ்யூ'வில் எழுதியிருக்கிறார். சட்டசபையாளரும், மந்திரிகளும் பொதுத் துறைத் தொழில் நிர்வாகத்தின் கொள்கைகள் யாவற்றிலும் குறுக்கிடுவதால் நிர்வாகத் திறமை குன்றுகிறது என்கிறார்.

பிரிட்டனில் இவ்விதக் குறுக்கீடுகளின்றிப் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தைப் பாராட்டும் கால்பிரெய்த் இந்தியா முதலிய நாடுகளில் இவ்வித சுதந்திரம் மறுக்கப்படுவதைக் குறிப்பிட்டுச் சொல்வார்:

> அதிகாரிகள் சர்வக்ஞர்கள், தொழில் நுணுக்கங்களுக்கும் கூட அதிகாரிகளின் சர்வக்ஞத்துவம் செல்லுபடியாகும் என்பது இந்தியாவில் நிலவும் மாயப் பிரமை. அதோடு மற்ற நாடுகளை விட அங்கு ஏழைமையும் சேர்ந்திருப்பதால் கான்ட்ராக்ட் விடுவதில் சலுகை முதலிய ஊழல்களின் சபலமும் அதிகமாயுள்ளது... தனியார் துறை நிறுவனங்களுக்குச் சுய நிர்ணய சுதந்திரம் மறுக்கப்பட்டிருப்பதால் அவற்றின் நிர்வாகத் திறன் குன்றியுள்ளது. முடிவுகளை யெல்லாம் (மேல் மட்டத்தில்) பரிசீலிக்க வேண்டி விருப்பதால் காலதாமதமாகிறது. அடக்க விலை உயர்வதற்கு இதுவும் ஒரு காரணம்... 'சமூகக் கட்டுப்பாடு' என்பதால் விலைகளைக் குறைத்து வைக்கவும் ஊதியங்களை உயர்த்தித் தரவும் நேருகிறது.... இதனால் சேமிப்புக்கான ஆதாரம் நலிவுறுகிறது. ஓர் ஏழை நாட்டுக்கு மிகவும் அவசியமான மூலதனம் மறுக்கப்படுகிறது.
>
> இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பொதுத் துறை நிறுவனங்களில் அநேகமாக அனைத்துமே நஷ்டத்தில் நடக்கின்றன.

திறமையற்று நடக்கும் பொது நிறுவனங்களைப் பற்றிப் பேராசிரியர் கால்பிரெய்த் கூறும் முடிவுகளுக்கு அநுபந்தமாக, திறமையுடன் பொது நிறுவனங்கள் செயல்பட்டால் எப்படியிருக்கும் என்பது பற்றி என் கருத்தைச் சொல்கிறேன். அப்போது தனியார் துறையில் இன்று தொழிலாளர் காணும் சுதந்திரங்கள் கூடப் பொதுத் துறை நிறுவனங்களில் இன்றிக் கட்டுப்பாடுகள் மிகுந்து காணப்படும்.

ஃஃஃ

உத்தரப் பிரதேச அரசாங்க அலுவல் முழுவதையும் ஹிந்தியில் நடத்தத் தொடங்குவதன் மூலம் அந்த ராஜ்யம் இவ்வருஷக் குடியரசு தினத்தைக் கொண்டாடுவதாகச் செய்தி வந்துள்ளது. இதற்கு எவரும் ஆட்சேபம் தெரிவிக்க மாட்டார்கள். உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் பேசப்படும் ஹிந்தியும் மேற்குப் பகுதியில் பேசப்படும் ஹிந்தியும் மிகவும் மாறுபட்டவை என்று சொல்லப்பட்ட போதிலும் மொத்தத்தில் உத்தரப் பிரதேசத்தின் மொழி ஹிந்தியே. அந்த ராஜ்ய மக்கள் தங்களது ராஜ்ய நிர்வாகத்தைத் தாய் மொழியிலேயே நடத்த ஆசைப்படுவதன் நியாயத்தை ஹிந்தி பேசாதோர் உணர முடியும். ஆனால் பல்லாண்டுகளாக — சுதந்திரத்துக்குப் பின்னும் இருபதாண்டுகளாக — ஆட்சி மொழியாக நன்கு செயலாற்றி வந்த ஆங்கிலத்தின் இடத்தில் ஹிந்தியை அமர்த்தி அதை அகில இந்திய நிர்வாக மொழியாக்குவதைத்தான் ஹிந்தி பேசாதோர் எதிர்க்கின்றனர். உத்தரப் பிரதேசம் மற்ற ராஜ்யங்களைப் போரில் வென்றுவிடவில்லை; ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவது அகில இந்தியாவுக்கும் நன்மை ஏற்படுத்தி ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் வளர்க்கும் என்று உத்தரப் பிரதேசம் மற்ற ராஜ்யங்களுக்கு உறுதி ஏற்படுத்தவுமில்லை.

ஃஃஃ

ஆங்கிலமே அகில இந்திய ஆட்சி மொழியாகவும், ராஜ்யங்களுக்கிடையேயான தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்பதைத்தான் கேரளம் விரும்புகிறது என்று அந்த ராஜ்ய சட்ட சபையில் கேரள முதன் மந்திரி திட்டவட்டமாகக் கூறியிருப்பது கண்டு மகிழ்கிறேன். இப்பிரச்னையில் மத்திய சர்க்காருடன் போரிடும் தமிழக

முதன் மந்திரியின் கரங்களைக் கேரள முதல்வரின் கருத்து பெரிதும் வலுப்படுத்தும்.

ஹைதராபாத்திலும் பெங்களூரிலும் நடந்துள்ள அமளிகள் விரும்பத்தக்கனவல்ல எனினும் ஒரு விஷயத்தை நிரூபித்துள்ளன. ஆங்கிலத்துக்குப் பதிலாக ஹிந்தியைக் கொண்டுவரும் ஏற்பாட்டைப் பின்பற்ற ஆந்திரமும் மைசூரும் தயாராக இல்லை என்பது இப்போது மிகவும் தெளிவாகியுள்ளது. சர்வகலாசாலைகளிலும், நிருவாகத்திலும் ஆங்கிலம் சாதித்ததை ஹிந்தியும் சாதிக்கமுடியும் என்று எண்ணிப் பின்னேக்கி முன்னேறும் மக்களோடு தாங்களும் பின்னுக்குச் செல்ல ஆந்திர — மைசூர் இளைஞர்கள் விரும்பவில்லை. ஆங்கிலக் கப்பலை உடைத்துவிட்டு, ஹிந்தியைக் காப்புப் படகாக நம்புகிற பிரச்னையில் ஆந்திர—மைசூர் மக்களும் சர்வ கலாசாலையினரும் கொண்டுள்ள கருத்தை அந்த ராஜ்ய முதன் மந்திரிகளான ஸ்ரீ பிரம்மானந்த ரெட்டியும் நிஜலிங்கப்பாவும் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை.

இந்தியாவில் நீண்ட காலமாக முன்னேற்றம் கண்டுள்ள சர்வகலாசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆங்கிலத்துக்குப் பதில் ஹிந்தியை ஆதரித்துத் தம்மைத் தாமே முடக்கிக் கொள்வதற்கில்லை. இந்த சர்வகலாசாலைகள் நூற்றாண்டு விழாக் கொண்டாடியவை. அவை மனப்பூர்வமாகவோ, பயத்துக்கு அடிபணிந்தோ ஆங்கிலத்தை விட முடியாது. ஆங்கிலத்தை விடுவது மடமையும் நன்றி மறப்பதும் ஆகும்.

ஜீவ தயையை வளர்ப்பதற்குப் பதில் 'முன்னேறிய' நாட்டு ஸயன்ஸ் நிபுணர்கள் எதிர்த் திசையில் செல்கின்றனர். எளிதில் குணப்படுத்த முடியாத நோய்களுக்கு மக்கள் ஆளாகும்போது, இதற்கு ரண சிகித்சை மூலம் பரிகாரம் காண்பதற்காகக் கொடூரமான முறையில் மிருகங்களைப் பரீட்சை பார்க்கிறார்கள். இறந்து போனவர்களின் பழுதுறாத இதயங்களை எடுத்துப் பிற்பாடு அவற்றைத் தேவைப்படும் வேறு மனித நோயாளிகளுக்குப் பொருத்துவதற்காக இப்போது ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது இறந்து போனவரிடமிருந்து எடுத்த இதயத்தை ஒரு குரங்குக்குள் பொருத்திவிட்டு, பிறகு மனிதனுக்குத் தேவைப்படும் போது அதை எடுத்துக் கொள்வதுதான். இதற்காக முதலில் ஒரு முறை குரங்கை அறுத்து, அதன் இயற்கை இதயத்தை எடுத்துவிட்டு மனித இதயத்தைப் பொருத்த வேண்டும். பிறகு வேறு மனித நோயாளிக்கு அந்த இதயம் தேவைப்படும் போது அந்தக் குரங்கை மீண்டும் அறுத்து அந்த இதயத்தை எடுக்க வேண்டும். மானுட உயிரைக் காப்பதற்காக விலங்குகளுக்கு இரட்டிப்புக் கொடுமை! ஒருபுறத்தில் ஜனத் தொகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை, இன்னொரு புறத்தில் பிராணாபத்தான நோய் கண்ட மனிதருக்கு உயிர் தருவதற்காக மிருகங்களிடம் சோதனைகள்! மனிதன் தன் அறிவுக்கே அடிமையாகிவிட்டான் என்பதற்கே இதுவெல்லாம் நிரூபணம். அறிவு என்பது ஒரு விஷ விருட்சம் என்று பைபிள் கூறுவது வெறும் கதையல்ல.

அங்கீகாரம் பெற்ற பொதுவான அகராதிகளைத் தொகுப்பது நல்ல காரியம். விஷயத்தில் ஞானமுள்ள தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு பிரதேச மொழிகளில் ஸயன்ஸ் புத்தகங்களை எழுதுவதால் தான் பகுத்தறிவுக்குகந்த முறையில் மொழிகளை வளப்படுத்த முடியும். கமிட்டிக் கூட்டத்தில் உட்கார்ந்துகொண்டு அகராதி உற்பத்தி செய்யும்போது மொழித் தூய்மையை மட்டும் பார்க்கும் பண்டிதர்களுக்கே முக்கியத்துவம் தந்ததாகிவிடும். ஸயன்ஸ் நிபுணர்களோவெனில், சொற்றொடர்களை அப்படியே காத்துக் கருத்தைப் பளிச்சென்று வெளியிட வழி செய்வார்கள்.

காமகோடியின் கருணைமொழி

ஒரு வீட்டில் திருட்டு நடந்துவிட்டது. திருடனைக் கண்டுபிடிக்க மண்ணில் பதிந்திருக்கும் அவனுடைய கால் அடையாளம் முதலியவைகளைக் கவனிக்கிறோம். சிருஷ்டிகர்த்தா ஒருவன் நமது கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறான் என்று தெரிகிறது. அவன் இருக்கிறான் என்பதற்கு என்ன அடையாளம்? நாமே ஓர் அடையாளம்!



ஒரு நாட்டின் கலைச் செல்வமும் பண்பாடும் தொடர்ந்து உயிர் பெற்றிருக்க, அந்நாட்டின் பழம் கவிஞர்களையும், கலைஞர்களையும் போற்றி மதிக்கத் தெரிய வேண்டும் என்றார் பாரதியார். தமிழக மக்கள் இப் பண்பில் சற்றும் குறைந்தவர்களல்ல என்பதை நிரூபித்து விட்டனர். சங்கீத சத்குரு மகான் தியாகையரின் இருநூறுவது ஆண்டு விழாவைத் திருவையாற்றிலே வெகு சிறப்பாகக் கொண்டாடி விட்டனர். அதன் நேர்முக வர்ணனையை இதோ பாருங்கள் :

தியாகபிரம்ம ஆராதனை

மதங்கர்


திருவையாறென்னும் பஞ்சநத க்ஷேத்திரம் ஜனவரி 17 லிருந்து 22 வரை ஆறு நாட்கள் நாத வெள்ளத்தில் மூழ்கி யிருந்தது. இந்த வைபவத்தில் கலந்து கொள்ளாத ஜன்மம் பாழ் என்றுதான் கருத வேண்டும். அப்படிப் பட்ட மகத்தான வைபவமாக இவ்வாண்டு தியாகப் பிரம்ம ஆராதனை நிறைவேறியது. எங்கும் தியாகராஜர், தியாகப்பிரம்மம், ஸ்வாமிகள் என்பதே பேச்சு. தவிர அவரது உருவப் படங்கள், சிஷ்யர்களின் பெருமைகள், கிருதிகளைப் பற்றி உரையாடல், மதுரை ஸௌராஷ்டிர சபாவிலிருந்து வந்திருந்த அடுக்கடுக்கான ஓலைச் சுவடிகள், ஸ்வாமிகள் பாதுகை, அவரைப் பற்றிப் புஸ்தக வெளியீடுகள் இவைகளில் சிந்தனையைச் செலுத்திப் பரவசமடைந்தவர் பலர். ஸ்வாமிகள் பிறந்த இருநூறுவது ஆண்டின் நிறைவை முன் விட்டே, அவர் முக்தியடைந்த பகுள பஞ்சமி ஆராதனை சிறப்பான விழாவாக ஸ்ரீ தியாக பிரம்ம மஹோத்சவ சபையாரால் நடத்தப் பட்டது. பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் இந்த இன்பத்தை நுகர்ந்து, ஸ்ரீ தியாகராஜருடைய அருளுக்குப் பாத்திரமானார்கள்.

வித்த வித்யாதரி பெங்களூர் நாகரத்னம் மாளால் 1924ம் வருஷம் புதுப்பிக்கப்பட்ட சமாதி ஆலயத்தில் கர்னாடக இசை மணிகள் தங்கள் ஏற்றத் தாழ்வுகளை மறந்து, பக்தி சிரத்தையுடன் ஸ்ரீ தியாகராஜ கிருதிகளை, நாவினால் பாடியும், வாத்தியங்களில் வாசித்தும், மனத்தால் சிந்தித்தும், அஞ்சலி செலுத்தினர். இசை மன்னர்களும், கலாநிதிகளும், இளம் வித்வான்களும் ஒன்று கலந்து, சரிசமமாக உறவாடும் அரிய காட்சியைக் கண்டு இனிய கான வெள்ளத்தை நேரில் கேட்டு அனுபவித்தவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள். ஆனால் அத்தகைய பாக்கியத்தை அடையக் கொடுத்து வைக்காது எங்கும் ஏராளமான ரசிக உள்ளங்களை அகில இந்திய வானொலி நிலையத்தினர் உற்சவ நிகழ்ச்சிகளை ஆறு நாட்கள் அஞ்சல் செய்து மனம் குளிர்வித்தனர்.



"ஸ்வர ராக ஸுதா" என்ற கிருதியில் "நல்ல சங்கீதம், சுருதி லயத்தோடு சேர்ந்து பகவதர்ப்பணமாய்ப் பக்தியுடன் பாடினால் அதுவே, மோக்ஷத்தை அடையச் செய்யும்" என்று சுவாமிகள் அருளியிருக்கிறார். இதைத் தம்முடைய வாழ்க்கையிலேயே மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார். சகுண மூர்த்திகளில் பேதமில்லாமல் பிரம்மமாகப் பாவித்து எல்லாத் தெய்வங்களின் மீதும் கிருதிகளைப் பாடியிருக்கிறார். இவருடைய கிருதிகள் இந்தியா முழுவதும் பிரகாசிக்கின்றன. இவருடைய கவிதா மகிமையையும் கீர்த்தனங்களில் உள்ள நயங்களையும் ராக வடிவங்களையும் ஆழ்ந்த கருத்துக்களையும், பல தேசத்திலுள்ள ஆராய்ச்சியாளர்களும் பேராசிரியர்களும் ரஸிகர்களும் ஊக்கத்துடன் படித்தும், கேட்டும் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷியா முதலிய நாடுகளில் கூட விழாக்கள் நடத்தித் தீவிரப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

உப ஜனாதிபதி ஸ்ரீ வி. வி. கிரி ஸ்ரீ தியாக பிரம்மத்தின் இருநூறுவது பிறந்த ஆண்டு விழாவை ஜனவரி 17ந் தேதி ஸமாதி ஆலயத்தில் நிர்மாணம் செய்திருந்த பிரம்மாண்டமான கொட்டகையில் தொடங்கி வைத்து, தியாகராஜ ஸ்வாமிகள் ஓர் அவதார புருஷர் என்றும், வால்மீகியின் அம்சம் என்றும், மார்க்க தரிசி என்றும், அவர் நமக்கருளிய ஆத்ம தனம் ஒப்புயர்வற்றது என்றும், அதை நாம் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் 800 கிருதிகளில் காணப்படும் சிறந்த சங்கீத நடையும் பாவமும் கருத்துக்களும் பக்திப் பிரவாகமும் பண்டித பாமரர்களைக் கவரும் சக்தி வாய்ந்தவை என்று கூறி, கிருதிகள் மூலம் திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டினார். இப் பாடல்கள் கூறும் கருத்



ஜனவரி 25ம் தேதி மாலை சென்னை நகர சபை, ராஜாஜியின் 90வது பிறந்த தினத்தை யொட்டி, ஒரு பாராட்டு விழா நடத்திக் கௌரவித்தது. மை லேடீஸ் பூங்காவில் தேனீர் விருந்துடன் நடைபெற்ற இவ்விழாவினைச் சென்னை முதன்மந்திரி உள்படப் பல பிரமுகர்கள் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். சென்னை மேயர் திரு பேக் அவர்கள் பாராட்டுரையுள்ள அழகிய வெள்ளிப் பேழையை வழங்குவதையும், முதன்மந்திரி அகமும்முகமும் மலர ராஜாஜியுடன் அளவளாவுவதையும் மேலே படத்தில் காணலாம்.

துக்களை நாம் தினசரி வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

இவ்விழாவை யொட்டி ஸ்ரீ ஸத்குரு ஸங்கீத சமாஜத்தாரின் ஆதரவில் ஸ்ரீ டி. எஸ். பார்த்தசாரதியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, மூலத்தில் 676 கிருதிகளும் அவைகளின் தமிழ் அர்த்தம் அடங்கிய புத்தகமும், ஸ்ரீ எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமியின் ''தியாகராஜர்'' என்ற ஆங்கிலப் புஸ்தகமும், திருவையாறு ஸ்ரீ சுப்ரமணிய பாகவதரிடம் கிடைத்த 26 புதுக் கீர்த்தனை புஸ்தகமும், தியாகப் பிரம்ம மஹோத்ஸவ சபையாரால் தயாரிக்கப் பட்ட சிறப்பு மலரும் வெளியிடப்பட்டன. உப ஜனாதிபதி அவர்கள் இந்த அரியசேவையை யெல்லாம் பெரிதும் பாராட்டிப் பேசி, டி. எஸ். பார்த்தசாரதியின் புஸ்தகம் ஒரு சிறந்த சங்கீதப் பொக்கிஷம் என்றும், இதனால் பலர் பயனடைவர் என்றும் கூறினார். ஸ்ரீ எஸ். ஒய். கே. அவர்களின் நூல் ஸ்ரீ தியாகையரைக் குறித்தும் அவரது கிருதிகள் குறித்தும் அரிய உண்மைகளைச் சிறப்புற எடுத்துக் கூறுவதாகச் சிலாகித்தார்.

ஸ்வாமிகளின் ஆராதனை விழா மிக விமரிசையாக 20ந் தேதி ஆரம்பித்து 22ந் தேதி ஆஞ்சநேய உற்சவத்துடன் சிறப்பாக முடிந்தது. ஆராதனை நாளன்று சமாதியில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கூடி வித்வான்களின் பஞ்சரத்ன கீர்த்தனைகளைக் கேட்டு மகிழ்ந்தனர். இதன் முன்பு புல்லாங் குழலில் வாசிக்கப்பட்ட 'சேதுலாரா' மனத்துக்கு மிகவும் இதமாக இருந்தது. ஸ்ரீராமனை அலங்கரித்து உபசரிக்கும் க்ருதியானதால் அது சங்கீதத்தால் செய்த உபசாரமா யிருந்தது. பஞ்சரத்ன கோஷ்டிகானத்துக்குப் பின் நடைபெற்ற நாதஸ்வர இசை விழாவுக்குத் தனித்தவொரு கம்பீர மூட்டியது. ஆரம்பத்தில் தியாகராஜ ஸ்வாமிகள் வசித்து வந்த திருமஞ்சன வீதியிலிருக்கும் வீட்டிலிருந்து, ஸ்வாமிகள் படத்துடன் ஸங்கீத கலாநிதி மகாராஜபுரம் விசுவநாத ஐயர், ஸ்ரீ செம்மங்குடி சீனிவாஸ ஐயர், ஸ்ரீமதிகள் பிருந்தா, முக்தா மற்றும் மூதிய, இளைய வித்துவான்கள், வித்வான்களுடனும் உஞ்ச விருத்தி பஜனை செய்து கொண்டு தியாக ப்ரம்மத்தின் ஸமாதியை அடைந்தபோது, ஆதியில் இதே வீதிகளில் இதே பாடல்களைப் பாடிக்கொண்டுதானே ஸ்ரீ தியாகையர் உஞ்ச விருத்தி செய்திருப்பார் என்ற எண்ணம் ஏற்பட்டது. தினம் காலையில் 8–30 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 4 மணியிலிருந்து இரவு 11 மணி வரையிலும் சங்கீதக் கச்சேரிகளும், ஹரிகதா காலட்சேபங்களும், நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெற்றன. நாட்டின் பல திசைகளிலிருந்து வித்வான் களும் ரசிகர்களும் இவ்வாறு குழுமி சத் குருவுக்கு அஞ்சலி செலுத்துவது நம் நாட்டுக்கே பெருமை. வருகிற ஆண்டுகளிலும் இவ் விழாக்களில் உண்மையான பக்தியும், சிரத்தையும் நிறைந்து சங்கீதம் பிரகாசிப்பதற்கு ஸங்கீத ஸத்குரு அருள்வாராக!

ராஜாஜி அளித்த விளக்கம்

14—1—68 கல்கி இதழில் 'மக்கள் பசு பறவை அனைத்துக்கும் திருவிழா' என்ற தலைப்பில் ராஜாஜி எழுதியுள்ளதைப் பார்த்து அளவு கடந்த மகிழ்ச்சியை அடைந்தேன். அதில் ஓர் உண்மையை அவர் சொல்லியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாக உள்ளது. அதாவது 'லிங்கம் என்பது புலனுக்குக் கோசரமாகாத பரம்பொருளுக்கு நம்மால் பிரதிநிதித்துவம் அடைந்த சின்னங்களை உணர்த்தும் சொல்' என்றுள்ள உண்மையே.

'லிங்கம்' என்கிற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு 'அடையாளம்', 'எதனால் ஒன்று சுட்டிக் காட்டப்படுகிறதோ அது' என்ற அர்த்தம் அகராதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ''சப்த கல்ப த்ரும''த்தில் 'லிங்க்யதே அனேனேதி லிங்கம்' 'எதனால் சுட்டிக் காட்டப்படுகிறதோ அது' என்று கூறப்பட்டுள்ளது. இந்த அர்த்தத்தில்தான் சாஸ்திரங்களில் பலவிடங்களில் இப்பதம் பிரயோகிக்கப்பட்டுக் காண்கிறது.

பகவத்கீதை 14வது அத்தியாயம் குணாதீதனுடைய லக்ஷணத்தைக் கேட்கும் அர்ஜுனன் பின்வருமாறு கூறுகிறான்.

கைர்லிங்கைஸ் த்ரீன் குணனேதான்
அதீதோ பவதி ப்ரபோ!
கிமாசார: கதம் சைதான் த்ரீன்
குணனதிவர்ததே ||

இங்கு பகவத் பாதரின் பாஷ்யத்தில் 'லிங்கை' என்பதற்கு 'சின்னை:' (சின்னங்களால்) என்று பொருள் கூறியுள்ளார்.

இதே அர்த்தத்துடன்தான் லிங்க சரீரம் என்று சொல்வது புலனுக்குக் கோசரமாகாத சரீரத்தைக் குறிப்பிட உபயோகிக்கப்படுகிறது. 'சூசகம்' (அடையாளம்) என்கிற அர்த்தத்தில் மீமாம்ஸா சாஸ்திரத்தில் வேதத்தில் நேரிடையாகச் சொல்லாமல் ஸூசகமாகச் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களுக்கு 'ச்ருதி லிங்கம்' என்ற பெயர் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

சிலர் லிங்கம் என்பதை விபரீதமாகக் கொண்டு சரீரத்தின் பிரஜாஸ்ருஷ்டி அங்கம் என்று கூறுவது சரியல்ல என்பதுதான் நிர்மானமாகக் கொள்ள வேண்டியது.

மேற்கத்திய ஆராய்ச்சியாளர்கள், லிங்க பூஜை Phallus Worship என்று கூறுகிறார்கள். ரிக்வேதத்தில் ஒரு பதத்தை வைத்து ஹெச். வில்ஸன் இப்படிப் பொருள் செய்துள்ளார். ஆனால் ஸாயணாசார்யர் இம்மாதிரி அர்த்தம் கூறவில்லை. மகாமகோபாத்யாய பி. வி. கானே அவர்களும் History of Dharma Sastra Vol. II, Part IIல் ஸாயணாசாரியார் சொன்னதுதான் சரியான அர்த்தம் என்பதைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடம் சங்கராசார்ய ஸ்வாமிகள் சிவலிங்கத்தைப் பற்றிக் கூறும்போது அருவமாக (நிர்குணமாக) உள்ள கடவுளுக்கும் உருவமாக (ஸகுணமாக) உள்ள விக்கிரகத்துக்கும் மத்யஸ்தமாக லிங்கம் என்பது ஏற்பட்டுள்ளது என்கிறார்கள். சிவலிங்கத்தில் விக்ரஹத்துக்குரிய அங்கங்கள் இல்லாததால் அருவத்தைக் காட்டுவது என்று விளக்கியுள்ளார்கள்.

இவ்வாறான கருத்துக்கள் கொண்ட கட்டுரை ஒன்றை உலகத் தமிழ் மகாநாட்டில் ஸ்ரீ என். முருகேச முதலியார் வாசித்தார்கள்.

லிங்கத்தைப் பற்றிய தப்பான கருத்தைக் கண்டித்து மக்களுக்கு விளக்கியதற்காக ராஜாஜி அவர்களுக்கு எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மயிலாப்பூர், வி. பாலசுப்பிரமணிய அய்யர் (எம். எல். ஸி.)

இயற்கை எழிலில் சிறுமி

டி. கே. சி. அவர்களிடம் இளைஞர்கள் வந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் ''நீங்கள் என்ன படித்திருக்கிறீங்க?'' என்று கேட்பார் டி. கே. சி. ''நாங்களா? பி. ஏ. படித்திருக்கிறோம்!'' என்று பெருமையாகப் பதில் சொல்வார்கள். உடனே ரஸிகமணியிடமிருந்து, ''உங்களுக்குத் தென்னைமரம் ஏறத் தெரியுமா!'' என்ற கேள்வி பிறக்கும். அனைவரும் திருதிருவென்று விழிப்பார்கள். கிராமப் புறத்தின் நேரிடை அனுபவம் பி. ஏ. பட்டதாரிகளுக்கு இருக்காது என்பது டி. கே. சி. கண்ட உண்மை.


இயற்கை கொலுவிருக்கும் கிராமப் புறத்தில் அமைதி குடிகொண்டிருக்கிறது. தென்னை மரத்திலிருந்து பறித்த இளநீரை ஹாய்யாக மரத்தின் மீது அமர்ந்து அந்தச் சிறுமிக்குச் சுவைப்பதிலே தான் எத்தனை இன்பம்! அரியாசனத்தில் கொலுவிருப்பது போல் அவள் அமர்ந்து இளநீரை ஆராயும் இவ்விதழ் அட்டைப்படக் காட்சி நம் மனத்தைக் கவருகிறது.

தென்னை மரக்கிளை மீதில் - அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
—பாரதியார்

வண்ணப்படம் : ஆர். பி. எஸ். மணி.

அகில உலகமும் அழைக்கிறது





1. உலகக் கண்காட்சியின் ஒரு தோற்றம்.
2. மாடி பஸ்ஸில் உபராஷ்டிரபதியும், கவர்னரும், முதன்மந்திரியும் உலகக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்கள்.

பத்தாயிரம் ரூபாய் நோட்டு பார்த்திருக்கிறீர்களா? பத்தாயிரம் ரூபாய் பாங்கியில் போட்டு வைக்கத்தான் முடியவில்லை, நோட்டையாவது பார்த்து வைப்போமே என்ற ஆசை இருந்தால் சென்னையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அகில உலக வர்த்தக, தொழில் பொருட்காட்சிக்குப் போகலாம். நாசிக் அச்சகத்திலே பாரத சர்க்கார் அச்சடித்துத் தள்ளியிருக்கிற பத்தாயிரம் ரூபாய் நோட்டுக்கள், ஐயாயிரம் ரூபாய் நோட்டுக்கள் இவற்றின் மாதிரியைப் பார்க்கலாம் கனரா பாங்கு அமைப்பினுள்ளே.



காரவெல் விமானத்தில் ஏறிப் பறக்க வேண்டும் என்ற விருப்பம் நீண்ட நாட்களாக மனத்தின் ஒரு மூலையில் இருக்கிறதா? அப்படியானால் இந்தியன் ஏர்லைன்ஸ் கட்டடத்துக்குப் போங்கள். விமானத்துக்குள் நுழைவது போலவே தோன்றும். விமான உபசரணைப் பெண்ணொருத்தி உங்களுக்கு வணக்கம் கூறி வரவேற்பாள். விமானத்துக்குள்ளே சௌகரியமான சோபா நாற்காலியில் திருப்தியாகும்வரையில் உட்கார்ந்திருந்துவிட்டு வெளியே வந்தால் 'அடடா! நாம் டில்லிக்குப் பறந்து போய்விடவில்லை, இன்னும் சென்னையில்தான் இருக்கிறோம்' என்று புரிந்துகொள்வோம்.

இப்படி மனிதனுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்வது போல் மயக்குகிற எத்தனையோ விஷயங்கள் உள்ளன, இந்தப் பொருட்காட்சியிலே. அத்துடன் உண்மையான ஆர்வமுள்ளவன் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய மிகப் பல வாய்ப்புக்களும் உள்ளன.


அகில இந்திய உற்பத்தியாளர் சங்கம் 1941ஆம் ஆண்டு விஞ்ஞான மேதை பாரத ரத்ன திரு விசுவேசுவரய்யா அவர்களது பெரு முயற்சியினால் தொடங்கப்பட்டது. 'தொழில் வாயிலாகச் சுபிட்சம்' என்பது இச் சங்கத்தின் குறிக்கோள். இந்தச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறுகிறது இந்தக் கண்காட்சி. மத்தியில் இருக்கும் 154 அடி உயரமுள்ள ஸ்தூபிக்கு ''விசுவேசுவரய்யா டவர்'' என்று பெயரிட்டிருக்கிறார்கள். அவரது புகழையும் பெருமையையும் போலவே ஸ்தூபியும் உயர்ந்திருக்கிறது.

உலகக் கண்காட்சி ஆரம்ப விழாவில் முதன்மந்திரி, உபராஷ்டிரபதி, கவர்னர்.




ஒரு ரூபாய் கொடுத்து மேலே போய்ப் பார்த்தால் இது எத்தனை பெரிய பொருட்காட்சி என்பதை ஒருவாறு உணரலாம். அத்துடன் ஒவ்வொரு பகுதியின் அமைப்பையும் அழகையும் கண்டு ரசிக்கலாம். குடை விரித்தாற் போன்ற மகாராஷ்டிரா பெவிலியன், கேரளக் கோயிலைப் போல் அமைந்த ''ஃபாக்ட்'' பெவிலியன், தகர்க்க முடியாத கோட்டை போல் அமைப்புக் கொண்ட மத்திய அரசினரின் வர்த்தகத் துறை பெவிலியன் என்று பல விநோதமான அமைப்புகள். இந்தியாவில் உள்ள 150 தொழில் துறைகள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டுள்ளன. இருபதுக்கு மேற்பட்ட அயல் நாடுகள் தங்கள் தங்கள் தேசத்தின் அருமை பெருமைகளை விளக்கிக் கூறுகின்றன. இந்தப் பொருட்காட்சிக்குத்தான் ஆரம்ப முதலே எத்தனை சோதனைகள்! 1962லேயே நடந்திருக்க வேண்டிய பொருட்காட்சி சீனப் படையெடுப்புக் காரணமாய் ஒத்திப் போடப் பட்டது. மறுபடியும் 1967ல் நடத்துவதாக முடிவு செய்து ஏற்பாடுகளெல்லாம் நடக்கையில் பாகிஸ்தான் படையெடுப்பு நிகழ்ந்து மீண்டும் ஒத்திப் போட வேண்டிய நிலை உருவாகியது. தமிழகத்









இடது பக்கம்: 1. இந்திய ரயில்வேக் களின் கண்காட்சி - வெளித் தோற்றம். 2. நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மாடல். 3. முதன்மந்திரி திரு அண்ணா துரை திட்டக் கமிஷன் உறுப்பினர் திரு ஆர். வேங்கட்ராமனுடன் அளவளாவு கிறார். 4. பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரான முதல் வகுப்புப் பெட்டி. 5. கேரள பாணியில் 'பாக்ட்' நிறுவனத்தின் கோயில்.

இந்தப் பக்கத்தில்: 1. மேற்கு ஜெர் மன் கண்காட்சி - வெளித் தோற்றம். 2. முதன் மந்திரியுடன் கண்காட்சி நிர்வாகி திரு நராஜா ஷெரிப். 3. லிஸ்வேசுவரய்யா ஸ்தூபி. 4. கண் காட்சியில் குஜராத் பிரிவு.


தில் புதிய ஆட்சிக்கே மேலும் மேலும் பிராபல்யத்தைத் தேடித் தரவேண்டும் என்பதற் காகக் காலம் காத்திருந்தது போலும்!

150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்த இடத்தில் கண்காட்சியில் இடம் பெறும் பல்வேறு நிறுவனங்களுக்கும் தண்ணீர் வசதி முதல் வடிகால் வசதி வரை எல்லாவற்றையும் கவனித்துச் செய்ய வேண்டி யிருந்தது. இந்தப் பகுதியில் அண்ணா நகர் தோன்றப் போவதால் இந்த வசதிகளெல்லாம் இங்கு வீடு கட்டிக் கொண்டு குடி வரப் போகிறவர்களுக்கு உதவும். அதிர்ஷ்டசாலிகள்! சாலைகளுக்காகவும் வடிகால் வசதிகளுக்காகவும் வருஷக் கணக்கில் காத்திருக்க வேண்டாம். எல்லாம் 'ரெடி மேடா'க உள்ளன!

இந்தியாவில் இன்று வரை நடைபெற்றுள்ள பொருட்காட்சிகள் எல்லாவற்றையும் விட மிகப் பெரிதான இதை நடந்தே சுற்றிப் பார்ப்பதானால் ஒரு நாள் போதாது. நெடுஞ்சாலையில் மட்டும்] ஒரு முறை நடந்து வந்தால் போதும், பதினொரு மைல்கள் நடந்தவர்களாவோம். இந்த அரிய சாதனையைப் புரிய இயலாதவர்களுக்காகப் படகு போன்ற அமைப்புக் கொண்ட பஸ்ஸும், மாடிப் பஸ்ஸும் கண்காட்சி யில் வளைய வருகின்றன. அறுபது பைசா கொடுத் தால் கண்கொள்ளாக் காட்சியை ஒரு தடவை சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடலாம். என்ன என்ன நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன என்று புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு அமைப்பினுள்ளும் புகுந்து பார்க்க நடக்கத்தான் வேண்டும்; க்யூ வில் நிற்கத்தான் வேண்டும்!

இந்திய ரயில்வேக்கள் 1,25,000 சதுர அடி விஸ்









திரணத்தை இந்தக் கண்காட்சியிலே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அசல் ரயில் பெட்டிகளையே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றைப் புதிதாக நிர்மாணித்திருக்கிறார்கள். இதில் ஏறிச் சற்று நேரம் அமர்ந்திருந்து விட்டு வந்த அமைச்சர் திரு நெடுஞ்செழியன் 'ஏதோ அயல் நாட்டு ரயிலில் அமர்ந்திருப்பது போலவே இருந்தது. வெளியில் இறங்கி வேட்டி கட்டிய மனிதர்களைப் பார்த்த பின்புதான் இன்னும் தமிழகத்திலேயே இருக்கிறோம் என்று நினைவுக்கு வருகிறது' என்று பாராட்டிக் கூறினார். அவருடைய நல்வாழ்த்துக்களுடன் இந்த ரயில் பெட்டிகள் நிறைய ஏற்றுமதியாகி, நல்ல லாபத்தை நமது ரயில்வேக்களுக்குச் சம்பாதித்துத் தந்து, நஷ்டத்தை ஈடு கட்டி; மேட்டுப்பாளையம் — ஊட்டி ரயில் தண்டவாளங்களை அகற்றும் உத்தேசம் தவிர்க்கப் பட்டால் நமக்கெல்லாம் சந்தோஷம்தான்!

சோவியத் ருஷ்யாவின் கண்காட்சிக்குள் நுழைந்தால் இயந்திர சகாப்தத்தில் ருஷ்யா கண்டுள்ள முன்னேற்றத்தையும் அதை அவர்கள் கலையழகோடு விளம்பரப்படுத்தும் முறையையும் பார்த்துப் பிரமிக்கலாம். அத்துடன் அங்குள்ள ஒருசில ருஷ்யர்கள் நடத்துகொள்ளுகிற முறையைப் பார்த்தும் அதிசயப்படலாம்! இந்தியத் தொழிலாளி ஒருவனிடம் சிகரெட் பற்றவைக்கத் தீக்குச்சி ஒன்றைப் பெற முற்பட்டார் ஒரு ருஷ்யர். அதற்கு முன்பாக அவனிடம் சிகரெட் ஒன்றை நீட்டிவிட்டுப் பிறகுதான் தீக்குச்சியை அவர் ஏற்றார்.

ஒரு பொருளின் மதிப்பு தேவைக்கேற்ப எப்படி உயருகிறது! மனிதப் பண்பு என்பது எப்படி அமைய வேண்டும்? என்றெல்லாம் சிந்திக்க வைத்த அந்த நிகழ்ச்சி எந்த ஒரு பொருளையும் இலவசமாகப் பெறுவதில் உள்ள இகழ்ச்சியையும் புலப்படுத்துவதாய் இருந்தது.

டெலிபோனை எடுத்து இங்குள்ள கம்ப்யூட்டர் இயந்திரத்துடன் பேசலாம். எந்தக் கேள்விக்கும் பதில் கூறுகிறது இயந்திரம்.

இயந்திரத்துடன் பேசுவதைவிட ருஷ்யர்களிடமே பேசிப் பார்க்கலாம். கல்கி அவர்களின் அலையோசையை ருஷ்ய மொழியில் பெயர்த்தளித்த இப்ராஹிமோவுடன் நாலு நிமிஷங்கள் பேசுவதற்குள் அவரை நாலு தடவை கூப்பிட்டு அனுப்பி விட்டார்கள்.

''எப்போது உங்களைச் சாவகாசமாகச் சந்திக்கலாம்?''

''அவகாசமா? அதொன்றும் எனக்குக் கிடையாது'' என்றார் அவர்.

'தமிழ் பேசப் பழகுங்களேன்' என்ற யோசனைக்கு 'அதனால் என்ன பலன்?' என்று கேட்டார். ''ருஷ்யாவில் தான் யாருடன் தமிழில் பேசப் போகிறேன்? தமிழ் படிக்கத் தெரியும். ருஷ்ய மொழியில் படித்ததைப் பெயர்த்தளிக்க முடியும். அது போதாதா? பேசப் பழகும் நேரத்தில் இன்னும் இரண்டு தமிழ்ப் புத்தகங்களைப் படிக்கலாமே? நல்லதாக ஒன்று அகப்பட்டால் மொழிபெயர்க்கவும் முயலலாமே?''

எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதனால் நாட்டுக்கோ மக்களுக்கோ நமக்கோ என்ன நன்மை, பலன் என்று நினைத்து நினைத்து நேரத்தைக் கணப்பொழுதும் வீணாக்காது உழைக்கிற மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த இப்ராஹிமோ ருஷ்ய அலை ஓசை முழுதும் விற்றுப்போய்விட்டது என்றார்.

''அடுத்த பதிப்பு எப்போது வெளியாகும்!'' என்றபோது ''சந்தேகம்தான்'' என்ற பதில் கிடைத்தது. ''வேறு புதுப் புது நூல்களை ருஷ்ய மொழியில் மக்களுக்குக் கொடுக்க நினைக்கிறோம். புதிய ஆசிரியர்களை அறிமுகப்படுத்த எண்ணுகிறோம். தமிழிலிருந்து இதுவரை பத்துப் புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டு விட்டன ருஷ்ய மொழியில். பாரத நாட்டில் வேறெந்த மொழியும் அடையாத தனிச் சிறப்பு இது. ஆகவே இன்று மற்ற இந்திய மொழிகள் பக்கம் எங்கள் கவனம் திரும்பி யிருக்கிறது'' என்றார்.

ருஷ்யக் கண்காட்சியைப் பார்த்துவிட்டு வெளியே வந்த பிறகு அமெரிக்கா, பிரிட்டன் முதலிய பல ஜனநாயக நாடுகள் பொருட்காட்சியில் பங்கு பெறாதது பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை. கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகள் பலவும் இடம் பெற்றுள்ள இந்தப் பொருட்காட்சியை மேற்கு ஜெர்மனி நீங்கலாக மற்ற பல ஜனநாயக நாடுகள் புறக்கணித்ததன் மர்மம் என்ன என்றால் ஏதோ விளக்கங்களும் சமாதானங்களும் கிடைக்கத்தான் செய்கின்றன. என்றாலும் ஏமாற்றத்தை ஈடுகட்ட எதனாலும் முடியவில்லை.

பொருட்காட்சி ஆரம்பிப்பதற்குச் சில தினங்களுக்கு முன் அந்தப் பக்கம் சென்றவர்கள் 'இப்படி எல்லாம் அரைகுறையாக இருக்கிறதே, கண்காட்சி முடிகிறபோது தான் இதையெல்லாம் கட்டி முடிக்க முடியும்போலிருக்கிறதே' என்று எண்ணும்படி இருந்தது. ஆனால் 'மய' வேலை செய்து மயன் நிர்மாணித்த அற்புத உலகம் போல் ஆரம்ப தினத்தன்றே முக்காலே மூணு வீசம் முழுமை பெற்று நின்ற கண்காட்சியில் பலப் பல தனியார் துறை நிறுவனங்கள் இடம் எடுத்துக் கொண்டுள்ளன. பின்னி, அமால்கமேஷன்ஸ், ஈ. ஐ. டி., பாரி, டி. ஐ. சைக்கிள்ஸ், மபத்லால், ராதா வில்க்ஸ், பிரிட்டானியா பிஸ்கட்ஸ், சிமெண்ட் தயாரிப்பாளர் சங்கம், ஈஸன் குரூப், சேஷஸாயி நிறுவனங்கள், அசோக் லேலண்ட், குவாலியர் ரேயான்ஸ், வோல்டாஸ், பாட்டா, மர்பி ரேடியோ, டில்லி க்ளாத் மில்ஸ், ஹார்வி மில்ஸ் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். பாங்குகளோ, ஸ்டேட் பாங்க், இந்தியன் பாங்க், பரோடா பாங்க், யுனைடெட் கமர்ஷியல், ஸிண்டிகேட், கானரா, பாங்க் ஆப் இந்தியா என்று பலவும் நம்மைச் சேமிக்கத் தூண்டிச் சோதிக்கின்றன.

திருவிதாங்கூர் ரசாயனப் பொருள்கள், உரத் தொழிற்சாலையை ஆங்கிலத்தில் சுருக்கமாக (FACT) 'ஃபாக்ட்' என்கிறார்கள். உண்மை என்ற ஆங்கிலச் சொல்லாகத்

தொனிக்கும் இந்தக் தொழிலகத்தின் கட்டடம் கண்ணைக் கவருகிறது என்றால் அது உண்மை. கேரள பாணியில் அமைந்த கோயில் போலவே திகழ்கிறது கட்டடம் என்றால் அதுவும் உண்மை. மற்ற பல 'பெவிலியன்களை'ப் போல இது பிளைவுட்டினாலும் தகட்டினாலும் பிளாஸ்டிக்கினாலும் ஆனதல்ல; நல்ல கனமான சுவருடன் கூடிய உறுதியான செங்கல் கட்டிடமேதான் என்றால் அதுவும் உண்மை. கண்காட்சி முடிந்த பிறகு இந்தக் ''கோயிலை'' இவர்கள் தமிழக அரசுக்கே தந்துவிடப் போகிறார்கள் என்பதும் உண்மை. அண்ணா நகர் வீட்டு வாரியம் அதிர்ஷ்டம் செய்ததுதான். அதென்ன வீட்டு வாரியம் என்கிறீர்களா? ஹவுஸிங் போர்டு என்பதுதான் வீட்டு வாரியம் ஆகியிருக்கிறது இப்போது. இப்பகுதியில் குடிவரவிருக்கும் மக்கள் இதை உண்மைக் கோயிலாகவே உருமாற்றி வைத்துக்கொள்ளலாம்!

இதெல்லாம் சரிதான்; ஏராளமான பொருட் செலவில் உருவாகியிருக்கும் இந்தக் கண்காட்சியினால் என்ன பலன் ஏற்படும்?



ஹங்கேரி நாட்டு பெவிலியன்

பிற நாடுகளைப் பார்த்து அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுமா? நமது ஏற்றுமதிகள் அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் திவாலா நிலை நோக்கி வேகமாகச் செல்லுவதைத் தடுத்து நிறுத்த முடியுமா?

அல்லது ஏதோ வேடிக்கை, தமாஷா என்ற முறையில் கோடிக் கணக்கில் ரூபாய்களைக் கொட்டிச் செலவழித்ததுடன் முடிந்து போகுமா?


இப்படியாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் தொடக்க தினத்தன்று பேசிய முதலமைச்சர் அண்ணாதுரை முக்கியமாக இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார, தொழில் வள முன்னேற்றம் ஸ்திரமான விவசாய அபிவிருத்தியின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பது ஒன்று. இதனை இத்தனை நாட்களாக அலட்சியம் செய்ததால்தான் எத்தனையோ பல இன்னல்கள் நாட்டை இன்று சூழ்ந்துள்ளன. இனியாவது விழித்துக் கொள்வது அவசியம்.

இந்த அகில உலக தொழில், வர்த்தகக் கண்காட்சியை யொட்டி இந்தியத் தொழிலதிபர்களும், அயல் நாட்டு நிபுணர்களும் அறிஞர்களும் சென்னையில் கூடியிருக்கிற இந்த அரிய வாய்ப்பினை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொண்டு, தமிழகத்தின் தொழில் வள முன்னேற்றத்துக்குச் சிறந்ததொரு திட்டம் தீட்ட வேண்டும் என்பது அண்ணாதுரை வெளியிட்ட இரண்டாவது கருத்து.

இரண்டுமே அருமையான கருத்துக்கள் தான் என்று உணர்ந்துகொண்டு இப்பால் வந்தால் மத்திய அரசு வர்த்தக மந்திரி சபையின் கட்டடம் கண்ணில் படும். உயரே ஏறிச் செல்லும் படிக்கட்டுகளின் கைப்பிடிச் சுவரில் 'ஏற்றுமதிப் பொருள்கள்' என்று எழுதி யிருக்கிறார்கள். கட்டடத்தின் அமைப்போ ஒரு கோட்டை போல இருக்கிறது. ஏற்றுமதிகள் அந்தப் படிக்கட்டுகள் உயர்வதைப் போலவே உயர வேண்டும் என்றுதான் அனைவரும் விரும்புகிற போதிலும் தொழில் வியாபார வளம் இந்நாட்டில் பெருகப் பெருந் தடையாக இருப்பது அரசினரின் சிவப்பு நாடாக் கோட்டைதான் என்

அஸ்ஸாம் பகுதி: எண்ணெய் டாங்குகளின் உருவத்தில், பொலிகிறது !



பதையே இந்தக் கட்டடம் உருவகப்படுத்துகிறதோ என்று சிந்திக்கத் தொடங்குவோம் நாம்.

மேனாட்டுத் தொழிலதிபர் ஒருவர் சொன்னார்: உங்களது அரசியல் சித்தாந்தம் எதுவாக வேணுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஜனநாயகமோ, சோஷலிஸமோ அல்லது ஜனநாயக சோஷலிஸமோ ஏதோ ஒன்றாக இருக்கட்டும். அது பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. சிவப்பு நாடாவை நீக்குங்கள். அதுதான் முக்கியம். இந்தியாவில் புதிய தொழிலகம் ஒன்றை நிர்மாணிக்க எங்கள் நிபுணர் பாரத நாட்டுக்கு வருகிறார். வந்து, மிகப் பெரிய ஹோட்டலில் நாட்கணக்கில் ஒரு வேலையும் இன்றி உட்கார்ந்திருக்கிறார்! ஏனெனில் அவர் நிர்மாணிக்க வேண்டிய இயந்திரங்களின் பகுதிகளை துறைமுகத்திலிருந்து எடுத்துச் செல்லச் சுங்க இலாகாவினரின் அனுமதி கிடைக்க அத்தனை காலதாமதமாகிறது! அந்த நிபுணர் சும்மா உட்கார்ந்திருக்கிற நாட்களுக்கும் அவருக்கு நீங்கள் சம்பளம் கொடுத்துவிடலாம்தான். ஆனால் நாங்கள்

அதை எண்ணிப் பார்ப்பதில்லை; அந்த நிபுணர் ஹோட்டலில் சும்மா உட்கார்ந்திருக்கும் நேரத்தில் எங்கள் நாட்டிலேயே இருந்திருப்பாராகில் அங்கு தொழில் வளம் மேலும் பெருக எந்த அளவுக்கு உதவி இருப்பார் என்று தான் கணக்குப் போட்டுப் பார்த்து விசனிக்கிறோம்.''

இந்தக் கண்காட்சியை யொட்டித் தமிழகச் சிறுவர் சிறுமியருக்காக போலந்து சர்க்கார் இலவசமாக அனுப்பி வைத்த பென்சில்களைக் கூடச் சென்னை துறைமுகத்திலிருந்து சுங்க இலாகாவின் அனுமதி பெற்று எடுத்து வர என்ன பாடு படவேண்டியிருந்தது என்பதையும் கேள்விப்படுகிறோம்.

சிவப்பு நாடா ஒருபுறமிருக்க, நமது ஏற்றுமதிகள் அதிகரிக்காததற்கு இன்னொரு முக்கிய காரணம் சாம்பிள் காட்டப்படும் தரம் சரக்கு அனுப்பப்படும்போது இருப்பதில்லை என்பது. வடநாட்டைச் சேர்ந்த ஒரு மைக்கா ஏற்றுமதியாளர் அலட்சியமாகப் பேசினார்: ''நம் நாட்டில் மட்டும்தான் லஞ்ச ஊழல் இருக்கிறது என்று நினைத்து அலறுகிறார்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற கதைதான். நான் மைக்கா ஏற்றுமதி செய்கிறேன். மூன்று ரகங்களை ஓர் அயல் நாட்டில் அரசாங்க அதிகாரியிடம் காட்டுகிறேன். முதல்தர ரகத்தைக் கேட்கிறார். ஆர்டர் தருகிறார். நான் மூன்றுந்தர ரகத்தையே அனுப்புகிறேன். ஏனென்று கேட்காதிருக்க வேண்டிய 'ஏற்பாடுகளை' முன் கூட்டியே செய்து விடுகிறேன்.''

எல்லா ஏற்றுமதியாளர்களும் இவ்விதம் இருக்கிறார்கள் என்பதில்லை. ஆனால் மணம் பரப்பும் மலர்கள் நிறைந்த தோட்டத்தினூடே கும்பியுடன் கூடிய ஒரு சாக்கடை ஓடினாலும் போதாதா பூங்காவின் எழிலை அழிக்க?

பொருட்காட்சியில் இது போன்ற சிந்தனைகளுடன் பல அயல் நாட்டு, உள்நாட்டு பெவிலியன்களுக்குள் நுழைந்து பார்த்துவிட்டு வரலாம். என்னதான் விதம் விதமான இயந்திரங்களையும், உலக அதிசயங்களையும் பார்த்தாலும் நமது பெண்மணிகளுக்கு உற்சாகம் தருவது ரிப்பன், வளைக் கடைகளும், குழந்தைகளுக்குப் பொம்மைக் கடைகளும்தான். இவற்றுக்கும் பொருட்காட்சியில் இடமுண்டு. கலை நிகழ்ச்சிகளுக்கும் குறைவில்லை.

சுற்றிப் பார்த்ததில் பசிக்கும். மசால் தோசை 75 பைசா; காப்பி 50 பைசா என்ற விலைப் பட்டியலைப் பார்த்துத் திடுக்கிடுவோம். ''உள்ளே போனால் எல்லாம் கிராக்கி சாமி. இங்கேயே வாங்கிக்கிடுங்க'' என்று கேட்டுக்கு வெளியே பழக் கூடைக்காரன் எச்சரித்ததை மதிக்காமல் போனோமே என எண்ணுவோம்.

இந்தச் சமயத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் பேசிக் கொண்டு போவது நம் காதில் விழுகிறது. ''இதை முழுக்க முழுக்கப் பார்த்து முடிக்க நாலைந்து நாட்களாவது ஆகும். ஒவ்வொரு நாளைக்கும் தலைக்கு ஒரு ரூபா கொடுக்க யாரால் முடியும்? சீசன் டிக்கட் வைக்கணும்'' என்கிறார் ஒரு குடும்பத் தலைவர்.

''பெரிய குடும்பங்களுக்குச் சலுகை காட்டணும். நிறையப் பேர் வரோமில்லையா?'' —இது அவர் மனைவி.

''ஆமாம், ஆமாம். இந்தப் பொருட்காட்சிக்கென்றே நம் வீட்டிலே வந்து 'டேரா' போட்டவங்களையும் சேர்த்துக் கணக்குப் பண்ணினால் கமிஷன் இன்னும் அதிகமாகக் கிடைக்கும்!'' என்று மனைவிக்கு மட்டும் கேட்பது போல் அவர் முணுமுணுத்தாலும் நம் காதில் அது விழுந்து விடுகிறது.

''இப்போத்தான் குடும்பக் கட்டுப்பாடு யுகமாயிற்றே. சின்னக் குடும்பங்களுக்குத் தான் சலுகை காட்ட வேண்டும்'' என்கிறார் மற்றொரு குடும்பத்தின் தலைவர்.

''இன்னும் ஐந்து வருஷங்கள் கழித்து நீங்க இப்படிப் பேசுவீங்களா? அதையும் பார்க்கத்தான் போகிறேன்'' என்று சவால் விடுகிறார் முதல் ஆசாமி.

அசதி மிகுதியால் கால்கள் கெஞ்சத் தள்ளாடியபடி வீடு திரும்பும் நமக்கு ஒரே ஒரு ஆறுதல்: முந்நூறு ஏக்கர் நிலப்பரப்பில் இதை நடத்துவதாகத் திட்டம் போட்டிருந்தார்களாம். அடேயப்பா! இதைவிட இன்னும் இரண்டு மடங்கு பெரிது என்றால்... நல்லவேளை. இத்துடன் ஆளை விட்டார்களே!


விநோத வாழை!

சென்னை, அண்ணாமலைபுரத்திலுள்ள கே.ஏ. தங்கவேலுவின் வீட்டுக்குத் தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஆண் - பெண் குழந்தை - குட்டிகள் வந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். காரணம்! தங்கவேலுவைப் பார்க்கும் ஆவல் மட்டும் அல்ல; அவர் வீட்டின் தோட்டத்தில் உள்ள ஒரு வாழை மரம் குலை தள்ளியிருக்கிறது. அதுவும் நெஞ்சில் குலை தள்ளியிருக்கிறது. இப்படிப்பட்ட அதிசய வாழை மரத்தைப் பொது மக்கள் மட்டும் அன்றி விவசாயப்பண்ணை அதிகாரியும் பார்வையிட்டதோடு, இடையில் வாழை 'தார்' ஏன் போட்டது என்று அறியும் பொருட்டு ஆராய்ச்சி செய்கிறார். இந்த அதிசய வாழையையே இவ்விதழ் பொருளடக்கப் பகுதியில் காண்கிறீர்கள்.

— அன்பு

மகாபாரதம்

ராஜாஜி



6. தேவயானி மணந்தது

சுக்ராசாரியாருடைய மகள் தேவயானியும் அசுர ராஜ கன்னிகைகளும் ஒரு நாள் வனத்தில் விளையாடிவிட்டுக் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தார்கள். அப்போது குளக்கரையில் வைத்திருந்த ஆடைகள் காற்றடித்து எல்லோருடையதும் ஒன்றாகக் கலந்து போயின. குளித்த பின் கன்னிகைகள் கரைக்கு வந்து ஆடைகளை எடுத்து உடுத்திக் கொள்ளும்போது விருஷபர்வ ராஜாவின் குமாரத்தி சர்மிஷ்டை தெரியாமல் தேவயானியின் புடவையை உடுத்திக்கொண்டாள். இதைப் பார்த்த தேவயானி, ''அசுரப் பெண்ணே! மரியாதை தெரியாதவளாக இருக்கிறாயே! சிஷ்யன் மகள், குரு குமாரத்தியின் வஸ்திரத்தை எப்படி உடுத்திக்கொள்ளலாம்?'' என்றாள்.

பாதி உண்மையாகவும் பாதி வேடிக்கையாகவும் சொல்லப்பட்டதாயினும் இது ராஜகுமாரி சர்மிஷ்டைக்கு மிகுந்த கோபம் உண்டாக்கி விட்டது. ''என் தகப்பனார் முன் உன் தந்தை தினமும் குனிந்து வணங்குவது உனக்குத் தெரியாதா? என் தகப்பன் கொடுத்ததை வாங்கிக் கொள்ளும் யாசகனுடைய பெண் அல்லவா நீ? பிராமணப் பெண்ணே! ஸ்துதிக்கப்படுகிற ராஜ வம்சப் பெண் நான். பொருளைக் கொடுக்கும் ஜாதி நான். நீயோ பிச்சை எடுக்கும் குலம். ஆயுதம் எடுக்க முடியாத ஏழை ஜாதிப் பெண்ணாகிய நீ என்னையா பேசுகிறாய்?'' என்று பலவாறாக அவள் மிகக் கடுஞ் சொற்களைப் பிரயோகம் செய்தாள். வரவரச் சண்டை வலுத்துப் போயிற்று. கோபம் அதிகரித்த சர்மிஷ்டை தேவயானியைக் கன்னத்தில் அறைந்து, தண்ணீர் இல்லாத ஒரு கிணற்றில் தள்ளி விட்டாள். அவள் இறந்தே விட்டாள் என்று எண்ணி அசுரப் பெண்கள் திரும்பிப் பாராமல் அரண்மனைக்குப் போய் விட்டார்கள்.

கிணற்றில் தள்ளப்பட்ட தேவயானி மேலே ஏற முடியாமல் அங்கேயே தவித்துக் கொண்டிருந்தாள். தற்செயலாகப் பரத குலத்தைச் சேர்ந்த யயாதி சக்கரவர்த்தி வனத்தில் வேட்டையாடிக் களைத்துப் போய்த் தாகத்துக்குத் தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டு அந்தக் கிணற்றண்டை தனியாக வந்து சேர்ந்தான். கிணற்றுக்குள் எட்டிப் பார்க்க அதில் ஏதோ பிரகாசமாகத் தெரிந்தது. நன்றாகப் பார்த்ததில் நெருப்பைப் போல் ஒளி வீசிக் கொண்டிருந்த அழகிய கன்னிகை ஒருத்தி அதிலிருக்கக் கண்டு வியந்தான்.

''நீ யார்? குண்டலங்களையும் சிவந்த நகங்களையும் உடைய யுவதியே! நீ யாருடைய மகள்? எந்தக் குலம்? கிணற்றில் எப்படி விழுந்தாய்?'' என்று கேட்டான்.

''நான் சுக்ராசாரியாருடைய மகள். என்னைத் தூக்கிவிடும்'' என்று தன் வலக் கையை நீட்டினாள். யயாதி கிணற்றில் இறங்கிக் கையைப் பிடித்து அவளைத் தூக்கி விட்டான்.

மேலே தூக்கிவிடப்பட்ட தேவயானிக்கு அசுர ராஜனுடைய நகரத்துக்குத் திரும்பிப் போக இஷ்டமில்லை. சர்மிஷ்டையின் நடத்தையை நினைத்து நினைத்து, தகப்பனிடம் போகாமல், வேறு எங்கேயாவது போய்விடுவதே நலம் என்று எண்ணினாள். யயாதியைப் பார்த்து, ''பிராமணப் பெண்ணினுடைய வலது கையைப் பிடித்தீர். நீர் சாந்தியும் சக்தியும் கீர்த்தியும் பெற்றவராகத் தெரிகிறது. யாராக இருந்தாலும் நீர்தான் எனக்குப் புருஷர் ஆவீர்!'' என்று பிரார்த்தித்தாள்.

''அன்புள்ளவளே! நான் க்ஷத்திரியன். நீயோ பிராமணப் பெண். என்

னுடன் உனக்கு எப்படி விவாகம் தகும்? உலகத்துக்கே ஆசாரியராகத் தகுந்த சுக்ராசாரியாருடைய பெண், க்ஷத்திரியனாகிய எனக்கு எவ்வாறு உரியவளாவாள்? அம்மணி! நீ உன் வீடு செல்வாய்'' என்று சொல்லி விட்டு யயாதி தன் நகரம் சென்றான்.


பழைய நாள் வழக்கப்படி, க்ஷத்திரியப் பெண்ணானவள் பிராமணனை விவாகம் செய்து கொள்ளலாம். பிராமணப் பெண் க்ஷத்திரிய புருஷனை விவாகம் செய்துகொள்வது தவறு என்று கருதப்பட்டது. எல்லா ஜாதிகளிலும் பெண்களுடைய குலத்தைக் காப்பாற்றுவதே முக்கியமாகக் கருதப்பட்டு வந்தது. 'அனுலோமம்' செல்லும். 'பிரதிலோமம்' சாஸ்திரத்துக்கு விரோதம்.

தேவயானி வீடு செல்ல மனமில்லாமல் வனத்தில் ஒரு மரத்தடியில் துக்கப்பட்டு நின்று கொண்டிருந்தாள்.

கால் வைக்க மாட்டேன்'' என்று தேவயானி அவளைச் சுக்ராசாரியாரிடம் அனுப்பினாள்.

சுக்ராசாரியார் தம் குமாரியின் நிலையை அறிந்து மிகவும் துக்கப்பட்டு அவள் இருந்த இடம் வந்து சேர்ந்தார். அவளை இரண்டு கைகளாலும் தழுவிக் கொண்டு, ''துக்கமும் சந்தோஷமும் வெளி நிகழ்ச்சிகளில் இல்லை. நீ யார் பேரிலும் கோபிக்காதே. பிறருடைய குண தோஷம் நமக்கு ஒரு தீங்கும் இழைக்க முடியாது'' என்று வேதாந்தத்தை எடுத்துச் சொல்லிப் பார்த்தார்.

''தந்தையே! என் குற்றங்களும் குணங்களும் இருந்தவாறு இருக்கலாம். அதற்கு நான் அதிகாரி. 'உன் அப்பன் அரசர்களிடம் ஸ்தோத்திரம் பாடுகிறவன்' என்று விருஷபர்வனுடைய மகள் சர்மிஷ்டை சொன்ன பேச்சு



சுக்ராசாரியாருக்குத் தேவயானி என்றால் உயிரைப் போல அன்பு. வெகு நேரமாகியும் விளையாடப் போன மகள் திரும்பி வராததைக் கண்டு ஒரு ஸ்திரீயை அனுப்பிப் பார்த்து வரச் சொன்னார். தோழிகளுடன் தேவயானி சென்ற இடமெல்லாம் தேடிப் பார்த்துக் கடைசியாக அவள் இருந்த மரத்தண்டை வந்தாள். துக்கமும் கோபமும் மேலிட்டு, கண்கள் சிவந்து துயரத்தில் மூழ்கியிருந்த தேவயானியைப் பார்த்து என்ன நடந்தது என்று கேட்டாள்.

''அம்மணி! விரைவாகப் போய், தகப்பனாரிடம் சொல். விருஷபர்வனுடைய நகரத்துக்குள் இனி நான்

உண்மையா? ஸ்தோத்திரம் பாடி யாசித்துக் கையேந்திப் பிழைப்பவனான ஒருவனுடைய பெண் என்று என்னை அவள் சொன்னாளே, நான் எவ்வளவு பொறுமையாக இருந்தும், சர்மிஷ்டை பல முறை இந்த அகங்காரப் பேச்சைச் சொன்னாள். என்னை அடித்துக் குழியிலும் தள்ளி விட்டுப் போய் விட்டாள். அவளுடைய தகப்பன் அதிகாரம் நடத்தும் ஊரில் நான் வாசம் செய்ய

முடியாது'' என்று தேவயானி கோபமும். துக்கமும் மேலிட்டு அழுதாள்.

சுக்ராசாரியார், ''தேவயானி! ஸ்தோத்திரம் செய்பவனுடைய பெண் அல்ல நீ. யாசித்துப் பிழைப்பவன் அல்லன் உன் தகப்பன். உலகமெல்லாம் துதிக்கும் ஒருவனுடைய பெண் ஆவாய் நீ. தேவேந்திரனுக்கே இது தெரியும். விருஷபர்வனுக்கும் இது தெரியும். யோக்கியவானானவன் தன் குணங்களைப் பற்றித் தானே புகழ்வதில் வருத்தம் அடைகிறான். ஆகையால் என்னைப் பற்றி அதிகம் சொல்ல முடியாது. எழுந்திரு. குலத்துக்குச் சிறப்புக் கொண்டு வரும் பெண் ரத்தினமே! பொறுமையை அடைவாயாக! வீடு செல்வோம் வா'' என்று அவளைத் தேற்றினார்.

இவ்விடத்தில் வியாசர் பகவான் சுக்ராசாரியார் தம் பெண்ணுக்கு நூறு வருஷ காலம் கழித்தவனைக் காட்டிலும் கோபிக்காதவன் மேலான தீக்ஷிதனாவான். கோபிக்கிற சுபாவமுள்ளவனை வேலைக்காரனும், சிநேகிதனும், சகோதரனும், பாரியையும், பெற்ற புத்திரனும் விட்டு விலகிப் போவார்கள். தருமமும், சத்தியமும் எல்லாமே விட்டு விலகிப் போகும். சிறுவர்களும், சிறுமிகளும் பேசிய பேச்சை அறிவுள்ளவர்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள்.''

''பிதாவே! நான் சிறு பெண். ஆயினும் தாங்கள் சொல்லும் தரும சூக்ஷ்மத்தை அறிவேன். எப்படியாயினும் ஒழுக்கமும் மரியாதையும் தவறியவர்களிடம் தாங்கள் வசிப்பது சரியாகாது. குலத்தை நிந்திப்பவர்களுடன் அறிஞர்கள் சகவாசம் செய்ய மாட்டார்கள். ஒழுக்கம் கெட்டவர்கள் எவ்வளவுதான் தனவந்தர்



உபதேசம் செய்வதாக வைத்து உலகத்துக்கு உபதேசிக்கிறார்.

''அயலார் சொல்லும் நிந்தனைச் சொற்களை எவன் பொறுத்துக் கொள்கிறானோ, அவன் உலகத்தை எல்லாம் ஜெயிப்பான். கடிவாளத்தைப் பிடிப்பவன் அல்லன் சாரதி. குதிரையை அடக்குவது போல் கோபத்தை எவன் அடக்குகிறானோ அவன்தான் உண்மையான சாரதியாவான். பாம்பு சட்டையை உரிப்பது போல் வந்த கோபத்தை எவன் நீக்கி விடுகிறானோ, அவன்தான் ஆண்மை படைத்தவன். பிறர் எவ்வளவு வருத்தினாலும் எவன் வருந்தாமல் இருக்கிறானோ அவன்தான் காரிய சித்தி அடைவான். மாதம் தவறாமல் யாகம் செய்து கொண்டு

களாயிருந்தாலும் சண்டாளர்களே யாவார்கள். அவர்களிடம் சாதுக்கள் வசிக்கலாகாது. விருஷபர்வனுடைய மகள் சொன்ன சொல்லால், கடையப்படும் அரணிக் கட்டையைப் போல் என் மனம் தீப்பற்றி எரிகிறது. ஆயுதங்களினால் உண்டாகும் காயம் ஆறும். தீயினால் உண்டான புண்ணும் ஆறும். சொல்லினால் உண்டான புண் தேகம் உள்ளவரையிலும் ஆறாது'' என்று தேவயானி தகப்பனை வணங்கிச் சொன்னாள்.

சுக்ராசாரியார் விருஷபர்வனிடம் போனார். அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.

''அரசனே! செய்யும் பாவம், உடனே பலனைத் தராமல் இருக்கலாம்.

ஆனாலும் முடிவில் குலத்தின் வேரையே அறுத்து விடும். இந்திரியங்களை ஜயித்து ஏதொரு பாவமும் அறியாமல் தருமத்தைக் காத்து என் வீட்டில் அன்புடன் பணிவிடை செய்து பிரமசரியம் நடத்தி வந்த பிரகஸ்பதி குமாரன் கசனை நீ உன் ஆட்களால் முன்பு கொல்வித்தாய்! அதையும் பொறுத்தேன். மானமே பெரிதாக உணர்ந்த என் மகள் தேவயானி உன் மகளிடம் அவமானப் பேச்சைக் கேட்டாள். கிணற்றிலும் தள்ளப்பட்டாள். அவள் இந்நகரத்தில் வசிக்க முடியாதவளா யிருக்கிறாள். அவளில்லாமல் நானும் இங்கே வசிக்க முடியாது. ஆதலால் மகாராஜனே! உன் தேசத்தை விட்டு நான் வெளியேறுவேன். நீ விசனப்பட வேண்டாம்'' என்றார்.

இதைக் கேட்டு அசுர ராஜன் திடுக்கிட்டு, ''தாங்கள் சொன்ன விஷயங்களில் நான் ஒரு பாவமும் அறியாதவன். தாங்கள் என்னை விட்டுப் போனால் நான் அக்கினியில் பிரவேசிக்க வேண்டும்'' என்றான்.

''நீயும் உன் அசுரர்களும் அக்கினியில் விழுந்தாலும் சரி, கடலில் விழுந்து பிராணனை விட்டாலும் சரி, என் மகளுடைய துக்கத்தை நான் தாங்க முடியாது. அவள் எனக்கு உயிரைக் காட்டிலும் பிரியமானவள். அவளை நீ சமாதானப்படுத்தினால் சரி. இல்லா விட்டால் நான் உன்னை விட்டுப் பிரிய வேண்டியது அவசியம்'' என்றார் சுக்ராசாரியார்.

விருஷபர்வன் தன் சுற்றத்தாரைக் கூட்டிக் கொண்டு தேவயானி இருந்த மரத்தடிக்குப் போய் அவள் காலில் விழுந்தான்.

''யாசிப்பவன் மகள் என்று என்னைச் சொன்ன சர்மிஷ்டை எனக்கு வேலைக்காரியாக அமைய வேண்டும். என் பிதா என்னை எந்த இடத்தில் கொடுக்கிறாரோ அங்கே அவளும் என் பின்னே தாசியாகச் செல்ல வேண்டும்'' என்று பிடிவாதமாகச் சொன்னாள் தேவயானி.

சர்மிஷ்டையும் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு டணிந்தாள். ''தோழி தேவயானி எப்படி விரும்புகிறாளோ அப்படியே நடக்கட்டும். என் பிழையினால் என் தகப்பனார் ஆசாரியரை இழக்க வேண்டாம். அவளுக்கு நான் தாசியாகவே இருப்பேன்'' என்று சர்மிஷ்டை ஒப்புக் கொண்டாள். தேவயானி சமாதானமடைந்து தகப்பனாருடன் ஊருக்குள் பிரவேசித்து வீடு சென்றாள்.

பிறகு ஒரு நாள் தேவயானி யயாதியை மறுபடியும் வனத்தில் கண்டாள். ''என் வலது கையைப் பிடித்த நீர் என்னை மனைவியாகக் கொள்ள வேண்டும்'' என்று தேவயானி மறுபடியும் யயாதியைக் கேட்டுக் கொண்டாள். ''க்ஷத்திரியன் பிராமணப் பெண்ணை எவ்வாறு விவாகம் செய்து கொள்ள முடியும்?'' என்று அவன் மறுபடியும் ஆட்சேபிக்க, இருவரும் சுக்ராசாரியாரிடம் சென்று, அவரைக் கேட்டு விவாகத்துக்கு அவருடைய அனுமதியைப் பெற்றார்கள். சிலசமயம் பிரதிலோம விவாகங்களும் நடைபெற்றன என்பதற்கு இது உதாரணம். இது முறையாகும், இது முறையாகாது என்று சாஸ்திரம் சொல்லுமே ஒழிய எந்த விதமான விவாகமும் நடந்து விட்டபின் புறக்கணிக்கப்பட மாட்டாது. இது பழைய தர்ம சாஸ்திரம்.

யயாதியும் தேவயானியும் வெகு நாட்கள் சுகமாகக் காலம் கழித்தார்கள். சர்மிஷ்டை தாசியாகவே இருந்து வந்தாள். ஒருநாள் சர்மிஷ்டை யயாதியைத் தனியாகக் கண்டு தன்னையும் விவாகம் செய்துகொள்ள அவனை மிகவும் வேண்டிக் கொண்டாள். அரசனும் அவளுடைய பேச்சுக்கு இணங்கித் தேவயானிக்குத் தெரியாமல் அவளை இரகசியமாக விவாகம் செய்து கொண்டான்.

தேவயானிக்கு இது தெரிந்தது. கோபத்தினால் நிலை மறந்தாள். தனக்கு யயாதி தந்த வாக்கையும் சத்தியப் பிரதிக்ஞையையும் பொய்யாக்கி விட்டான் என்று அவள் தகப்பனாரிடம் முறையிட்டாள். சுக்ராசாரியார் கோபம் கொண்டு, ''உடனே மூப்பு அடைவாயாக!'' என்று யயாதிக்குச் சாபம் இட்டார்.

நடு யௌவனப் பருவத்தில் இவ்வாறு திடீர் என்று கிழவனாகிவிட்ட யயாதி சுக்ராசாரியாரைப் பலவாறு வேண்டிக் கொண்டான். ''பிழை செய்தவனைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். மகளுடைய உயிரைக் காப்பாற்றியவன் என்று அவரும் மனம் உருகி, ''அரசனே! நீ மூப்பை அடைந்தாய். அதை என்னால் மாற்ற இயலாது. ஆனால் உன் மூப்பை வேறொருவனுடைய சம்மதம் பெற்று நீயே மாற்றிக் கொள்ளலாம். அவனுடைய இளமையை நீ அடைந்து உன் மூப்பை அவனுக்குத் தரலாம்'' என்று சொல்லி, ஆறுதல் தந்து யயாதியை ஆசீர்வதித்து அனுப்பினார்.



(தொடரும்)



ரகசியப் போலீஸ் 115

இந்த மாதிரிப் படங்களுக்குக் கதையும் வேண்டியதில்லை; கருத்தும் வேண்டியதில்லை. கதாநாயகன் எல்லோரையும் அடித்து நொறுக்குவான்; ஆனால் அவனை யாரும் ஒன்றும் செய்ய முடியாது; அடி, உதைகளோடு அவன் காதலையும் சமாளிப்பான்; கடைசியில் சதிகாரர்களைப் பிடித்துச் சட்டத்தின் கைகளில் ஒப்படைத்து விட்டுக் காதலியைக் கல்யாணம் செய்து கொள்வான். இதில் ரகசியம் ஒன்றுமில்லை.

தமிழ்ப் பட ரசிகர்கள் விரும்பும் அத்தனை தோற்றங்களிலும் எம். ஜி. ஆர். தோன்றி அவர்களை எல்லாம் மகிழ்விக்கிறார். சண்டைக் காட்சிகளில் மிகத் திறமையுடன் துரித கதியில் அபார சாதனைகளைக் காட்டி ரசிகர்களின் பாராட்டைப் பெறுகிறார். ஜெயலலிதாவிடம் காதல் பயிற்சி பெறும் கட்டத்தில் எம். ஜி. ஆரின் நடிப்புக்கு ரசிகர்களின் கரகோஷம் அமோகமாகக் கிடைக்கிறது.

எம். ஜி. ஆருடன் ஈடு கொடுத்து நடிக்க நம்பியார் இருப்பது பாராட்டும்படியாயிருக்கிறது.

ஜெயலலிதாவுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் இந்தப் படத்தில். கவர்ச்சி உடைகளில் நடனம் ஆடுகிறார்; கண்ணீர் விடுகிறார்; பொறுமைப்படுகிறார். காதல் காட்சிகளில் எதுவும் பாக்கி வைக்கவில்லை; ஒட்டி, உரசி, கட்டி, ஆடி ஜமாய்க்கிறார். வேறு என்ன வேண்டும்?

வெண்ணிற ஆடை நிர்மலாவுக்குக் கவர்ச்சிக்கென்றே இந்தப் படத்தில் 'சான்ஸ்' தரப்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக அவர் வெறும் கவர்ச்சிக் கன்னியாக மட்டும் வரவில்லை. எம். ஜி. ஆரிடம் தன்னைப் பற்றிய உண்மைகளைக் கூறிக் கண்ணீர் விட்டு மன்னிப்புக் கோரும்போது நன்றாக நடித்திருக்கிறார்.

நாகேஷும், புஷ்ப மாலாவும் சக்கைப் போடு போடுகிறார்கள். தமாஷ் கொஞ்சம் விரஸமாகப் போனாலும் படத்தில் அலுப்பு ஏற்படும் பாகங்களுக்கு இவர்கள் மட்டும் இல்லையென்றால் தனியாகப் பார்த்துச் சமாளிப்பது சிரமந்தான்.

வண்ணப் படமாகத் தயாரித்திருப்பதால் காட்சிகள் கண்ணைக் கவர்கின்றன. பாடல்கள் தொல்லை கொடுத்து மோசம் செய்து விட்டன.

அசோகன் முதலில் வில்லனாக வந்து கடைசியில் நல்லவனாக மாறி விடுகிறார். அவர் நடிப்பு நன்றாயிருக்கிறது.

துப்பறியும் படங்கள் என்றால் ஆங்கிலப் படங்களின் சாயல் படியாமல் இராது. ''ரகசிய போலீஸ் 115'' பல இடங்களில் ஆங்கிலப் படத்தின் உத்திகளையும், காட்சியமைப்புக்களையும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது. காட்சி ஜோடனைகள் சிரமப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

115 குறைகளைச் சொல்லலாம். இருப்பினும் மக்களைக் கவரக்கூடிய அம்சங்களாக 115வரை விரல் விட்டு எண்ணலாம்தான்!

115 நாட்கள் ஓடுமோ?

ஆட்டமும் ஓட்டமும்





காரியதரிசி டி. டி. பார்த்தசாரதி

பி. எஸ். மணி

"ஓய். எம். ஸி. ஏ. காலேஜுக்குப் பழைய மேயர் சம்பந்தம் ஓடுகிறார் !"

"அவரும் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறாரா? போட்டிகளெல்லாம் நேரு ஸ்டேடியத்தில் அல்லவா நடக்கின்றன ?"

"ஓய். எம். ஸி. ஏ. கல்லூரிக்கு ஒலிம்பிக் ஒளி விளக்கை ஏந்திச் செல்கிறார். அங்கிருந்து அந்த ஒளி விளக்கு நேரு ஸ்டேடியத்துக்குப் போகுமாம் !"

"அக்கினி சாட்சியாகக் கல்யாணம் நடத்துவார்கள் ; அக்கினி சாட்சியாக ஐந்து நாட்கள் விளையாட்டுக் கோலாகலம் நடக்கிறதுபோலும் !"

"இன்னோர் அதிசயம் பார்த்தீர்களா ? முதன் மந்திரி அண்ணா பாண்டும் கோட்டும் போட்டுக் கொண்டு நேரு ஸ்டேடியத்துக்கு வந்து விளையாட்டு வீரர்கள் மத்தியில் காட்சியளித்தது கண்கொள்ளாக் காட்சி!"

பல்வேறு மொழிகளைச் சேர்ந்தவர்கள், பல்வேறு ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் நட்புறவுடன் ஈடுபட்டது பாரதத்தின் ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இனிய காட்சி யல்லவா ?

☐ "அதோ, நெடிதுயர்ந்து ஆஜானுபாகுவாகப் போகிறாரே, அவர் யார் தெரியுமா?"

"அவர்தான் நவீன பீமன் பிரவீண் குமார். சென்னையில் தட்டு வீச்சில் 54.22 மீட்டர் தூரம் வீசி யெறிந்து ஒரு புதிய ரிகார்டை ஏற்படுத்தியவர் !"


"ஐயையோ ! அவருக்குப் பக்கத்தில் நிற்பது தங்கப் பதக்கம் பெற்ற லோரட்டா கோமஸ் அல்லவா ?"

"ஏன்? நின்றால் என்ன?"


"நின்றால் என்னவா ? பிரவீண் குமார் மூச்சு விட்டால் போதும். இலவம் பஞ்சு போன்றிருக்கும் அவள், உயரே பறந்து விடுவாள் போலிருக்கிறதே! உயரம் தாண்டலில் ஒரு ரிகார்டு ஏற்படுத்திய அவள் மெக்ஸிகோ போய் இன்னொரு ரிகார்டு ஏற்படுத்தும் வரை பத்திரமாக இருக்கட்டும்!"

பிகானீர் மகாராஜா கார்னிசிங்





ஹார்டில்ஸ் பந்தயத்தில் ஒரு காட்சி.



‘அண்ணா கேம்பி’ல் மல்யுத்த வீரர் முதுகுப் பிடிப்பு பிடித்துத் தம் கட்டிலில் படுத்துக் கிடந்தார். அவரைப் பேட்டி காணப் போன சமயத்தில் அந்தக் கோஷ்டியின் மானேஜர், “மன்னிக்கணும். உங்களை மல்யுத்த வீரர் பார்க்க முடியாது. இடுப்புப் பிடிப்பினால் அவர் அவஸ்தைப்படுகிறார்!” என்றார்.

“நீங்கள் போய்ச் சொல்லுங்கள், பத்திரிகைப் பிரதிநிதி அவரிடம் மல்யுத்தம் போட வரவில்லை, அவரோடு இரண்டு


பெண்கள் ஹர்டில்ஸ் பந்தயத்தில் வீராங்கனைகள்.

மகாராஷ்டிர ஓட்ட வீரர் எட்வர்ட் செக்யூரா.

துப்பாக்கி சுடும் போட்டியில் வீராங்கனை ஸ்ரீமதி தோராம்.







சைக்கிள் போட்டிக்குத் தயார்!

வார்த்தை பேசிவிட்டுப் போகத்தான் வந்திருக்கிறேனென்று!”

பிறகு பத்திரிகைப் பிரதிநிதிக்கு அனுமதி கிட்டியதில் ஆச்சரியமென்ன?

தட்டு வீச்சு வீராங்கனை டேவன்போர்ட்



போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை ‘விக்டரி ஸ்டாண்டி’ல் ஏற்றி நிற்க வைத்து, மூன்று பெண்மணிகள் வெற்றி பெற்றவர்களது ராஜ்யக் கொடிகளைப் பறக்கவிட, மூன்று குமரிகள் கைகளில் தலையணைகளை ஏந்தி அவற்றில் பதக்கங்கள் மினிர நடந்து வந்தார்கள். ஒவ்வொரு தடவையும் ஒரு புதுத் தலைவர் வந்து வெற்றி வீரர்களுக்கு மாறி மாறிப் பதக்கங்களை அணிவித்ததும் பாண்டு வாத்தியம் முழங்கியது; தேசிய ரிகார்டுகளை வெற்றி பெற்றவர்கள் ஏற்படுத்தினால் தேசிய கீதமே ஒலித்தது! அப்படித் தேசிய கீதத்தை ஒலிக்க வைத்தவர்களில் வீராங்கனை டேவன்போர்ட்டும் ஒருத்தி!

“தட்டு வீச்சில் பதக்கம் பெற்றாளே, டேவன்போர்ட் எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவள்?”

“அவள் அப்பா போலீஸ் அதிகாரி! மத்திய சர்க்கார் எந்தெந்த ராஜ்யங்களில் தூக்கிப் போடுகிறார்களோ, அந்தந்த ராஜ்யத்துக்குப் போய் வந்



ஒலிம்பிக் ஒளி



ராஜகுமாரி ராஜஸ்ரீ பரிசு பெறுகிறாள்.

தவள்! இப்பொழுது பஞ்சாப் அவளைப் பெறும் அதிர்ஷ்டம் பெற்றிருக்கிறது! அவள் ஆசிரியை வேலை பார்க்கிறாள் !''

''பஞ்சாப்காரர்களே நிறைய தங்கப் பதக்கங்களை அள்ளிக் குவிக்கிறார்கள். இன்னும் டேவன்போர்ட்டையும் அவர்கள் தங்கள் பக்கம் தட்டிக்கொண்டு விட்டார்களே!''

□ ''ஜூடோ ஜூடோ என்று ஜப்பானியர்கள் பிரமாதப்படுத்துகிறார்களே, அது நம்ம நாட்டிலிருந்து போனதுதான் ! அகத்தியரும் பரசுராமரும் அந்தக் காலத்தில் போட்ட சண்டைகள்தான் 'ஜூடோ' வாகியிருக்கிறது !''

''ஓய்! பழம் பெருமை பேசிப் புதிதாகச் சண்டையைக் கிளப்பிவிடாதேயும்!''

''வேண்டாம் ! புதுப் பெருமை பேசுகிறேன்! போட்டியில் நம்ம தமிழக ஜூடோ வீரர் நரசிம்மன்தான் ஜூடோவில் நரசிம்ம அவதாரம் எடுத்து, தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார்! ஜூடோவுக்கும் நமக்கும் தொடர்பு உண்டு என்று நம்புகிறீர்களா ?''

''ஜூடோ பண்ணுதேயும்!''

□ பல்லாவரத்தில் துப்பாக்கி சுடும் போட்டிகளுக்காக ராணுவத்தினர் பலத்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். மாஜி மன்னர்களுடன் இன்றைய 'இந்நாட்டு மன்னர்கள்' சிலரும் கலந்து கொண்டனர். மேற்கு வங்காளத்திலிருந்து ஒரு குடும்பமே வந்து இந்தப் போட்டிகளில் பங்கு கொண்டது

1. பஞ்சாப் கோஷ்டி மானேஜர். 2. [illegible] டா கோமஸ். 3. ஜூடோவில் வெண்கலப் பதக்கம் பெற்ற தமிழ் மணி.


வக்கீல் சாட்டர்ஜி, துப்பாக்கி சுடும் போட்டி விதிகளைக் குண்டுகளை வீசுவது போல் அள்ளித் தெளித்து எல்லாரையும் அயர வைத்தார் ! இவரது மனைவி சோபிதா சாட்டர்ஜி தேசிய துப்பாக்கி சுடும் வீராங்கனையாகச் சென்ற ஆண்டு வரை திகழ்ந்தவர். இப்பொழுது அவர் 'கோச்' ! இவர்களது புதல்வன் பரிமல் சாட்டர்ஜி தேசிய சாம்பியனாகித் தங்கப் பதக்கம் பெற்றுக் குடும்பப் பெருமையை நிலைநாட்டினான்.

□ பிகானீர் மகாராஜாவின்செல்வப் புதல்வி ராஜஸ்ரீ அநாயாசமாகத் துப்பாக்கி சுடும் போட்டிகளில் ஐந்து பரிசுகளைப் பெற்றாள். களி மண் பறவை சுடும் போட்டியில் அவள் சாமர்த்தியம் துலங்கியது. அவள் வெற்றி பெற்று விட்டாள் என்று தெரிந்ததும் அவள் காரில் உட்கார்ந்து அழத் தொடங்கி விட்டாள் !


''ராஜகுமாரிக்கு ஏற்பட்ட அமோக வெற்றியை இளம் உள்ளம் தாங்க முடியவில்லை. இது சந்தோஷ அழுகை!'' என்று வியாக்கியானம் செய்தார் பிகானீர் மகாராஜா கர்ணிசிங். அவருக்கும் அழுகை வந்து விடும் போல் இருந்தது.

□ ராஜகுமாரி ராஜஸ்ரீ நேரு ஸ்டேடியத்தில் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிக் கோப்பைகளையும் பரிசாகப் பெற வந்திருந்தாள். அப்பொழுது இந்திய ஒலிம்பிக் நிர்வாகி





நிர்வாகிகளுடன் முதன் மந்திரியும், கல்வி மந்திரியும்



வழுக்கைத்தலையர் ராஜகுமாரியின் அருகில் நின்று தமாஷ் பண்ணிக் கொண்டிருந்தார்.

''என் வழுக்கைத் தலைக்குப் பக்கத்தில் உங்கள் அடர்த்திக் கூந்தல் இருக்கும்போதுதான் அதன் பெருமை தெரிகிறது!'' என்றார்.

''ஆமாம்! அவளது நீண்ட கூந்தல் துப்பாக்கி சுடும் போட்டிகளின் போது இடைஞ்சலாகத்தான் இருக்கிறது! அவள் தலைமயிரை 'கட்' பண்ணி அயல்நாட்டுக்கு அனுப்பினால் நிறைய அந்நியச்செலாவணி கிடைக்கும்!'' என்றார் கார்ணி ஸிங் தமாஷாக.

☐ ''இந்தோ, பாருங்கள். தங்கப் பதக்கம் பெற்ற அந்த ஓட்டக்காரரும், அமெச்சூர் ஓட்டப் பந்தயக் காரியதரிசியும் ஓடுகிறார்களே, இது என்ன போட்டி ?''

''பந்தயங்களில் பரிசு பெற்றவர்கள் ஆறு பேர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் கொடுக்கக் குறைகின்றனவாம்! அவர் பெற்ற பதக்கத்தை இரவல் கேட்க ஓடுகிறார்! பரிசு பெற்றவர் ஓடாமல் என்ன செய்வார் ?''

☐ ''மெரினாவில் சைக்கிள் வீரர்கள் ஐம்பது தடவை கொட்டும் மழையில் வலம் வந்து 125 மைல் போட்டியில் கலந்துகொண்டனர்.''

''தமிழ் மகாநாட்டை முன்னிட்டு வைக்கப்பட்ட சிலைகளைச் சைக்கிள் வீரர்கள் வலம் வந்ததைக் கண்டு நாம் ஆனந்த மடையலாம்! 'சிலைகளை மெரினாவில் வைப்பானேன்?' என்று இனி யாரும் கேட்க மாட்டார்களல்லவா?''

☐ ஆட்டமும் ஓட்டமும் ஐந்து நாளில் முடிந்து விட்டன. இந்த ஆட்ட ஓட்டத்துக்காக நீண்ட நாட்கள் அல்லும் பகலும் ஓடி ஓடிப் பாடுபட்ட தலைவர் திரு ராஜரத்தினமும், காரியதரிசி டி. டி. பார்த்தசாரதியும், அவரது சகாக்களும் பாராட்டுக்குரியவர்கள்.

1. (மேலே) ஆட்ட நடுவர். 2. பிரவீண் குமார். 3. ராஜஸ்ரீயுடன் ஒலிம்பிக் நிர்வாகி. 4. துப்பாக்கி சுடும் போட்டியில் வென்ற சிறுவர். 5. ஜூடோவில் தங்கப் பதக்கம் பெற்ற நரசிம்மன். கார்ட்டூன் சித்திரங்கள் : சாமா.











உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குக்கு வந்திருந்த பல மேநாட்டுப் பிரதிநிதிகளில் மூன்று தாடிக்காரர்கள் என் கவனத்தைக் கவர்ந்தார்கள். ஒருவருக்குச் செந்தாடி. மற்றவருக்குக் கரும் குறுந்தாடி. மூன்றுமவருக்கு வெண் குறுந்தாடி. ஒரு நபர் இசையில் லயிப்பவர். இன்னொரு நபர் மொழியில் இலயிப்பவர். கடைசி ஆசாமியோ 'சும்மா இருத்தலி'லேயே லயித்துக் கிடப்பவர்.



தமிழ் வலம் வந்த தூதுவர்கள்

டாக்டர் அலெக்ஸாண்டர் பாஸானி

இத்தாலி நாட்டைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் பாஸானிதான் கறுப்புக் குறுந்தாடிக்கு உடைமையாளர். கீழ்த் திசைப் பிரிவுகளுக்கான நேப்பிள்ஸ் நகர சர்வகலாசாலையில் பெர்சிய, மற்றும் கீழ்த்திசை மொழிகள் பற்றிய துறையின் தலைவராகப் பணியாற்றுகிறார். தமிழ் நாடு இவருக்குப் புதியது. முதல் தடவையாக இப்போதுதான் வந்திருக்கிறார்.

பெர்சிய மொழியில் இவர் ஒரு பேரறிஞர். இஸ்லாமியக் கலாசாரம் எவ்வளவு தூரம் இத்தாலியக் கலாசாரத்தில், ஊடுருவி நிற்கிறது என்பது பற்றி ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்.

உருது, ஹிந்தி, பஞ்சாபி, சிந்தி, சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பேசும் திறமை இவருக்கு உண்டு. தமிழை முதலில் பேசக் கற்றுக் கொள்ளவும் இவருக்கு ஆசை இருக்கிறது. வசதிக்காகக் காத்திருக்கிறார். இஸ்லாமியக் கலாசாரத்தைப் பற்றி அடிக்கடி கீழ்த்திசை நாடுகளில் போய்ப் பிரசங்கம் செய்கிறார். சமீபத்தில் கோலாலம்பூர், இலங்கை முதலிய இடங்களுக்குப் போய் வந்திருக்கிறார்.

'தமிழ் மொழியில் நுழைந்திருக்கும் பெர்சிய மொழிச் சொற்கள்' என்பது பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையைத்தான் இவர் இந்த இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்குக்குச் சமர்ப்பித்திருந்தார். அந்தக் கட்டுரையைப் பார்க்கும் போது நம் தினசரிப் பேச்சு வழக்கில் எத்தனை பெர்சியச் சொற்களைக் கலக்கிறோம் என்று தெரிய வருகிறது. குமாஸ்தா, குஸ்தி, பந்தோபஸ்து, ரசீது, தம்பூர், திவான் போன்ற எத்தனையோ வார்த்தைகள் பெர்சியாவிலிருந்து தமிழ் நாட்டுக்குக் குடி பெயர்ந்து வந்திருக்கின்றன. சில வார்த்தைகள் ஹிந்தி நிழலை அண்டி நிற்கின்றன. சில வார்த்தைகள் தமிழர்கள் மூலமாக மலாய் நாட்டுக்குள் மாற்றுருவங்களில் புகுந்திருக்கின்றன.

டாக்டர் பாஸானி ஒரு குஷியான மனிதர். அடிக்கடி நாங்கள் சாப்பாட்டுக் கூடத்தில் சந்தித்துக் கொள்வோம். ''இன்று சாப்பாடு எப்படி?'' என்பேன். ''ஹெவி'' என்பார். மறு நாள், ''டூ ஹெவி'' என்பார். நடுவிலே தென்னிந்திய பாணியில் இலை போட்டுச் சாப்பிடக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை வெகுவாக ரசித்தார். ஆனால் ''வெரி, ஹெவி'' என்று சொல்லத் தவறவில்லை.

பாஸானி தம் மனைவியையும் கூட அழைத்து வந்திருந்தார். அடிக்கடி, ''அவளிடம் ஏதும் கேட்டு வைக்காதீர்கள்! அவள் எனக்குத் துணையாக வந்தவள்'' என்று அவர் குறும்பாகச் சொல்வதும் அந்த அம்மையார், அசல் தமிழ்ப் பந்தாவில் நாணத்துடன் தலை குனிந்து கொள்வதும் ரசிக்கக்கூடிய காட்சிகளாக இருந்தன.

சுவாமி கௌரிபாலா

சட்டையே போடாமல் வெண்ணிற மேலாடையை மாத்திரம் போர்த்திக் கொண்டு, அதில் அடையாளச் சீட்டையும்

மாட்டிக் கொள்ளாமல், தென்னுட்டவரைப் போலவே வந்து போய்க் கொண்டிருந்த அந்த வெண் குறுந்தாடி நபரை என்னால் சட்டென்று இனம் கண்டுபிடிக்க இயலவில்லை.

பல தடவைகளில் அவரை நழுவ விட்டு விட்டுக் கடைசியாகக் 'கவிச் சக்கரவர்த்தி கம்பர்' நாடகத்தின் இடையே அவர் எழுந்து போவதைக் கவனித்துப் பின் தொடர்ந்தேன்.

''தாங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்றேன், அவர் வழியை மறித்தவாறு.


அவர் பதில் சொல்லவில்லை. இடது கையை என் முன் நீட்டினுர். அதில் முழங் கைக்கும் மணிக்கட்டுக்குமிடையே சில எழுத்துக்கள் பச்சை குத்தப்பட்டிருந்தன. தமிழ் எழுத்துக்கள்.

அந்த எழுத்துக்கள் அவர் பெயரைக் குறிப்பனவாக இல்லை. அதற்குப் பதிலாகச் 'சும்மா இரு' என்ற வாசகத்தைக் குறித்தன.

கேள்வியை மாற்றினேன். ''உங்கள் பெயர் ?'' என்றேன்.

மீண்டும் கை மடங்கி நீண்டது.

''அழகான வாசகம் ! ஆனுல் அதை இப்போது கடைப்பிடிக்க முடியாததற்கு மன்



னிக்கவும். ஏதாவது ஆதீனத்தின் பிரதிநிதியாக வந்திருக்கிறீர்களா ?''

''மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவன். அந்த அரசாங்கத்தின் சார்பில் வந்தவன் என்றுகூடக் கொள்ளலாம். தற்சமயம் இலங்கையில் இருக்கிறேன். அவ்வளவுதான்! ஆளை விடுகிறீர்களா?'' என்ருர் தூய ஆங்கிலத்தில்.

''உங்கள் பெயரைச் சொல்லவே இல்லையே ?''

''ஜெர்மன் சாமியார் என்று கூப்பிடுகிருர்கள். ஆனுல் நான் வைத்துக் கொண்டிருக்கும் பெயர் கௌரி பாலா! சுவாமி கௌரி பாலா !''

''விழுக்கத்தியப் பெயராக இருக்கிறதே!''

''ஏன் இருக்கக் கூடாது?''

''தமிழ் இலக்கியத்தில் உங்களுக்குப் பிடித்த துறை எது ?''

அவ்வளவுதான்! கந்தர் அநுபூதியைக் கடல்மடை திறந்தாற்போலப் பாட ஆரம்பித்தார். பிறகு திருமந்திரத்தை ஆரம்பித்தார். நான் பிரமித்தேன். வெகு ஸ்பஷ்டமான உச்சரிப்பு. ''போதுமா?'' என்ருர், தமிழில்.

''தாங்கள் ஏதாவது நூல் இயற்றியிருக்கிறீர்களா? அல்லது தமிழிலிருந்து உங்கள் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறீர்களா ?''

'''சும்மா இருக்க சூத்திரம்', என்ற நூலைத் தமிழிலேயே எழுதியிருக்கிறேன்.



முதல் பதிப்பு தீர்ந்து போய்விட்டது. ஆங்கில விளக்கத்துடன் இரண்டாம் பதிப்பைத் தயார் செய்து கொண்டிருக்கிறேன்.''

''நீங்கள் ஏன் சட்டை போடுவதில்லை?''

''நீங்கள் எல்லாம் ஏன் சட்டை போடுகிறீர்கள் என்று நான் கேட்கிறேன் !''

''என்னுடன் வந்த புகைப்படக்காரர் வீட்டுக்குப் போய் விட்டார். உங்கள் புகைப்படம் ஏதாவது கைவசம் வைத்திருக்கிறீர்களா ?''

''என்னுடைய பிரசார இலாக்காவுக்கு நானே மந்திரி. இந்தாருங்கள் படம்'' என்று சொல்லிக் கொண்டே கைப்பையிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துக் கொடுத்தார்.

'''சும்மா இரு' என்ற உங்கள் தத்துவத்தை நான் கடைப்பிடித்திருந்தால் இத்தனை விஷ

யங்கள் உங்களைப் பற்றித் தெரிந்து கொண் டிருக்க முடியுமா ?'' என்று நினைத்தபடியே விடைபெற்றேன்.

பேராசிரியர் வில்லியம் ஸ்கெல்டன்

ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஸ்கெல்டனுக்குச் செவப்பு நிறம் கலந்த தாடி. நியூயார்க் நகரப் பகுதியில் உள்ள கால்கேட் சர்வகலாசாலையில் இவர் இசைத் துறைத் தலைவர்.

அவர் பேசிக் கொண்டே வந்தபோது அவருடைய சர்வகலாசாலையின் பெயரைத் தயக்கத்துடன் எழுத ஆரம்பித்தேன். ஒரு வேளை அவர் உச்சரிப்பு என் செவிகளில் சரியாக விழவில்லையோ என்ற சந்தேகம்.

''கரெக்ட். கால்கேட்தான். எங்கள் சர்வ கலாசாலையின் பெயருக்குத்தான் உலகி லேயே அதிக விளம்பரம் கிடைக்கிறது. அவர்கள் பற்கள் பிரகாசிக்க விளம்பரம் செய்கிறார்கள். நாங்கள் பல கலைகள் பிர காசிக்கப் பாடுபடுகிறோம்'' என்று நயமான ஒரு விளக்கத்தைக் கொடுத்துவிட்டு மேலே தொடர்ந்தார்.

அமெரிக்க நாட்டுக்கு விஜயம் செய்யும் எல்லாக் கலைஞர்களுக்கும் நுழை வாயில் நியூயார்க் நகரம். இவருடைய சர்வகலா சாலையோ அங்கேயே இருக்கிறது! ஆகை யால் வரும் இசைக் கலைஞர்களையெல்லாம் அன்புடனும் ஆதரவுடனும் அழைத்துப் போய்ச் சர்வகலாசாலை மண்டபத்தில் கச்சேரி களுக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் பிரதான ரசிகராக உட்கார்ந்து விடுவாராம்.

''1966ம் ஆண்டில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் அமெரிக்காவுக்குப் போயிருந்த போது அவருடைய குரலை முதன் முதலில் நேரடியாக, அமெரிக்க ரசிகர் களுக்கு அறிமுகப்படுத்திய பெருமை எங்கள் சர்வகலாசாலைக்கே சேரும்'' என்று ஸ்கெல்டன் பெருமிதம் அடைகிறார்.

மேலை நாட்டு இசையில் நல்ல பயிற்சியுள்ள ஸ்கெல்டன் இந்திய இசையையும் கற்றுக் கொண்டு வருகிறார். குறிப்பாகக் கர்நாடக இசை இவரைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அதில் அதிக ஈடுபாடும் இவருக்கு உண்டு. தமிழ் மாநாடு முடிந்தவுடன் திருவையாறு, தியாகப் பிரம்ம உற்சவத்துக்குப் போய்விட் டார்! இதற்கு முன்னாலும் சில சந்தர்ப்பங் களில் திருவையாற்றுக்குப் போயிருக்கிறார். 'பாகவத பக்த கோடிகள் எல்லாரும் சேர்ந்து பாடும் பஞ்சரத்தினக் கீர்த்தனை களில் எழும் அந்த நாத இன்பத்துக்கு இணை யான ஒலி இன்பத்தை, நான் இனிமேல் தான் எங்காவது கேட்க வேண்டும். இது வரை கேட்டதில்லை' என்று அழுத்தமாகக் கூறும் ஸ்கெல்டன், இப்போது வீணை கற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

'கர்நாடக இசையை நன்கு புரிந்து கொள்ள, முதலாவது சூழ்நிலை, இரண் டாவது வீணை — இவை மிக்க அவசியம். முதல் காரணத்துக்காக நான் அடிக்கடி பாரதம் வருகிறேன். இரண்டாவதை நான் அமெரிக்காவிலேயே பயில்கிறேன்' என்று கூறிய இவர், சமீபத்தில் நடந்து முடிந்த பல சங்கீத சீசன் கச்சேரிகளில் அமர்ந்து பயன் அடைந்திருக்கிறார்.

'ஏதாவது கர்நாடக இசையை மெது வாக இழுத்துக் காண்பியுங்களேன்' என்று நான் வேண்டி முடிக்குமுன் அவருடைய நண்பர் ஒருவர் திடீரென்று வந்து திரு ஸ்கெல்டனையே இழுத்துக் கொண்டு போய் விட்டார்.

-மேனா.

ஐந்து சரக்குகள்



சைத்தான் தெரு வழியே ஐந்து கழுதைகளை ஓட்டிக் கொண்டு போவதை இயேசு நாதர் பார்த்த போது, கழுதைகளைப் பற்றி இயேசு விடம் அவன் கூறினான்:

''ஐந்து வகையான சரக்கு களை இந்த ஐந்து கழுதை களும் சுமந்துகொண் டிருக் கின்றன. அவைகளை விற்கப் போய்க் கொண்டிருக்கி றேன்.''

''என்னென்ன சரக்கு கள்?'' என்றார் இயேசுநாதர்.

''முதல் கழுதை கொடுமை என்ற சரக்கைச் சுமக்கிறது'' என்றான் சைத் தான்.

''அதை யார் வாங்கு வார்கள்?''—இயேசு.

''அரசர்கள்'' என்றான் அவன்.

''இரண்டாவது?'' என் றார் இயேசு.

''அக்கழுதை சுமப்பது கர்வம் என்ற சரக்கு!'' என்றான்.

''அதை யார் வாங்கு வார்கள்?''

''பணக்காரப் பிரபுக்கள். அடுத்தது பொறாமை என்ற சரக்கு. அதைப் படிப் பாளிகள் வாங்குவார்கள்.''

''நான்காவது?''

''மோசடி என்ற சரக்கு. வாங்குபவர்கள் வியாபா ரிகள். ஐந்தாவது கழுதை யின்பேரில் தந்திரம் என்ற சரக்கு. பெண்கள் விரும்பி வாங்குவார்கள்'' என்றான் சைத்தான்.

ஆர். சலாமுல்லா

அன்று கண்ட முகம்



எதிர்காலமே இருண்டுவிட்ட ஓர் ஆயுள் கைதியுடன் தன் வாழ்வைப் பிணைத்துக் கொள்ளத் துடிக்கிறாள் காஞ்சனா. அவனும் அவளையே நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறான். காரணம் அன்று கண்ட முகம்தான். 'என்று கண்ட முகம்?' என்று ஞாபக சக்திக்குச் சோதனை வைக்கும் இந்தப் படத்தில், அசோகன் நன்றாக நடித்தும் தாம் ஏற்ற பாத்திரத்துக்கு உயிர் கொடுக்க முடியவில்லை.

படம் முழுவதும் சண்டைக் காட்சிகளுக்கும், காதல் காட்சிகளுக்கும் நிறைய இடம் கொடுத்திருப்பதால் ரவிச்சந்திரனுக்கும், ஜெயலலிதாவுக்கும் நிறைய 'சான்ஸ்' இருப்பதில் வியப்பில்லை !

ரவிச்சந்திரன் சண்டைக் காட்சிகளிலெல்லாம் ஜமாய்த்திருக்கிறார். ஜெயலலிதா உள்ளும் புறமும் தெரியும் உடையணிந்து 'ஷேக்', 'ஜெர்க்' நடனங்களாடி வெறியூட்டுகிறார்.

நாகேஷ், மனோரமா இருவரும் நிறைய நகைச்சுவை விருந்து அளிக்கின்றனர். வி. கே. ராமசாமியோ அவர்களுக்குப் பக்கபலமாக நிற்கிறார்.

திரைக்கதை தானாகவே முடிந்து விடுவதற்குப் பல தடவைகள் முயன்றும் தயாரிப்பாளர்கள் விடவில்லை ! கதையை எப்படியெல்லாமோ இழுத்துக் கொண்டு போய் இடையில் என்னத்தையெல்லாமோ சேர்த்து இயன்றவரையில் குழப்பியிருக்கிறார்கள் !

படத்தில் வரும் வில்லனைவிடப் பாடல்கள்தான் கொடூரமாயிருக்கின்றன! அசோகனுக்குப் பிறகு சுந்தரராஜன் ஒரு வில்லன்.

ரயில் ஓடுகிறது ; கார்கள் படுவேகமாக ஒன்றையொன்று துரத்திக் கொண்டு ஓடுகின்றன; மோட்டார் சைக்கிள் ஓடுகிறது; கதாநாயகன் ஓடுகிறான்; கதாநாயகி ஓடுகிறாள். ஆகவே, படம் ஓடவில்லையென்று குறைப்படுவதற்கு இடமேயில்லை !



அன்பு வழி!

எடுத்த எடுப்பிலேயே ஒரு கொலை !

கதைக் கொலை, நடிப்புக் கொலை, பண்புக் கொலை, தமிழ்க் கொலை என்று எத்தனையோ கொலைகள் பின் தொடருகின்றன.

கதாநாயகனைச் சிறுவனாகச் சந்திக்கிறோம். அப்போது பிடில் வாசிக்கத்தான் கற்றுக் கொள்ளுகிறான்; சண்டை போட அல்ல. வில்லனும் பொறுமையாகக் காத்திருக்கிறான் அவன் பெரியவனாகும் வரை; பிறகுதான் சண்டைக்குப் போகிறான், கதாநாயகனுடன்.

கர்நாடக சங்கீத வித்துவானிடம் பாண்ட் போட்டுக் கொண்டு வயலின் கற்றுக் கொள்ளும் கதாநாயகன் ரவியாக வரும் ஜயசங்கர் முழக்குவது வயலினைக் கையில் பிடித்துக் கொண்டு டப்பா சங்கீதம்தான்! கதாநாயகன் ரவி கதாநாயகி கல்பனாவைச் சந்திக்கும் கட்டம் காய்கறி மார்க்கெட்! அங்கே கதாநாயகன் தீரத்தைக் காட்டக் காய்கறிகளோடும் மனிதர்களுடனும் மோதினால் புதுமைதானே? பிறகு அழகுப் போட்டியில் கல்பனாவாக வரும் விஜயலட்சுமியைக் கேலி செய்யும் கதா




நாயகன் ஜயசங்கர், அவளது அவலட்சண ஆட்டத்துக்கெல்லாம் பக்க வாத்தியம் (பிடில்) வாசிக்கிறான். படத்தை முடியவிடலாமா? ஆகவே, அவர்களுக்குள் ஊடலை வளர்த்து, வில்லனைப் புகுத்தி, கதாநாயகியின் தகப்பனாரைக் கொன்று, ஜயசங்கரோடு அடிதடி சண்டைகள் போட்ட பிறகு, ஒரு மட்டும் வில்லன் போலீஸில் பிடிபடுகிறான் ! இதற்குள் யாரை வேணுமானாலும் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போகட்டும், படத்தை முடித்து நம்மைப் போக விட்டால் சரிதான் என்ற நிலைக்கு நாம் வந்து விடுகிறோம்.

'கல்லானாலும் கணவன், மாவரைச்சானாலும் கணவன்' என்பது, வில்லனின் புதல்வனாக பிறந்த 'லண்டன் ரிடர்ன்' நாகேஷின் அயல்நாட்டுக் காதலி உதிர்க்கும் தமிழ்ப் புது மொழி! அயல் நாட்டுக் காதலி மாதவி நாகேஷைவிட நல்ல தமிழில் பேசுகிறாள்! உலகத் தமிழ் விழா நடந்ததன் விசேஷமோ?

இந்தப் படத்தின் மலையாளிச் சமையல்காரனாகச் சிறிது நேரமே தலை காட்டும் விசுவநாதன் கவனத்தைக் கவருகிறார். 'அன்பு வழி' எத்தனையோ படங்கள் போன பழைய வழியேதான் !

கேசம் உதிருகிறதே என்ற கவலையா?



இன்றே ஸில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்கி உங்கள் கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்

இந்த அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்.
கேச உதிர்வு. உச்சந்தலையிலே தினவு. நார்போல் வரண்ட உரோமம். உங்கள் கேசத்திற்கு உகந்த ஊட்டமில்லை என்பதற்கான அறிகுறிகள் இவை. ஊட்டமின்மைதான் இளமையிலேயே வழுக்கை விழக் காரணமாகிறது. அந்த ஊட்டமின்மைக்கு உரிய நிவாரணம் ஸில்விக்ரின்–கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

ஸில்விக்ரின் எப்படி வேலை செய்கிறது.
18 அமினோ-அமிலங்களை உங்கள் கேசத்திற்கு உணவாக அளிக்கிறது இயற்கை. இந்த அமினோ—அமிலங்கள் எல்லாமே அடர்வாக ஒன்று செறிந்த வடிவில் கிடைக்கச் செய்வது ஸில்விக்ரின் ஒன்றே. அது வேகமுடன் மயிர்க்கால்களை ஊடுருவி, ஊட்டமளித்து உரமேற்றி, பாங்கான கேச வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

உபயோக விதிமுறைகள்:
உங்கள் உச்சந்தலைமீது அன்றாடம் இரு நிமிட நேரம் ப்யூர் ஸில்விக்ரின் தேய்த்திடுங்கள். கேச நிலை அபிவிருத்தி அடையும் வரை உபயோகியுங்கள் ப்யூர் ஸில்விக்ரின். கேச நலம் மீண்டு விட்டதென்றால் அதன் பின் கேச நலனைக் காத்துக் கொள்ளத் துணை புரிவது ஸில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்-ப்யூர் ஸில்விக்ரின் அடங்கிய, எண்ணெய் அடிப்படை கொண்ட லோஷன்.

ஆல் அபௌட் ஹேர் (All About Hair) என்ற புத்தகத்தின் இலவசப் பிரதியைப் பெற, எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் K-1, தபால் பெட்டி 727, பம்பாய்-1.



ஸில்விக்ரின் தயாரிப்புகள்—ஆடவர், பெண்டிர் யாவரும் உபயோகிக்கத் தக்கவை.

ஸில்விக்ரின்

கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

LPE-Aiyars S. I TAM



மரக்கறி உணவே மேலானது!

படம்: துவரைச் செடியிலிருந்து பறித்த காய்களை திரு ஜி.டி. நாயுடு (இடது புறம்) பார்வையிடுகிறார்.

★

சென்ற இதழில் புலால் உணவின் சிறப்பியல்புகளை டாக்டர் ஓ. தேவராஜன் அவர்கள் விளக்கினார். அது பற்றிக் கோவை தொழில்-விஞ்ஞான அறிஞர் திரு ஜி. டி. நாயுடு அவர்களைப் பேட்டி கண்டபோது அவர் கூறிய கருத்துக்கள்:

''மேலை நாட்டு மருத்துவமுறை பயின்றவர்கள் சிலர் புலால் உணவில் அடங்கியுள்ள சத்துக்கள் பற்றிப் புள்ளி விவரங்கள் கொடுத்து விடுவார்கள். அந்தப் புள்ளி விவரங்கள் சரியாக இருக்கலாம். ஆனால் மரக்கறி உணவுக்குச் சாதகமாகவும் இவ்விதம் சில புள்ளி விவரங்கள் தர முடியும். உதாரணமாக, புற்றுநோய்க்கு இலக்கானவர்களைப் பாருங்கள்! புலால் உண்பவர்களில் முப்பது சதவிகிதம் இந்த நோய்க்கு இலக்காகி வருகின்றனர் என்றால், மரக்கறி உண்பவர்களில் ஐந்து சதவிகிதமே இதனால் பீடிக்கப்படுகின்றனர். நோய் கண்டபின் சிகிச்சை செய்வதைவிட, நோய் வராமலே தடுப்பது சிறந்ததல்லவா? புலால் மறுப்பவர்கள் இந்த வருமுன் காக்கும் சிரிய வழியைக் கடைப்பிடிப்பவர்கள். சுத்த சைவ உணவு புசிப்பவர்களுக்கு நோய் வராமல் தடுக்கும் சக்தி இயல்பாகவே உள்ளது.''

''புலாலில் உள்ள புரதச் சத்துக்கள் தரத்தில் உயர்ந்தவை என்று கூறுகிறார்களே, அது பற்றித் தங்கள் கருத்து என்ன?'' என்று கேட்டேன்.

''பருப்பு வகைகளில் உள்ள புரதச் சத்துக்கள் அப்படி யொன்றும் தரக் குறைவானவை அன்று. உடல் எந்த அளவு கிரகித்துக் கொள்ளுமோ அந்த அளவு சத்துக்களை அளித்தால் போதும். மும்மடங்கு உணவைத் திணிக்க வேண்டிய அவசியமில்லை. என் விஷயத்தையே எடுத்துக் கொள்வோம். இருபது முப்பது வருடங்களுக்கு முன் நான் முப்பது இட்டிலிகள் சாப்பிடுவேன். இன்று ஒரே ஒரு இட்டிலி தான் சாப்பிடுகிறேன். சாதமாக இருந்தால் ஒரு இட்டிலி அளவுள்ள சாதமே சாப்பிடுகிறேன். என் உடல் அப்படியொன்றும் வலுவிழந்துபோய் விடவில்லையே!'' என்றார் திரு ஜி. டி. நாயுடு.

சைவ உணவு மட்டும் புசிப்பவர்கள் அளவில் அதிகமான உணவை உண்பதற்கு இன்னொரு காரணமும் கூறுகிறார், திரு ஜி.டி. நாயுடு. ''மரக்கறி உணவில் ருசி அதிகம். எனவே, சிலர் அளவுக்கு மீறி உண்ணுகின்றனர். ஜீரண உறுப்புக்கள் விரைவில் நலிவதற்கு இதுவே காரணமாகும். அளவோடு உண்டால் உடல் நலம் கெடாது. மிகக் குறைவாக உண்பவர்கள் பலர் நல்ல உடற் கட்டுடனும் ஆரோக்கியத்துடனும் விளங்குகின்றனர்.''

''புலால் உண்ணும் மேலை நாட்டினர்தான் அரிய விஞ்ஞான சாதனைகளைப் புரிந்துள்ளனர். எனவே, மூளை வளர்ச்சிக்குப் புலால் தான் சிறந்தது என்ற கூற்றுக்கு ஆதாரம் உண்டா?'' என்றேன்.

திரு நாயுடு சிரித்துக் கொண்டே கூறினார்: ''ஆதிகாலம் தொட்டே நாம் நாகரிகத்தில் சிறந்து விளங்கி வந்தோம். நாட்டில் வளம் கொழித்தது. பாரதம் விவசாயத் துறையில் சிறந்து விளங்கியதால் இங்கு உணவுப் பஞ்சம், பற்றாக்குறை எதுவும் இருக்கவில்லை. எனவே, மக்கள் உழைப்பில் கவனம் செலுத்தவில்லை. காப்பியங்கள் எழுதுவதிலும், பிரும்மாண்டமான கோயில்கள் கட்டுவதிலும் ஆடல் – பாடல் முதலிய கலைகளை வளர்ப்பதிலும் நம் முன்னோர் கவனம் செலுத்தி வந்தனர். சிற்பம், சித்திரம் முதலிய கலைகளிலும் இலக்கியத்திலும் நாம் இணையற்று விளங்கினோம். மேலை நாடுகளில் இத்தகைய வளம் இருக்கவில்லை. எனவே, அவர்கள் இடைவிடாது உழைத்து, பல புதிய சாதனங்களைத் தோற்றுவித்து அதன் மூலம் பொருளீட்ட வேண்டிய நிலையில் இருந்தனர். சிற்பமும், சித்திரமும் சாப்பாட்டுக்கு ஆகுமா? ஆகவே, அவர்கள் ரயில், ஆகாய விமானம் முதலிய கண்டுபிடிப்புச் சாதனைகளை நிகழ்த்தினர். பெரும்பாலும்

மரக்கறி உணவையே புசித்து வந்த நமது முன்னோர்கள், புலால் உண்ணும் மேலை நாட்டவர்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்லர். புலால் உண்பவர்களைவிட, உண்ணாதவர்களே அதிக புத்திசாலிகளாக இருந்தனர், இருக்கின்றனர். ஆனால் கண்டுபிடிப்புக்கள் தேவையைப் பொறுத்தவையாகும். மேலை நாட்டவர்கள் கண்டுபிடித்த சாதனங்கள் அப்போது நமக்குத் தேவைப்படவில்லை. எனவே, அத்துறையில் நமது கவனம் செல்லவில்லை. அதோடு, இருநூற்றாண்டுகள் நாம் அன்னியரின் ஆட்சியில் முடங்கிக் கிடந்தோம் என்பதையும் நினைவுகூர வேண்டும்'' என்று விளக்கினார்.

''பால் கூட மாமிச வகையைச் சேர்ந்தது தான். அது தாவர உணவு அல்ல என்ற கூற்று சரியா?'' என்று கேட்டேன்.

''பால் தாவர உணவு அல்ல என்றாலும் அது புலால் வகையைச் சேர்ந்ததும் அல்ல. தாவரங்களை மட்டுமே உண்ணும் ஆடுமாடுகளின் பால்தான் நமக்கு உணவாகிறது. மேலும் பாலைக் கறக்கும் போது நாம் எந்த உயிரையும் கொல்லுவதில்லை. எனவே, சைவ உணவுக்காரர்கள் பால் அருந்துவதில் எவ்விதத் தவறுமில்லை'' என வலியுறுத்திக் கூறியவர், ''பாலை எப்படிச் சாப்பிட்டாலும் நல்லதுதான். பச்சையாகவும் சாப்பிடலாம்; காய்ச்சியும் சாப்பிடலாம். தயிராக்கியும் உட்கொள்ளலாம். ஆனால் பாலிலிருந்து வெண்ணெய் கடைந்து எடுத்து உட்கொள்வது நல்லதன்று. நெய்யும் வெண்ணெயைப் போலவே. இதயத்துக்குக் கெடுதல் செய்யும்'' என்று எச்சரித்தார்.

திரு ஜி. டி. நாயுடு ஒரு சித்த வைத்தியரும் கூட. ஜெர்மனி அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. சித்த மருத்துவத்தில் விரிவாக ஆராய்ச்சிகள் செய்துள்ளார். கோவையில் ஒரு சித்த மருத்துவசாலை நிர்மாணித்து அதில் தாமே தயாரித்த சித்த மருந்துகளை இலவசமாக நோயாளிகளுக்கு வழங்கி வருகிறார். புகைப்படக் கலையிலும் அவர் ஒரு நிபுணர். தாவர ஆராய்ச்சிகள்பல செய்து வியக்கத்தகு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இத்தகைய சகல கலா வல்லவர் தாவர உணவைத் தவிர வேறு எதையும் தீண்டியவரல்லர். ''ஜெர்மனி முதலிய மேலை நாடுகளுக்கு நான் விஜயம் செய்த சந்தர்ப்பங்களில் எல்லாம் எனக்கு நல்ல சைவ உணவு அங்கு கிடைத்தது. இட்டிலி தயாரிக்கும் முறையைக்கூட ஜெர்மானியருக்கு நான் கற்றுக் கொடுத்திருக்கிறேன். அவர்கள் நமது இட்டிலியைப் பெரிதும் விரும்புகின்றனர்!'' என்றார் திரு ஜி. டி. நாயுடு.

பேட்டி கண்டவர்: ''**பாணன்**''



''உனக்கு வேண்டிய வரம் கேள்!''

''நடிகைக்கு நாயகனாக இருந்து இந்தக் கோலம் பூண்டேன்! அடுத்த பிறவியில் நடிகை வீட்டு நாயாகப் பிறக்க வேண்டும்!''



''சாந்தா! நீ உன் ஆசை தீரப் பேசு; பேசிகிட்டே இரு! நான் தடுக்கல்லே. ஆனால் நீ, பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் நான் 'உம்' கொட்டணும்னு மட்டும் எதிர்பார்க்காதே! வேண்டுமானால் குர்ர்ர்ர் விடுகிறேன்.''



''என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க. கேள்வி-பதில் பகுதிக்கு ஆசிரியர் உத்தியோகம் தருகிறேன். 'சோம்பலைப் போக்க என்ன செய்ய வேண்டும்?' ''

''சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்!''

''சுறுசுறுப்பாக இருக்க என்ன செய்ய வேண்டும்?''

''சோம்பலைப் போக்க வேண்டும்!''

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்.
ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



DC, G, 35 TAM

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல் துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை : 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைன்ட் என்றால் என்ன ? புதியதொரு விசேஷமான செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருளை மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கியிருப்பதைத்தான் மைக்ரோஃபைன்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் இந்த வலிநிவாரணப் பொருள்களின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்பைவிட இருமடங்கிற்கும் அதிகமான வலிநிவாரணச் சக்தி, மும்மடங்கு வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.


வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.

உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலந்தோ, ஒரு டம்ப்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள் : நோவு • தலைவலி • உடல்வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய தலைநோவும் • ப்ளு • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய

மைக்ரோஃபைன்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

நிகோலஸ் தயாரிப்பு

விளையாட்டில் வீராங்கனை



'மும்முடி சூடிய மங்கை

சென்னையில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் வருண பகவானும் புகுந்து விளையாடி அனைவரையும் அயர வைத்து விட்டான். "வருண பகவான் புகுந்து விடாதபடி ஏதாவது விளையாட்டு இருக்கிறதா?" என்று கேட்டால் "ஓ. இருக்கிறதே! நேரு ஸ்டேடியத்துக்குப் பக்கத்தில் சென்னை நகர சபையினர் மிகப் பிரம்மாண்டமான கூரை வேய்ந்து 'இன்டோர் ஸ்டேடியம்' கட்டியிருக்கிறார்கள். அதில் தேசிய ஷட்டில்காக் பந்தயம் சென்றமாதம் கன ஜோராக நடந்ததே!" என்று சொல்லலாம்.

பூப்பந்தாட்டம் போல் ஷட்டில்காக் விளையாட்டும் இப்போது பிரசித்தியாயிருக்கிறது. இறகுப் பந்து, ஷட்டில்காக் ஆட்டக்காரர்களிடம் படும்பாடு, பார்த்து ரசிக்கும்படியாயிருக்கும்.

ஃ ஃ ஃ

சென்னையில் மைசூர் ரசமும், மைசூர் போண்டாவும் எவ்வளவு பிரசித்தமோ, அவை போல் பங்களூரில் பிறந்த குமாரி ஷோபா சிவஸ்வாமியும் பிரசித்தமாக வேண்டியவள். 1965ம் ஆண்டில் 'ஷட்டில் காக்'கில் மாபெரும் வெற்றி பெற்றாள். தனியார் ஆட்டத்தில் அவளுக்கே வெற்றி; தன் சகோதரியோடு சேர்ந்து ஆடி இரட்டையர் ஆட்டத்திலும் ஜயம்; இளம் பெண்களுக்கான ஷட்டில்காக் போட்டியிலும் வென்று 'மும்முடி' சூடினாள்! ஷட்டில் வண்டிகளைப் பற்றி அறிவிப்புச் செய்யும் சென்னை ரயில்வே பொதுஜனத் தொடர்பு அதிகாரி சிவஸ்வாமியின் புதல்வி சென்னையில் ஷட்டில்காக் சாம்பியனானதில் ஆச்சரியமில்லை!

சிவஸ்வாமியின் குடும்பமே விளையாட்டுக் கலைக் குடும்பம் என்றால் அது மிகையல்ல. அவர் டென்னிஸிலும் கிரிக்கெட்டிலும் கெட்டிக்காரர்; அவரது மனைவியார் கூடைப் பந்தாட்டத்தில் வீராங்கனை; ஓட்டப் பந்தய வீராங்கனையும் கூட! இவர்கள் சேர்த்து வைத்துள்ள பொக்கிஷம் நிறைய வெள்ளிக் கோப்பைகள். பல வெற்றிகளை நினைவுபடுத்துகின்றன அவை. குமாரி ஷோபா இப்பொழுது பெங்களூரில் பி. ஏ. இரண்டாம் வருஷம் படித்து வருகிறாள்! கல்லூரியில் பயின்று கொண்டே ஷட்டில்காக்கில் மைசூர் சாம்பியனாகவும் ஆகியிருக்கிறாள்.

"உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி எது?"

"சென்னை சாம்பியனான நான் மைசூர் சாம்பியனாகவும் மாறிய பொன்னான தினம். மைசூர் ராஜ்ய ஷட்டில்காக் போட்டியில் இறுதி ஆட்டத்தில் தார்வாரைச் சேர்ந்த டூரியன் ஜோசப்பை வென்றதுதான்! என் ஆசை நிறைவேறிவிட்டது!"

"என் பெண்ணுக்கு ஷட்டில்காக்தான் தெரியும் என்று நினைக்காதீர்கள். டென்னிஸிலும் கெட்டிக்காரி. லக்னௌவில் சமீபத்தில் நிகழ்ந்த சகல சர்வ கலாசாலை டென்னிஸ் போட்டிகளில் இவள் வெற்றிக் குழுவைச் சேர்ந்தவள்" என்று பெற்ற மனம் புகழ்ந்துரைத்தது.

"ஆனால் எனக்கு ஷட்டில்காக் ஆட்டமே ரொம்பப் பிடித்திருக்கிறது! அதில் வெற்றிப் படிகளில் மேலும் முன்னேற ஆசைப்படுகிறேன்" என்றாள் குமாரி ஷோபா.

"இவளிடம் நல்ல திறமை இருக்கிறது. சரியான பயிற்சியும் போதனையும் கிடைத்தால் ஷட்டில்காக் தேசியப் போட்டிகளில் நிச்சயம் வெற்றி பெறுவாள்" என்றார் தந்தை உறுதியோடு.

"உங்களுக்குப் பொழுது போக்கு?" என்று குமாரி ஷோபாவிடம் கேட்டேன்.

"ரேடியோவை முடுக்கி விடுவேன். என் குடும்பத்தினர் ரேடியோ அறையில் பாட்டுக் கேட்கத் தொடங்கி விடுவார்கள். நான் எனக்குப் பிடித்தமான நாவல்களை எடுத்துக் கொண்டு என்னுடைய அறையில் நுழைந்து விடுவேன்!"

"அவளுடைய நாவல் பைத்தியம் என் 'பாக்கெட்'டை ரொம்பக் கடிக்கிறது!" என்றார் தந்தை நகைத்தபடியே!

"ஷட்டில்காக்கில் சென்னையில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் குவார்ட்டர் பைனல் வரை வந்து ஆடினேன்! இனி இடைவிடாத பயிற்சியினால் விரைவில் தேசிய வீராங்கனையாகி விடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது!" என்று கூறிய சென்னை - மைசூர் சாம்பியனான குமாரி ஷோபாவுக்கு ரசிகர்களின் நல்வாழ்த்துக்கள் என்றும் உண்டு.


- குண்டுமணி


"உங்கள் குழந்தைக்குப் பிரத்தியேகமான
பவுடர் தேவைப்படுகிறது —
கால்கேட்டே அந்த
நேர்த்தியான பவுடர்!"
காலகேட் பேபிபவுடர மிகவும் மென்மையானது. அதிகமாக வேர்வையை உறிஞ்சக்கூடியது. பட்டுப்போல் மிருதுவானது. அது குழந்தையின் இளம் சருமம் எரிச்சலடையாமல், நமைச்சலடையாமல் பாதுகாத்து குழந்தையை குளுமையுடன், சுகமாகவும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். உங்கள் குழந்தைக்கு இன்றே காலகேட் பேபி பவுடர வாங்குங்கள்!
COLGATE
Bo-rated
BABY
POWDER
கால்கேட் பேபி பவுடர்
வாங்குங்கள்
—அதிக பவுடர்...
அதிக சிக்கனம்!

CBP.G.7 TAM

பொன்னிவனத்துப் பூங்குயில்





கொத்தமங்கலம் சுப்பு

இதுவரை : பொன்னி வன நாட்டின் இராசபாட்டை. இரட்டைக் குதிரைகள் பூட்டிய அழகிய மூடு வண்டி ஓடி வருகிறது. மூடு திரையை நீக்கிப் பார்த்தால் அதற்குள் சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மா, பாமா - ருக்மிணி சமேதராகக் கொலுவிற்றிருப்பதைக் காணலாம். நடிப்பிலேதான்! தஞ்சைக் கோட்டைக்குள் நுழை யும்பொழுது, வண்டியின் பின்புறத்தில் அத்தனை நேரமும் இல்லாத ஒரு பதுமை புதிதாக முளைத்திருப்பதையும் காணலாம். முகத்திரையை அகற்றிப் பார்த்தால், கருங்காலி வைரத்தில் கடைந்தெடுக்கப்பட்டது போன்ற அழகிய பாவையைக் காணலாம்.

அவள்தான் குயிலி. கோட்டைக்குள் நுழைய முயன்று முடி யாமற் போகவே, இப்படி ஓர் உபாயத்தைக் கையாண்டு வெற்றி காண முயன்றவள். வரிய வாழ்வானாலும் இரக்கம் கொழிக்கும் இதயம் படைத் தவள். ஏழைத் தாயின் குழந்தையொன்றின் பசியைத் தீர்க்க அவள் செய்த முயற்சிகள்தான் எத்தனை! பிட்டுக்காரக் கிழவியும் மிட்டாய்க் கடை ராவுஜியும் உதவ மறுத்தாலும், அவள் முயற்சியைக் கைவிடவில்லை.

பீம ராவ் உணவுச்சாலைக்குச் சென்று சாய வேட்டிக்காரரின் பொடி டப்பியின் உதவியினால் ஒரு வராகனைச் சம்பாதித்ததும், அவள் ஓட்டம் பிடித்ததற்குக் காரணம் என்ன? மேலே தொடர்ந்து படித்தால் புரிய வரும்.

நான்காம் அத்தியாயம்

எனக்கென்றும் கவலை ஏழைக்கில்லை!

"**ஏ**ன்னங்க, அந்தப் பொண்ணு கிட்டப் பேசிக்கிட்டு இருந்தீங்களே. ஏதாவது வராகன் வடபாயசம், அப்படி இப்படி என்று அளந்திட்டிருந்ததா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் வைணவர்.

பாவம்! அவருக்குத் தம் தர்மத்தை இரண்டு பேராவது புகழ வேண்டும் என்ற ஆசை.

ஆனல் சாயவேட்டிக்காரரோ நன்றிப் பெருக்கில் நனைந்திருந்தார். இனி கிடைக்காது என்று எண்ணிய பொடி டப்பி கிடைத்துவிட்டதில், அந்தப் பெண்ணின் நாணயமான நடத்தையில் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி.

''சேச்சே. வராகனும் கேக்கல்லே, சாப்பாடும் கேக்கல்லே. ஏழைன்னு நாக்கிலே நரம்பில்லாமல் பேசப்படாதுங்க. பத்து வராகன் பொடி டப்பியைக் கொண்டாந்து கையிலே குடுத்துட்டு நான் குடுத்த இனுமைக் கூட வேண்டாம்னுட்டுப் போயிட்டுது'' என்ருர்.

''பொடி டப்பியா? அதை ஏன் ஒங்ககிட்ட குடுத்தது?''


''என் டப்பியை எங்கிட்டக் குடுக்காமல் உங்க கிட்டயா குடுக்கும்? கீழே தவறி விழுந்திருக்குது. நான் கவனிக்கவில்லை. அந்தப் பொண்ணு பாவம் வேகாத வெய்யில்லே தேடிக்கிட்டு வந்து கொடுத்தது. இந்தப் பாருங்க. அருமையான வேலைப்பாடு'' என்று டப்பியை அவரிடம் எடுந்துக் காட்டினர்.

''அருமையான வேலைப்பாடு தான். ஆனு அந்தக் குட்டி அதை விட அருமையான வேலைக்காரி. அடேயப்பா. உங்க பொடி டப்பியை எங்கிட்டக் காட்டி, புருகின வாய்க்குப் போஜனமும், ஒரு வராகன் தட்சிணையும் வாங்கிக்கிட்டுப் போயிட்டாளே...'' என்று ஆத்திரத்துடன் சொல்லவும் சாயவேட்டிக்காரர் சந்தர்ப்பம் தெரியாமல் சிரித்தார். வேறு என்ன செய்வது? வைணவரும் சேர்ந்து சிரித்து வைத்தார்.

''இல்லீங்க. நீங்க பார்த்த பார்வையை அது தப்பா நினைச்சுக்கிட்டுப் பார்வைக்குப் பத்து பணம் அபராதம் போட்டு விட்டது.''

''பார்வையா? நான் அப்படியா பார்த்தேன்?''

''ஆமா, பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்த மாதிரி இல்லீங்க பார்த்தீங்க. நான் புரிஞ்சுக்கிட்டேன், வேறே ஒண்ணுமில்லே, 'வயசான மனுசன். வெள்ளெழுத்து' என்று. அது வயசுப் பொண்ணு, தப்பா நினைச்



கடுச்சு'' என்று மழுப்பினார் சாய வேட்டிக்காரர்.

''நான் அப்படியா அவனைப் பார்த்தேன்? இருக்கும் இருக்கும். இந்த மட்டும் கன்னத்திலே அறையாமல் வராகனோட விட்டதே. இது வயசுக் கோளாறில்லீங்க. என் தொழில் கோளாறு?''

''ஏன் நாடக சபா நடத்துகிறீங்களா?''

''இல்லே, நான் ஒரு சித்திரக்காரன். நாலு பேர் இருக்கும் இடத்தில் உட்கார்ந்து ஒவ்வொரு முகத்தையும் உற்றுப் பார்த்து அதன் பாவங்களை இதயத்தில் எழுதிக் கொள்வது என் பழக்கம்'' என்றார் அப் பெரியவர்.

இதைக் கேட்ட சாய வேட்டிக்காரர், மிகுந்த பயபக்தியுடன் தன் அங்க வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு, ''அப்படியானால் தங்கள் திருப்பெயர்?'' என்று கேட்டார்.

''ரங்கமன்னார் என்பார்கள்.''



''ஓவியர் மணி அவர்களா? வணக்கம். வணக்கம். உங்கள் புகழ் பரவாத இடமில்லே. எனது ஊர் திருக்கோர்ணம். அங்கே கூடத் தாங்கள் எழுதிய இராம பட்டாபிஷேகப் படம் உள்ளது'' என்று சந்தோஷத்தில் குதித்தார்.

* * *

''உய்...உய்...உய்...'' என்ற சீட்டி சப்தம் தாளத்தோடு முழங்கியது. குயிலியின் பட்டினிப் பட்டாளம் வய்யாளி நடை போட்டுக் கொண்டு நன்னு ராவ் மிட்டாய்க் கடை வாசலில் வந்து நின்றது. கூட்டத்தைப் பார்த்து நன்னு ராவ் நடுங்கினான். ''என்ன...என்ன கூட்டம்?'' என்று உளற ஆரம்பித்தான்.

''இந்தாய்யா. மிட்டாய்க் கடைக்காரரே! இதுக்கு எவ்வளவு குஞ்சாலாடு குடுப்பே?'' என்று தன் கையிலிருந்த வராகனை அவன் முகத்துக்கு நேரே கர்வத்துடன் நீட்டினாள் குயிலி. தங்க வராகனைப் பார்த்தவுடன் நன்னு ராவ் பொன்னு ராவாக மாறினான்.

''நூறு லாடு தரேன்.''

''நூறுன்னு யாருக்குய்யா தெரியும்! ஐந்து ஐந்தா கூறு கட்டி எத்தனை கொடுப்பே?'' என்றாள் குயிலி.

''அது நமக்கும் தெரியலை'' என்றான் நன்னு ராவ்.

''இந்தாய்யா. ஆளுக்கு ஒரு குஞ்சாலாடு தருவியா? மொத்தம் நாங்க எத்தனை பேர் இருக்கோம்னு எண்ணிக்கோ. மிச்சக் காசைக் கையிலே கொடு.''

நன்னு ராவ் எண்ண ஆரம்பித்தான். பையன்களின் எண்ணிக்கை ஏறிக் கொண்டே வந்து இருபத்தைந்து ஆயிற்று. ''இந்தா குயிலி! நம்பளுக்கு ஏமாத்தத் தெரியாது. ஆளுக்கு ஒரு குஞ்சாலாடு தரேன். ஐந்து பணம் மீதி தரேன்'' என்று ஏமாற்றப் பார்த்தான்.

அவளுக்குக் கணக்குத்தான் தெரியாது. கண் ரொம்பக் கூர்மை. குயிலி அவனைப் பார்த்து வஞ்சகத்துடன் சிரித்தாள். ''டேய், தம்பிங்களா, இந்த ஆளு காத்தாலே என் முகத்திலே தண்ணியைக் கொட்ட வந்தாண்டா. இப்ப இவன் மிட்டாய் தட்டெல்லாம் சூறை!'' என்று தன் பட்டாளத்திடம் கண்ணைக் காட்டிக்கொண்டு சொன்னாள்.

''குயிலி, குயிலி! ஐம்பது லாடு தந்து விடுகிறேன். அரை வராகன் கொடுத்திடு'' என்றான் நன்னு ராவ். இவ்வாறு சொல்லிக் கொண்டே ஒரு கை நிறைய மிட்டாய்களை அள்ளி, ''இந்தா; நீ தின்னு'' என்று அவள் கையில் கொடுக்க வந்தான்.

''என்ன பிச்சையா கொடுக்குறே? தன் தம்பிங்க தின்னுமே இந்தக் குயிலி திங்க மாட்டாள். ஏ, சின்னதம்பி! எல்லாரும் வரிசையா உட்காருங்க...'' பையன்கள் வரிசை உடனே அமைந்தது. எல்லோரும் கையை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

''இரண்டு கைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கடா'' என்று உத்தரவிட்டு விட்டு நன்னு ராவிடம் வராகனைக் கொடுத்து அவன் தந்த மீதி ஐந்து பணத்தைப் பாவாடையில் சொருகிக் கொண்டாள் குயிலி. தாம்பாளம் நிறையக் குஞ்சாலாடுவை வைத்துக் கொண்டு ஆளுக்கு இரண்டு லாடுவாகக் குனிந்த வண்ணம் அள்ளி அள்ளி அவர்கள் கையில் போட்டுக் கொண்டே வந்தாள்.

அன்றொரு நாள். பாற்கடலின் கரையில் மோகினி அமிர்தம் பரிமாறினாள் என்று படித்திருக்கிறோம். குயிலியின் கையால் கொடுக்கப்பட்ட லட்டுக்கள் தேவாமிர்தத்தைக் காட்டிலும் இனிப்பாக இருந்தன. அவள் மோகினிப் பெண்ணாகவே விளங்கினாள். தேவர்கள் முகத்தில் அப்போது அசுரர்களுக்குக் கொடுக்காமல் தாங்களே தின்றுவிட வேண்டும் என்ற பொறாமையும் சுயநலமும் இருந்தன. இந்தச் சிறுவர்கள் முகத்திலோ சுயநலமும் பொறாமையும் இல்லவே இல்லை. தெய்வக் களை ஒளி வீசியது. அன்று அமிர்தத்தை மோகினி உண்டாளா? இன்று குயிலியும் உண்ணவில்லை.

குனிந்த வண்ணம் லாடுவை அள்ளிப் போட்டுக் கொண்டே ஒவ்வொரு பையன் முகத்தையும் பார்த்தாள்.


''தின்னுங்கடா, தின்னுங்கடா! டேய் ஊசித் தொண்டை முழுங்குடா'' என்று சொல்லிக் கொண்டே சிரித்த வண்ணம் பரிமாறிக் கொண்டு வந்தாள். அப்போது 'பளீர்' என்று அவள் முதுகில் ஓர் அடி விழுந்தது. நிமிர்ந்தாள் குயிலி.

''ஐயோ, சின்னம்மா!'' என்றாள்.

''ஆமாடி. உன்னை ஊரெல்லாம் தேடிக்கிட்டு இருக்கேன். வயசுப் பொண்ணு, லட்சணமா வீட்டுலே இருப்பியா, இந்தப் பயகளோட என்னடி கூத்து? வா, வீட்டுக்கு'' என்று அதட்டினாள், சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க ஒருத்தி.

''நீங்க போங்கம்மா. இந்தா வந்துட்டேன்.''

''அங்க மாமன் காத்துக்கிட்டு இருக்கு. மொக வீணையாலேயே உன் முதுகிலே அடிக்கச் சொல்றேன்,



வாடர்பரீஸ் காம்பவுண்ட்

சிவப்பு லேபிள்

நிவாரணத்துடன், நோய்களை எதிர்க்கும் சக்தியையும் தருகிறது!

இருமலும், ஜலதோஷமும் உங்களைப் பலவீனப்படுத்தி, உங்கள் உடலில் நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைக்கும்.
இதனால் இதர நோய்களும் உங்களை எளிதில் பாதிக்கக்கூடும்.
பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டளித்து, உடலுக்கு நோய்த் தடுப்புச் சக்தியை அளிக்கக் கூடிய, ஊட்டமளிக்கும் பொருள்கள் அடங்கியது வாடர்பரீஸ் காம்பவுண்ட்.
அதிலுள்ள க்ரியோஸோட் மற்றும் க்வயகால், இருமலிலிருந்தும், ஜலதோஷத்திலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.



**சக்திக்கும் ஆரோக்கியத்திற்கும்
வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்துங்கள்!**

WH வார்னர்-ஹிந்துஸ்தான் லிமிடெட்

வாடி!'' என்று கை பிய்ந்துபோகும் படி இழுத்தாள் சின்னம்மா.

''அவர் எனக்கு மட்டுமா மாமன்? நான் அங்கே வர மாட்டேன் போ.''

''வரமாட்டியா? நேத்து என்னடான்னு டிமிக்கிக் கொடுத்துட்டுக் கோட்டைக்கு வெளியே ஓடிப் போயிட்டே. இன்னிக்கு வரமாட்டேனா மில்லே? வாடி'' என்று இழுத்துக் கொண்டே நடந்தாள் சின்னம்மா.

அவன் பட்டாளம் அவளைப் பரிதாபமாகப் பார்த்தது. அவர்கள் வாயிலிருந்த இனிப்புக் கசந்தது. ''அது கொஞ்சம் கூடத் திங்கலேடா'' என்றான் சின்னத்தம்பி. அவன் கண்களில் கண்ணீர் நிரம்பியது. நன்னு ராவ் இறுமாப்புடன் குயிலியைப் பார்த்தான். குயிலியோ சின்னத்தம்பியைப் பார்த்து, ''நீங்க கவலைப்படாதீங்கடா. நான் தப்பிச்சு வந்திடுவேன்'' என்று கண்ணைச் சிமிட்டி ஜாடை காட்டிக் கொண்டே சென்றாள்.



ராகு காலம் ரங்கசாமியைப் பகலெல்லாம் பார்க்கவே முடியாது. ராகு காலத்தில் விழித்திருந்தால் ஏதாவது வேலை செய்ய வேண்டி வரும் என்றுபயந்து ஞாயிற்றுக்கிழமை நாலு மணிக்குமேல் தூங்கப் போய் விடுவார். திங்கட்கிழமையில் ஒன்பதரை மணிக்குத் தான் எழுந்திருப்பார். இவ்வாறு தூங்கித் தூங்கி அதுவே பழக்கமாகி இப்பொழுது பகல் முழுதும் தூங்கிக் கொண்டே இருக்கிறார். அப்படியிருந்தும் பயம் போகவில்லை. ''ராகு காலத்தில் தூங்க ஆரம்பித்தேன் சார். இப்ப ராத்திரி எல்லாம் தூக்கமில்லாமல் போச்சு....'' என்று வருத்தப்படுகிறார். இவரைப் போலவே தஞ்சாவூரிலும் அக்காலத்தில் சிலர் இருந்தார்கள். வாளை மறந்தாலும் அவர்கள் வடக்கை மறக்க மாட்டார்கள்.

தஞ்சையை ஆண்ட ஏகோஜி மன்னர் முதலில் வடக்குக் கோட்டை வாசலில் தான் நுழைந்தாராம். அதனால்தான் வெற்றி வந்ததாம். அது முதல் அந்த 'அலி தர்வாஜா'வின் வழியாகத்தான் அந்தப்புர வண்டிகளும் செல்வது வழக்கம். நாம் குறிப்பிட்ட இரட்டைக் குதிரை வண்டியும் அதே வடக்கு வாசல் வழியாக உள்ளே சென்றது. வண்டி உள்ளே நுழைந்ததும் வடக்கு திக்கில் நின்ற இரண்டு திக்கஜங்கள் தங்கள் நீண்ட தந்தங்களுக்கிடையே இருந்த துதிக்கைகளை உயரத்தூக்கித் துதித்தன. அவற்றின் பிளிறலைக்கேட்டுக் குதிரைகள் இரண்டும் குதித்தன. அடவிச் சாலையில் கடும் வேகத்தில் வந்த பரிகள் இப்பொழுது அரண்மனைச் சாலையில் நாட்டியமாடிக் கொண்டே நடந்தன. எதிரில் லாயங்களில் நின்ற பல அற்புதமான பஞ்ச கல்யாணிக் குதிரைகள் இந்தப் புதிய குதிரைகளுக்குத் தங்கள் கனைப்பின் மூலம் வரவேற்புப் பாடின. வண்டியில் பூட்டிய வெண் புரவிகள் இரண்டும் ஏககாலத்தில் பதிலுக்குக் கனைத்து, 'கடக் கடக்' என்று தங்கள் கடிவாளத்தைக் கடித்துத் தாளம் போட்டன. அப்போது வண்டிக்குள்ளிருந்த வீர வாலிபரின் கண்கள் குதிரை லாயத்தில் ஏதையோ தேடின. மகாராஜா அவர்கள் ஆரோகணித்துச் செல்லும் 'பாரிஜாதம்' என்ற பரிமா அங்கு இல்லாததைக் கண்டார்.


அப்போது திடீரென்று ஏதோ பெருமாள் கோயிலில் சுண்டல் விநியோகம் செய்வது போல் ஒரு வாசனை அரண்மனை முன் வாசல் முழுவதும் பரவியது. அங்கு பெருமாள் கோயிலும் இல்லை. சுண்டல் விநியோகமும் செய்யவில்லை. பத்து அண்டாக்களில் வேக வைத்த கொள்ளை நான்கு பேர் கீழே பாய் விரித்து அதில் கொட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த வாசனையைத் தாங்காமல் எலும்பும் தோலுமாக இருந்த அந்த வேலைக்காரர்கள் 'கொள் கொள்' ளென்று இருமினார்கள். வண்டிப் புரவிகள் இதைக் கண்டு நிலைகொள்ளாமல் இழுத்தன. ஆனால் லக்ஷ்மி விலாஸ அந்தப்புரத்தின் முன் வாசலை வண்டி அணுகியபோது அந்தக் குதிரைகளை இழுத்துப் பிடித்துப் பாதையில் செலுத்துவதே கஷ்டமாகி விட்டது. வண்டியைப் பார்த்தவுடன் பல்லக்குப் பந்திகளின் வாசல்களில் பல்லாங்குழி, தாயம், அம்மானை முதலிய விளையாட்டுக்களை விளையாடிக் கொண்டிருந்த பணிப் பெண்கள் தங்கள் முக்காடுகளை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு மறைவுக்கு ஓடினார்கள். பித்தளை, வெண்கலம், வெள்ளி முதலான உலோகங்களில் அவர்கள் அணிந்திருந்த குழாய்க் காப்பு, வெண்டயம், சிலம்பு, பாதரசம், கைவளை, கொலுசு கங்கணம், வங்கி, மூக்கிலே தொங்கிய நத்து, முகத்தைவிடப் பெரிதாகத் தொங்கிய அதன் கம்பி - இவை எல்லாம் கலந்து ஒவ்வொரு பெண்ணும் ஒரு வண்டி பாத்திரம் உருண்டு ஓடுவது போல் ஓடினார்கள்.

இப்படி அடிக்கடி ஓடவேண்டி வரும் என்பதற்காகத்தானே என்னவோ அந்தப் பணிப் பெண்களில் பாட்டியும் பாவாடை கட்டி இருந்தாள். 'வனிதை வரும் பின்னே, வளை ஓசை வரும் முன்னே' என்ற வகையில் தங்கள் கோஷாவை அறிவிக்க ஏராளமான ஆபரணங்களை அரண்மனைப் பெண்கள் அணிவது வழக்கம். வண்டி லக்ஷ்மி விலாஸ அந்தப்புரத்தின் முன் வாசலில் வந்து நின்றது.

சாதாரண மனிதர்களாக இருந்தால் வண்டி நின்றவுடன் குதித்து விடலாம். மன்னர் பரம்பரை அப்படி இறங்க முடியுமா ?

வாத்தியங்கள் முழங்கின. 'ஏனடா வண்டியை விட்டு அவிழ்க்க மாட்டான் போலிருக்கிறதே' என்று குதிரைகள் பொறுமையை இழந்தாலும் வண்டிக்குள் இருந்தவர்கள் பொறுமையோடு திரையைக்கூட விலக்காமல் காத்திருந்தார்கள்.

வெள்ளித் தடி பிடித்த இரண்டு கட்டியக்காரர்கள் வண்டியின் கதவின் இருபுறமும் வந்து நின்றார்கள். ஆரத்தி எடுக்கும் பெண்கள் அறுவர் ஒரு மராட்டியப் பாட்டைப் பாடிக்கொண்டே ஆரத்தியில் விளக்குகளை வைத்துக் கொண்டு அங்கு வந்து நின்றார்கள். இவ்வாறு எல்லாம் வேகமாக நடந்தும் ஆரத்தியில் பணம் போட வேண்டிய அரண்மனை காரியஸ்தன் வராததால் வண்டிக் கதவு சாத்திய படியே இருந்தது. சர்க்கரையின் கண்கள் ' இந்த வேஷத்தைக் கலைத்துவிடலாமா?' என்று வீர வாலிபரை நோக்கி வினவின. அவரது நயனங்கள் 'வேண்டாம். வேடிக்கை பார்ப்போம்' என்று விடையளித்தன. அப்போது வேத கோஷத்துடன் ஒரு வேதியர் கையில் பூரண கும்பத்துடன் வண்டியருகில் வந்தார். அவரைப்பின்தொடர்ந்து தஞ்சை யுவராஜாவும் துக்கோஜி மகாராஜாவின் மூத்த புத்திரரும் ஆகிய பாவாஜி 'வண்டியில் யார் வருகிறார்களோ என்னவோ' என்ற எண்ணத்தில் கண்களில் பயம் தோன்ற ஏதோ ஆபத்து எதிர் நோக்குவது போல் வந்தார். அவருடைய இருகரங்களிலும் இருராஜபுத்ரப் பெண்கள் கைலாகு கொடுத்து அழைத்து வந்தனர். அவருக்குப் பின்னே தரையில் புரண்டு வந்த மக்மல் மேலாடையை இரண்டு பணிப் பெண்கள் ஏந்திக் கொண்டு பின்னே வந்தார்கள். யுவராஜாவின் முகத்தில் இருபது கோயில் விபூதியும் குங்குமமும் தனித் தனியே இடப்பட்டு, முகம் முழுவதும் செம்புள்ளி கரும்



''கிராமபோன் ஊசி ரெண்டு கொடுங்கோ மாமா! தூங்கிக்கிட்டிருக்கிற எங்க தாத்தாவை எழுப்பிவிட்டுத் தரேன்!''

புள்ளி குத்தியது போல் அலங்காரமாக இருந்தது. அவர் வாயில் ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபம் செய்து கொண்டிருந்தார். அவர் உடம்பில் இருந்த நடுக்கத்தால் அவர் காதுகளில் இருந்த பன்னு வைரக் குண்டலங்கள் இரண்டும் நடுங்கிக் கொண்டிருந்தன. அந்த வைரமணிகளின் ஒளி மற்றத் தோழிப் பெண்களின் முகத்திலே வர்ண ஜாலங்களை வீசி டாலடித்துக் கொண்டிருந்தது. ஒரு வழியாகக் காரியஸ்தன் வந்து காசு போட்டபின் ஆரத்தி எடுக்கப்பட்டு வண்டியின் கதவு திறக்கப்பட்டது. பாரசீக தேசத்து இரத்தினக் கம்பளங்களை ஒரு டெஞ்மணி நடை பாவாடையாக விரித்தாள். யுவராஜா ஆவலோடு பார்த்தார். வண்டியிலிருந்து தன் உறவினர் யாரேனும் இறங்குவார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், முதலில் ராதையும் ருக்மிணியும் இறங்க, அவர்கள் நடுவில் சங்கும் சக்கரமும் வைத்துக்கொண்டு கிருஷ்ண பரமாத்மா இறங்கினார். ''ஜெய், கிருஷ்ணஜி'' என்ற குரல் அந்தப்புரமெங்கும் ஒலித்தது. தன் இரண்டு கைகளையும் உயரக் கூப்பிக் கொண்டு பரமாத்மாவின் தரிசனத்தில் பரவசமடைந்தவராய்ப் பாவாஜி வெளியே ஓடி வந்து ஆகாயத்தில் ஒரு முறை பார்த்தார்; மேலும், தேவர்கள் யாரேனும் வைகுண்டத்திலிருந்து வருகிறார்களோ என்ற ஆவலில். அவ்வளவுதான். 'ஜெய் கிருஷ்ணஜி' என்று கத்திக் கொண்டு பரமாத்மாவின் திருவடிகளில் விழுந்தார். இந்தக் காட்சியைப் பார்க்க அந்தப்புரத்துப் பணிப் பெண்கள் அனைவரும் கூடிவிட்டார்கள். அவர்களுக்குக் கும்பிடுவதா சிரிப்பதா என்று சந்தேகம். தம் கையில் இருந்த சங்கு சக்கரம்

ஓநாய்க் கோட்டை

இதுவரை நடந்தது :

சிம்மவர்மன் கந்தர்வபுரி மாமன்னன். அதன் ஆளுகைக் குட்பட்டது மங்களதுர்க்கம். அதன் அரசன் ஆனந்தன். இளமையும் வீரமும் மிக்கவன். ஆனந்தனிடம் பகைமை கொண்டவன் வஜ்ரகீர்த்தி. இவன் மாமன்னர் சிம்மவர்மனின் உள்ளத்திலே ஆனந்தனைப் பற்றிப் பொறாமையை வளர்க்கிறான். தலைநகரில் நடக்கும் விசேஷ களியாட்டங்களில் கலந்து கொள்ள ஆனந்தன் தன் மனைவியோடு மாநகருக்கு விருந்தாளியாக வருகிறான். இந்தச் சமயத்தில் ஆனந்தனின் புகழிலும் வீரத்திலும் பொறாமைகொண்ட சிம்மவர்மர் அவனை ஒழித்துக்கட்டத் திட்டமிடுகிறார். வஜ்ரகீர்த்தி வஞ்சனை புரிகிறான். ஆனந்தனைத் துரோகியாக்கி முகமூடி அணிவித்து விளையாட்டு மைதானத்திலே வாளுக்கு இரையாகும்படி ஏற்பாடாகிறது. தெய்வச் செயலால் முகமூடி அகற்றப்பட்டுத் துரோகியாக அறிவிக்கப்பட்டவன் ஆனந்தன் என்பதை மக்கள் அறிந்து கொதித் தெழுகின்றனர். தவறு நேர்ந்து விட்டதாகச் சமாளித்து மக்களைச் சமாதானப்படுத்தி ஆனந்தனை மாய்க்க வேறு வழியைப் பயன்படுத்துகின்றனர் கயவர்கள். விரோதிகளால் வஞ்சிக்கப்படுவதை அறியாமலே ஆனந்தன் மன்னரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஓநாய்க் கோட்டையிலிருக்கும் தன் மனைவியைச் சிறை மீட்கக் கிளம்புகிறான்.

46-ம் பக்கத்தில் கதை மேலே தொடருகிறது.

கிரீடம் இவற்றை யெல்லாம் அவசரமாகச் சர்க்கரையிடம் கொடுத்து விட்டுக் கிருஷ்ணவேஷக்காரர் குனிந்து, ''அண்ணா, அண்ணா! எழுந்திருங்கள். நான்தான் பிரதாப சிம்மன். எழுந்திருங்கள்'' என்று அவரைத் தூக்கினார். அதற்குள் இரண்டு பணிப்பெண்கள் பன்னீர் செம்புகளிலிருந்த பன்னீரை யுவராஜா முகத்தில் தெளித்தனர். யுவராஜா கண் விழித்தார்.

''சுஜனா! தேவி சுஜனா! ருக்மிணி சத்யபாமா சமேதராய்க் கிருஷ்ண பரமாத்மா எனக்குத் தரிசனம் தந்தார். நீ அவரைத் தரிசித்தாயா ?''

''அண்ணா! நான்தான் கிருஷ்ண வேஷத்தில் வந்தேன். என்னைத் தெரியவில்லை?'' என்றார் பிரதாப சிம்மர். ''பரமாத்மா, மோஹன முரளிதரா, மாயா மானுஷ வேஷா. இதெல்லாம் என்ன விளையாட்டு? சற்று நேரத்துக்குமுன் பரமாத்வாகக் காட்சி தந்தாய். இப்பொழுது நீ என் தம்பி பிரதாபசிம்மனுக ரூபத்தை மாற்றிக் கொண்டால் எனக்குத் தெரியாதா? நீ பிரதாப சிம்மனல்ல; கிருஷ்ண பரமாத்மாதான்!'' என்று கைகளில் தாளம் போட்டுக் கொண்டு துகாராமின் அபங்கம் ஒன்றைப் பாட ஆரம்பித்தார்.

அவருக்குக் குடும்பத்தாரால் வைக்கப்பட்ட பெயர் ஏகோஜி என்கிற பாவாஜி. ஆனால் அவரோ சகுனம், பஜனை, நாம சங்கீர்த்தனம், ராகு காலம், எமகண்டம் இவைகளிலேயே பொழுது போக்கிக் கொண்டு, வெளுத்ததெல்லாம் பால் என்று வாழ்ந்து வந்தார். பாவாஜி என்ற பெயரை மாற்றிப் 'பஞ்சாங்கம்ஜி' என்று அரண்மனையில் உள்ளோர் வேடிக்கையாக அழைக்கத் தலைப்பட்டார்கள்.

தம் தமையனாரைத் தம் கைகளால் தழுவிக் கொண்டு, ''அண்ணா!.... கிருஷ்ண பரமாத்மா நேரில் வந்து தரிசனம் தரும் அளவுக்கு நாம் பக்தர்களாகி விட்டோமா? அந்தப் பாக்கியம் நமக்கு இருப்பின் நாம் ஆயர்பாடியில் அல்லவோ பிறந்திருக்க வேண்டும்? நான் பிரதாப சிம்மன்தான். என்னைப் பாருங்கள்!'' என்று பிரதாபசிம்மர் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் பாவாஜி தம் பரவச நிலையிலேயே இருந்தார். அந்த ஞானப் பைத்தியத்தை எவ்வாறு பூமிக்குக் கொண்டு வருவது என்று எல்லோருமே கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

''பக்த சிகாமணியே! பாவாஜியே! உனது பக்தியை மெச்சியே நாம் பிரசன்ன மானோம். நீ மனிதனாகப் பிறந்ததன் கடமைகளைச் செய்து காலக்கிரமத்தில் என்னிடம் வந்து சேர்வாய். இப்போது உன் கடமைகளைச் செய். ஜெய் விஜயீபவ'' என்ற அசரீரி அரண்மனை முழுவதும் எதிரொலித்தது.

பாவாஜி தம் இரு கைகளையும் உயர்த்தியவண்ணம் ஆகாயத்தை நோக்கினார்.

''ஜெய், கிருஷ்ணாஜி'' என்று கூறிக் கொண்டே இரு கன்னங்களிலும் அடித்துக் கொண்டு வணங்கினார். உடனே வெறி நீங்கி யுவராஜர் ஆனார்.

இந்த அற்புதத்தைக் கண்டு பிரதாபசிம்மர் உள்பட எல்லாரும் வியப்பில் ஆழ்ந்திருக்கையில் சிரித்துக் கொண்டே சர்க்கரைப் புலவர், அதாவது உருக்குமணி வேஷம் தரித்திருந்த இளங்குமரன் மேன்மாடத்திலிருந்த ஒரு தூண் மறைவிலிருந்து ஒன்றும் தெரியாதவன்போல் வந்தான். பிரதாப சிம்மர் கண்கள் அவனை நோக்கி 'சபாஷ்' என்று கூறின. அண்ணனும் தம்பியும் பரிவாரங்கள் புடைசூழ அந்தப்புரத்துக்குள் செல்லும்போது பிரதாப சிம்மரின் கண்கள் ஒரு சிப்பாயை நோக்கின. அவன் ஒரு மாறு கண்ணன். பிரதாப சிம்மரைக் கூர்ந்து நோக்கிவிட்டு அவன் எங்கோ அவசரமாகப் போவதை அவர் கண்டார்.

(தொடரும்)


கனியான
உடையழகோடு
நீங்கள்
காலமெல்லாம்
திகழவே
தாக்கர்ஸியின்
everfresh
TEBILIZED
தி ஹிந்துஸ்தான் ஸ்பி. &
வீவிங் மில்ஸ் கோ., லிட்.,
தி இந்தியன் மானு. கோ., லிட்.,
16, அப்போலோ ஸ்ட்ரீட், பம்பாய்-1.
தாக்கர்ஸி க்ரூப்
TH-100


ஓநாய்க் கோட்டை
கதை : வாண்டுமாமா
சித்திரம் : ரமணி..
4
திகைப்பு நீங்கு — முன் காத்து நின்ற காட்டு மிராண்டிகளின் வில்லிலிருந்து மழையென அம்புகள் வந்து விழ லாயின.
வீரர்களே! பீதி வேண்டாம். குழப்பம் அடையாதீர்கள். ஒன்று சேருங்கள் - உதிரியாகப் - போனால் - அழிந்து போவீர்கள்.
நாம் வலைக்குத் தள்ளப் பட்டோம். ஓடுங்கள் உயிர் பிழைக்க.
அவர்கள் முறையான வீரர்களாக இருந்தாலல்லவா எதிர்த்து நிற்பார்கள். தலைவனின் ஆணைக்கும் அடங்கி நடப்பார்கள்.
எதிர் பார்த்ததற்கு முன் பாதியே முடிவு நெருங்கி விட்டது. இந்த அம்பு மழையிலிருந்து யாராலும் தப்ப முடியாது. ஆனால் நான் தப்பியாக வேண்டும்...
ஒரு வேளை ஆனந்தன் தப்பி விட்டால்.. இப்போதே முன் னெச்சரிக்கையாக ஒரு காரியம் செய்வோம். வஜ்ர கீர்த்தியின் வாள் ஆனந்த னின் ரத்தத்தை ருசி பார்க்கட்டும்..
மன்னரின் ஆணைப்படி, அவர் விருப்பப் படியே காரியத்தை முடித்து விட்டேன். இனி - ஆனந்தன் திரும்ப மாட்டான். ஆனால் இந்த ஆபத்திலிருந்து நான் தப்பியாக வேண்டுமே...!
ஓநாய் மனிதர்களின் — விஷம் தோய்ந்த அம்புகள் வீரர்களான வீரர்களில் ஒருவரைக் கூட விட்டு வைக்கவில்லை. ஆனால் விதி வஜ்ர கீர்த்தியின் வாளிலிருந்து ஆனந் தனைக் காப்பாற்றி விட்டது. திரும்பி எழுந்த ஆனந்தன்....
அதிக ரத்தப் போக்கினால் மது படி மயங்கி விழுந் தான். அந்த சம யம் அவன் முது- குக்கு நேரே கட்டியை இந்தப் படி நின்றான் படை வீரரில் ஒருவன். வஜ்ர கீர்த்தியின் கையாள் அவன்.


ஓநாய் மனிதர்களின் அம்பு மழையிலிருந்து அதிசயமாகத் தப்பிப் பிழைத்த அவன் ஆனந்தன் உயிரோடிருப்பதைக் காண்கிறான். ஆனந்தனின் முடிவை உறுதியாக்குவதன் மூலம் மன்னரிடம் பரிசு பெறலாமென்று முடிவுக்கு வருகிறான்.
இவனை இப்படிக் கொல்லக் கூடாது. இன்னும் குரூரமான முறையில் இவனுக்கு மரணத்தைத் தரலாம்.
அந்தக் கொடியவன் ஆனந்தனையே கவண் கல்லாக உபயோகிக்கும் ஒரு பயங்கரப் பொறியை அமைக்கிறான். சற்று தூரத்தில் தீயையும் மூட்டுகிறான். ஆனந்தனுக்கோ மயக்கம் தெளியவில்லை......
அவனுக்கு மயக்கம் தெளிந்த போது....
நான் எங்கிருக்கிறேன்.. இதென்ன தாங்கமுடியாத வெப்பம்...ஹா!
இந்தக் கயிற்றை வெட்டியதும் அந்தக் கம்புகள் விடுபட்டு இவனைக் கொழுத்து விட்டெறியும் அந்தத் தீயிலே கொண்டு போய்த் தள்ளும். ஹா...ஹா.....ஹா!
அதே சமயம் கையில் ஈட்டி ஏந்திய முக்காடிட்ட உருவமொன்று பதுங்கிப் பதுங்கி வந்தது....
எலும்பும் தோலுமாகக் காட்சியளித்த அந்த உருவம் தன் சக்தியையெல்லாம் திரட்டி அந்த ஈட்டியின் வீச்சிலே கொடுத்தது..
ஆனந்தனைக் கொல்லத் திட்டமிட்டவனின் உயிரைக் குடித்துக் குத்திட்டு நின்றது ஈட்டி.
வீரனே! உன் கைக் கட்டுகளை மட்டும் நான் அறுத்து விடுகிறேன். மற்றவைகளை நீயே தான் அவிழ்த்துக் கொள்ள வேண்டும். என் உடலிலே அதற்கான தெம்பில்லை.
பெரியவரே, என் உயிரைக் காத்த நீங்கள் யார்? வேஷத்தைப் பார்த்தால் என் விரோதி போலிருக்கிறதே!
தொடரும்....



அல்டாப் அப்பாசாமி

அவர் அதிர்ந்து பேசாதவர். காவிரிக் கரைவாசி என்பதை அவர் அணியும் காவியுடையே கட்டியம் கூறும். அதோடு நாள் நட்சத்திரம் பார்த்துத் தலையை நீட்டுபவர் என்பதை நீண்டு வளர்ந்த தாடி மீசையோடு தலையும் எடுத்துக்கூறும். அப்படிப்பட்டவர் இரண்டொரு சமயம் ஹோட்டலுக்குள் நுழைகிறார் என்றால், அதற்குப் பொல்லா வயிறு காரணமே ஒழிய அவர் அல்ல.

"ஏன், அப்பா! போண்டா சூடாக இருக்கிறதா என்றுதானே கேட்டேன்? இப்படி ஐஸ் கட்டியா ஆறிக் கல்லாகப் போயிருக்கிறதைக் கொண்டு 'வந்து வைத்திருக்கிறாயே — இது நியாயமா?" என்றார் அவர் சர்வரிடம்.

அவன் பதில் பேசவில்லை. அவரை ஒரு முறை முறைத்துவிட்டு நகர்ந்தான். அதே நேரம் அடுத்த மேஜைக்கு ஆவி பறக்க போண்டாப் பிளேட்டுகள் வந்தன.

எடுத்து வந்தவன் அப்பாசாமி. "முருகலா ஒரு தோசை போடச் சொல்லட்டுமா?... 'கொத்ஸு' இன்றைக்கு 'ஏ ஒன்!' "—அவன் பேச்சில்தான் என்ன குழைவு? தொள தொளவென்று சில்க் ஜிப்பாவும் தங்கச் சங்கிலியும் கடிகாரமுமாகக் காட்சி அளித்த பிரமுகர், முன் இரு பற்கள் தெரிய முறுவலித்தார். அங்கும் தங்கம் மின்னியது.

"அடுத்தது டிகிரிக் காப்பி அண்ணாவுக்கு!" என்று அவர் வயிற்றையும் வாயையும் அறிந்தது போல் நகர்ந்தான் அவன்.

'அந்த மேஜைக்கு நாமும் போய் உட்கார்ந்தால்........?' இப்படி எண்ணியவரைச் சங்கோசம் தடுத்தது. விதியே என்று சர்வர் தந்ததைச் சாப்பிட்டுவிட்டு எழுந்தார்.

அடுத்த இரண்டு நாட்களுக்குப்பின் அவர் மீண்டும் அதே ஹோட்டலில் இருந்தார். ஆசை வெட்கமறியாது அல்லவா? எனவே, மனத்தில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அப்பாசாமியின் மேஜைக்கே போய் உட்கார்ந்தார். "சூடா இரண்டு போண்டா கொண்டு வாப்பா !" என்று குனிந்த தலை நிமிராமலே கூறினார்.

சிடுத்த முகத்துடன் போன அப்பாசாமி, இமயமலைப் பனிக் கட்டியையே புறமுதுகிடச் செய்யும் போண்டாவையும் ஒரு தம்ளர் நீரையும் 'ணக்'கென்று கொண்டு வந்து வைத்தான். சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தவர், போண்டாவைத் தொட்டுப் பார்த்தார். குளிர்காலத்தில் பனிக்கட்டியைத் தீண்டிவிட்டது போல இருந்தது.

எதிர்த்த மேஜையில், அன்று அவருக்குப் போண்டா கொடுத்தவன், இன்று சூட்டுக்குச் சூடு தரும் போண்டாப் பிளேட்டைக் கையில் ஏந்திக் கொண்டு வந்தவன், அவரைப் பார்த்து ஏளனமாக முறுவல் பூத்தான். அவருக்கு வந்த கோபத்தைச் சொல்லி முடியாது. அதிர்ந்து பேசும் பழக்கம் இல்லாதவராதலால், காப்பியோடு கோபத்தையும் குடித்துவிட்டு எழுந்தார். அப்பாசாமியைப் பார்த்து, "கொஞ்சம் வெளியிலே வரியாப்பா!" என்று அன்போடு கேட்டார்.

வேண்டா விருப்பாக அவன் அவரைத் தொடர்ந்தா . சாப்பிட்டதற்குச் சில்லறை கொடுத்துவிட்டு வெளியே வந்தவர், "அப்பா குழந்தை! நம்ம குடும்பத்தின் நிலை உனக்குத் தெரியும். பெரிய சம்சாரம். சிரமப்பட்டுப் பத்தாவது வரை படிக்க வச்சும் உனக்கு வேறு நல்ல வேலையாகக் கிடைக்கவில்லை. கதியற்றுத்தான் இதில் சேர்த்து விட்டேன். நல்ல காலம் பிறந்தால் நீ நன்றாக இருக்கலாம். இருந்தாலும் பெற்ற தகப்பன்—எனக்கு ஒரே ஒரு குறை என்ன, தெரியுமா? அந்தப் பையன்தான் ஆறின போண்டாவைக் கொடுத்தான். நீயுமா அப்படியே கொடுக்கணும்? கொஞ்சம் சூடாகக் கொடுக்கக் கூடாது?" என்று கேட்டார்.

"அப்பா! இங்கே எத்தனை பெரிய பெரிய மனிதர்களெல்லாம் சாப்பிட வருகிறார்கள், தெரியுமா? அவர்களோடு உங்களையும் இந்த ஹோட்டலில் பார்க்கிற பொழுது..." பொரிந்து தள்ளத் தயாரானான் அப்பாசாமி.

"ரொம்ப வாய்த் துடுக்காகப் பேசாதே! நான்தானே . நாராயணனிடம் சொல்லி உனக்கு இந்த வேலை வாங்கிக் கொடுத்தேன்! இப்போ நான் நெனைச்சா இந்த வேலையிலிருந்து உன்னை நீக்கவும் முடியும். தெரியும் அல்லவா? இப்பவே நாராயணனிடம் உன்னைப் பற்றி ஒரு வார்த்தை 'என் பையன் தான். ஏதோ ஆசையிலே கொண்டு வந்து வச்சேன்! ஆனால் ஓர் எச்சரிக்கை: என்னதான் என் பிள்ளையானாலும் கொஞ்சம் கை நீளம். ஜாக்கிரதையாயிருங்கோ'ன்னு நான் சொன்னால் நீ அப்புறம் இங்கே இருக்க முடியுமா?" என்றார் அவர்.

அதே சமயம் சில்க் ஜிப்பாக்காரர் வருவது தெரியவே, "பெரிசா, பொல்லாத வேலை வாங்கிக் கொடுத்திட்டே! சீட்டுக் கிழிக்கச் சொல்லப் போகிறயாக்கும். தாராளமாச் சொல்லேன், யார் வேண்டாம் என்கிறார்கள்? அதோ வராரே! அவர் யார், தெரியுமா? பட்டணத்திலே பெரிய சினிமா புரொட்யூசர். இங்கே 'அவுட் டோர் ஷூட்டிங்'குக்காக வந்திருக்கிறார்! நல்ல டிபனாகக் கொடுத்து அவரைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்கு சினிமாவிலேயே 'சான்ஸ்' வாங்கித் தந்தாடுவார்! நீ போய் நாராயணனிடம் சொல்லி வேலையை விட்டு நீக்குவதற்கு முன், நானே..."

அவன் பேசி முடிக்கவில்லை. சில்க் ஜிப்பாக்காரர் அருகில் வந்தவர், அப்பாசாமியின் அப்பாவைப் பார்த்ததும், "என்ன சாமி, நீங்களா? சௌக்கியமாயிருக்கிங்களா? உங்க புண்ணியம்தானுங்க, நான் இந்த நிலைமைக்கு வந்தது...." என்று கூறி விழுந்து வணங்கப் போனார்.

அப்பாசாமி விழாமல் பிழைத்தது யார் செய்த புண்ணியமோ?

—குறும்பன்

தபால்காரர் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போகிறார், சர்மாவிடம்.

அவருக்கே ஆச்சரியம் — இத்தனை நாட்களில் சர்மாவுக்கென்று அவர் ஒரு கடிதம் கூடப் பட்டுவாடா செய்ததில்லை. இன்று அந்தப் பத்துப் பைசா கடிதத்தைக் கொடுத்துச் சர்மாவின் முகத்தில் வியப்பைத் தோற்றுவித்துப் போகிறார்.

பரபரவென்று உறை கிழிகிறது. யார் எழுதியிருப்பார்கள் ? அவருக்குக் கடிதம் எழுதுமளவுக்கு யாருமில்லை இந்த உலகத்தில் என்றுதான் இத்தனை நாட்கள் நினைத்திருந்தார். இன்று....

கடிதத்தைப் படிக்கப் படிக்க அவர் முகம் மலருகிறது. மனத்திலுள்ள துயரமெல்லாம் பெருமூச்சில் ஆவியாவதை உணர்கிறார், அவர். கடிதத்தைப் பிரித்தபடியே உள்ளே விரைகிறார்.

''அம்மா லக்ஷ்மி! உனக்கு வாழ்வு கிடைத்து விட்டதம்மா......'' அவர் குரல்





மறு வாழ்வு

தழுதழுக்கிறது. அப்பப்பா.... எத்தனை நாட்களாக எதிர்பார்த்தது.... இன்று, என்றோ கைவிடப்பட்டு, அதன் சுவடே மறைந்த நிலையில் இன்று, அந்த வாழ்வு திரும்பியிருக்கிறது, லக்ஷ்மிக்கு.

வாழ்வை எதிர்பார்த்து ஏங்கும் பருவத்தைத் தாண்டிவிட்டாள் அவள். ஒன்று, இரண்டா...... அடேயப்பா, இருபத்தி ஆறு ஆண்டுகள்..... மனித வாழ்க்கையின் கனிசமான பகுதியை அவள் இப்படியே கழித்து விட்டாள். கடைசியில் அவளிடம் எஞ்சியிருப்பது என்ன.......?

ஊர்க்காரர்கள் அனுதாபத்துடன் சொல்கிறார்கள், லக்ஷ்மிக்குச் சித்தப் பிரமை பிடித்து விட்டது என்று. அதைப் புரிந்து கொள்ளும் நிலையிலா இருந்தாள் அவள்? ஏன், அன்று அவள் — அதுதான் லக்ஷ்மியின் மாமியார் — அப்படிச் சொன்ன போதுகூட, அதைப் புரிந்து கொள்ளாதவள் போல் தானே இருந்தாள் !

மகளைக் கூர்ந்து நோக்குகிறார் சர்மா. கடிதத்தை அவளுக்குப் படித்துக் காட்டிய போதும் அவளிடம் சலனம் எதுவும் இல்லை. சுகதுக்கங்களை ஒருங்கே ஜீரணிக்கும் ஞானியைப் போன்றதொரு மயக்கத்தில் அவள் இருக்கிறாள்.

அவளுக்கென்று ஓர் உலகம் — அதை அவள் என்றோ மானசிகமாகச் சமைத்துக் கொண்டு விட்டாள். அதை விட்டு வெளியே வர அவள் விரும்பவில்லை ! இது நாள்வரையில் சர்மாவும் அவளை அவள் உலகத்தில் வாழவிட்டு விட்டார். உண்மையில் லக்ஷ்மியைவிடச் சர்மாதான் கர்மயோகியாய்த் திகழ்ந்தார் !

இன்று ? இந்தக் கடிதத்துக்குப் பதில் சொல்லும் முறையில் அவர் செய்ய வேண்டியதொன்று இருக்கிறது. இந்தக் கடிதத்துக்கு நாயகியாகத் திகழும் லக்ஷ்மியின் உள்ளத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். நாற்பத்தைந்து வயதிலும், இளமையைச் செலவழிக்காததாலோ என்னவோ, பார்ப்பதற்குத் தளதளவென்று இருந்தாள். வீட்டுக் காரியத்திலும் குறைந்தவளா...? இல்லவேயில்லை. அவள் உள் உலகம் தனியே தவிர, தன் கடமையைச் செய்வதில் அவள் தவறியவள் இல்லை.



கமலா தோதாத்ரி

"ம்.... லக்ஷ்மி.... என்னம்மா, சொல்கிறாய்......? புறப்பட்டு வருகிறோம் என்று எழுதி விடவா.....?" என்று கேட்கிறார், சர்மா கனிவாக.

லக்ஷ்மி மென்று விழுங்குகிறாள். என்னத்தைச் சொல்வது? சென்ற பத்து வருடங்களாகவே அவள் பேச்சு மிகவும் குறைந்துவிட்டது. சுருக்கமாக, வார்த்தைகளை அளந்து பேசும் அவள், இந்தத் திடீர் மாறுதலை எப்படி ஏற்கமுடியும்? இப்படியே காலத்தை ஓட்டிவிட்டுப் போய்ச் சேர்ந்துவிடுவோம் என்ற நிலையில் சம்சாரச் சுழலுக்குள் திரும்பவும் தலையைக் கொடுக்கவா?

சர்மா — பாவம், இப்போதுகூட மகளுக்கு விடிவு காலம் வந்துவிட்டதாக எண்ணி மகிழ்கிறார்! அவருக்காவது அவள் இந்தப் புதிய வாழ்வுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆம், அதைத்தான் அவர் விரும்புகிறார்.

லக்ஷ்மி ஒரு வழியாகத் தலையை அசைக்கிறாள் — அவருக்காக. அது சம்மதத்தின் அறிகுறி.

இதோ.... இருபத்தி ஆறு ஆண்டுகளுக்குப் பின் இன்று மீண்டுமொரு பயணம்....வெளி உலகத்தில்தான் எத்தனை மாறுதல்கள்!

சர்மா உட்கார்ந்தபடியே தூங்கி விடுகிறார்! லக்ஷ்மிக்குத் தூக்கம் வரவில்லை. சாதாரணமாக இரவில் அவள் நன்றாகத் தூங்குகிறாளா என்பதே சந்தேகம். தந்தையை உற்று நோக்குகிறாள். வாடிய முகம்; தளர்ந்த உடல். வயதின் முதிர்ச்சியைத் தவிர தன்னைப் பற்றிய கவலையும் அவரை உருக்கிவிட்டது என்று அவளுக்குத் தெரியும். ஆனால் பரிகாரம்தான் என்ன? அம்மா இருந்தால் இந்தக் கண்ணராவியைப் பார்த்துப் பார்த்தே நைந்து போயிருப்பாள். நல்ல வேளை, லக்ஷ்மியைப் பெற்றுப் போட்டுவிட்டுக் 'கட்டையை நீட்டிவிட்டாள்' அவள்!

ரயில் ஓடுகிறது. பசும் வயல்கள், வறண்ட வெளிகள், குன்றுகள், நீர் நிலைகள் — மாறி

மாறி வந்து போகின்றன. ஆனால்.... லக்ஷ்மி யின் வாழ்க்கையில்......? ஒரே ஒரு முறை இடி இடித்தது. அதோடு சரி. அகண்ட பாலைவனத்தைக் கடப்பவனுக்கு மணல் வெளியே தவிர வேறொன்றும் தென் படாதது போல், லக்ஷ்மியும் அந்த இடிக் குப்பின் ஒரே சூனியவெளிக்குள் தங்கிவிட் டாள். சாதாரண இடியா? பெண் என்பவ ளால் தாங்கவொண்ணாத இடி !

எல்லாரையும் போல் லக்ஷ்மிக்குக் கல் யாணம் நடந்தது. கல்யாணத்தின் போது ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்து ஊரே என்னமாய்ப் பிரமித்தது! இந்தக் காலத்துக் கலியாணத்தைப் போலவா? சாம்புவுக்கு வாழ்க்கைப்பட்டபோது உலகம் தெரியாத கன்னியாகத்தான் இருந்தாள். சர்மா மிகவும் கவலைப்பட்டார் — குழந்தை எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறாளோ என்று. அதற்காகக் காலாகாலத்தில் நடக்க வேண்டிய தைத் தள்ளிப் போட முடியுமா ?

லக்ஷ்மிக்கு உலகம் புரிந்தது. கணவன் வீட்டுக்குப் போனவுடன் — புரிய வைத்தவள் அவள் கணவனைப் பெற்றவள். தாயற்ற பெண்ணாயிற்றே என்ற இரக்கம், அவளிடம் கடுகளவுகூட இல்லை. இருக்க வேண்டிய தில்லை என்பது அவள் முடிவு. பிள்ளையைப் பெற்றவளல்லவா, அவள்!

சாம்பு — அவர் செய்த தவறு, லக்ஷ்மிக்கு மாலையிட்டதுதான். அம்மா என்ற வட் டத்தை மீறி வர முடியாத அவர், அந்த வட்டத்துள், லக்ஷ்மியை நுழைக்கப் பார்த்த போதுதான், தவறு புரிந்தது அவருக்கு. புரிந்துதான் என்ன பலன்....? சாம்புவுக்கு வேண்டிய மனைவியாக இருந்தாலும், லக்ஷ்மி மாமியாருக்கு வேண்டாத மருமகளாகவே இருந்தாள். இந்த நிலைமை எத்தனை நாட் களுக்கு நீடிக்குமோ.......?

லக்ஷ்மி சாம்புவுடன் நடத்திய தாம்பத் தியத்துக்குப் பரிசளித்து விட்டாள். நெய்ப் பந்தம் பிடிக்கப் பேரனில்லையே என்ற கவலை விட்டது, கிழவிக்கு. இனி எதற்கு லக்ஷ்மி யின் தயவு......?

லக்ஷ்மி கண்ணீர் வடித்தாள். ஊஹும், கிழவி அசைந்து கொடுக்கவில்லை. அவள் வரைக்கும், தன் மகனுக்கு மனைவி தேவை யில்லை என்றே நினைத்து விட்டாளோ? சர்மாதான் எத்தனை முறை தம் பெண் ணின் வாழ்வுக்காகக் கௌரவத்தை விட்டுச் சம்பந்தியம்மாளுக்கு எழுதியிருப்பார் ?.... ஊஹும், கிணற்றில் கல் போட்ட மாதிரி ஆனதுதான் மிச்சம் !

ஏதோவொரு ஸ்டேஷனில் வண்டி நிற் கிறது. சர்மா இலேசாகக் கண்களை விழித்துப் பார்க்கிறார்.

''லக்ஷ்மி, தூங்கல்லையாம்மா? சித்தே நாழிதான் தூங்கேன்......!'' என்றவர், சோர்வாக மறுபடியும் கண்களை மூடிக் கொள் கிறார். லக்ஷ்மி சர்மாவையே உற்று நோக்கு கிறாள். வெகு நாட்களுக்குப் பின், அவர் நிம்மதியாகத் தூங்குகிறார் போலத் தெரி கிறது. நிறை மாத கர்ப்பிணி திணறுவது போல் திணறுகிறாள், லக்ஷ்மி. சந்தோஷமா, துக்கமா? எதுவுமே புரிபடாத நிலை. விடியற் காலை வேளையில் விழித்தெழும்போது காணும் தோற்றத்தைப் போல் அவள் வருங்காலம் புரிபடாத தோற்றமாகத் தோன்றியது !

வருங்காலத்தை ஏன் சந்தோஷமாக நினைக்கக் கூடாது? கழுகைப் போன்று பிள்ளை யையும் பேரனையும் கட்டிக் காத்த கிழவி கூட போய்ச் சேர்ந்து விட்டாள். இல்லாவிட் டால் லக்ஷ்மியை இப்போதுகூட நுழைய விட்டிருக்க மாட்டாளே! புருஷன்... அப்படி யொரு சொந்தத்தைத் திரும்ப எடுத்துப் போட்டுக் கொள்ள லக்ஷ்மிக்குக் கூச்சமாய்த் தான் இருக்கிறது! அவர் மட்டும் அன்று துணிந்து பெண்டாட்டி என்ற ஆசாபாசத் துடன் ஒரே படியாக நின்றிருப்பாரானால் இந்தக் கதிக்கு ஆளாகியிருப்போமோ என்ற எண்ணத்துடன் அவர் நினைவையும் அழித் துக் கொள்ளத்தான் முயன்றாள், லக்ஷ்மி.... ஆனால்..... ஆனால் அவளால் அழிக்க முடி யாத, மறக்க முடியாத உறவொன்றை விட்டு வந்தாளே, அது..... அதை, அவளால் மனத்தினின்றும் அழித்துக்கொள்ள முடிந் ததா? எத்தனை இரவுகள் கொதிக்கும் வயிற்றையும், துடிக்கும் இதயத்தையும் தாங்கித் தவித்திருப்பாள்? இன்றைய பிர யாணம்கூட அதற்காகவே என்று சொன்னா லும் பொருந்தும்தான்! சர்மா வேண்டு மானால், அவளுக்கு வாழ்வு கிடைத்துவிட் டதே என மகிழட்டும்! அவளைப் பொறுத்த வரை, அவளுக்கு அவள் பெற்ற பிள்ளை கிடைக்கப் போகிறான்! உண்மையில் அவள் உள்ளத்தில் நீறு பூத்துக் கிடந்த தாய்மை தான் விழித்துக் கொண்டு விட்டதுபோலும்!

வண்டி நிற்கிறது. சர்மா விழித்துக் கொள்கிறார். லக்ஷ்மிகூடச் சிறிது கண்

டெலிபோனில்

ஜான்ஸனின் அறிவுரைகள்



வாஷிங்டனில் உள்ள எவரும் தங்களுக்கு விருப்பமான நேரத் தில் இருந்த இடத்திலிருந்தே ஜனாதிபதி ஜான்சன் பேசுவ தைக் கேட்க முடியும். 333—8260 என்னும் எண்ணுக்கு 'டயல்' செய்தால் போதும். உடனே அடுத்த முனையிலிருந்து 'டேப் ரெக்கார்ட்' செய்யப் பட்ட ஜான்சனின் அறிவுரை களோ, அரசியல் பேச்சோ, இலக்கியத் தொடர்பான விளக் கமோ ஏதாவதொரு பேச்சு ஒலிபரப்பப்படும்.

1964ம் வருடம் 'ஜனநாயக தேசியக் குழு'வால் ஆரம்பிக்கப் பட்ட இந்த ஒலிபரப்பில் சில நேரங்களில் மக்நமாரா, டீன் ரஸ்க் முதலியோர் பேசுவதை யும் கேட்க முடியும்.

தகவல்: 'எறும்பு'
ஆதாரம்: 'ராம்ப்ளர்'

ணயர்ந்து விட்டான். தூக்கத்தில்தான், எத்தனை இன்பம்! இருபத்தாறு வருடங்களுக்கு முன் பிறந்த ராஜா குழந்தையாக அவன் கனவில் வரிசைய வருகிறான். வேடிக்கைதான்.

சர்மா சுற்றுமுற்றும் பார்க்கிறார், ஸ்டேஷனுக்கு யாரும் வந்திருப்பார்களா என்று. பிளாட்பாரத்தில் அவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள்.

''ஸார், நீங்கதானே சர்மாங்கிறவர்? கல்லிடைக்குறிச்சியிலிருந்து வரவாதானே?'' என்கிறார் புரோகிதர் ஒருவர்.

''ஆமாம்.... நீங்கள்?...?'' இழுத்தாற்போல் கேட்கிறார் சர்மா.

''வாருங்கள் போகலாம்... எல்லாம் சொல்கிறேன்'' என்றவர் அவர்களை அழைத்துக் கொண்டு போகிறார்.

வேடிக்கைதான்! உடலாலும் உள்ளத்தாலும் பல வருஷங்கள் பிரிந்திருந்தவர்கள், கடவுள் சந்நிதியில் நெய் விளக்கின் ஒளியில்தான் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்...!

நெருங்கிய உறவில் இப்படி ஒரு பிரிவு இருக்க முடியுமா? இருந்துவரன், அந்தத் தெய்வம் பிரித்து வைத்து விட்டுப் பரிகாரமாக இன்று சேர்த்து வைக்கிறது போலும்!

உடலால் ஒன்று சேர்க்கலாம். உள்ளத்தால்....? உடைந்த கண்ணாடியை வஜ்ரம் போட்டு ஒட்ட வைத்தாலும் விரிசல் விரிசல்தானே?

சர்மா கலங்கிய கண்களுடன் சந்நிதியில் நிற்கிறார்.

லக்ஷ்மி உற்று நோக்குகிறாள். யார் வருகிறார்கள்...ம், அவரே தான்... எத்தனை ஆண்டுகள் ஆனாலென்ன? தொட்டுத் தாலி கட்டத் தலையைக் குனிந்து கொண்ட உறவல்லவா? இறைவியின் இறுக்கமான அன்புப் பிடியில் அகப்பட்டுக் கன்றிப் போய் விட்டார்!

லக்ஷ்மி... அவர் அவளையே உற்று நோக்குகிறார், ஆவலுடன்.

மகாலக்ஷ்மியாகத் திகழ்கிறாள் அவள், தீபச் சுடரிடையே! அவருடைய நேர் பார்வை.... அவள் தலை குனிகிறாள் — ஒரு கணம்தான்; மறுபடியும் தலையைத் தூக்கிப் பார்க்கிறாள் — அவளா தலை குனிய வேண்டியவள்...?



சட்டைப் பையில் டெலிபோன்!

அது திப்பெட்டி போல் இருக்கிறது. டெலிபோன் உபயோகிப்பவர்கள் அதைத் தங்கள் சட்டைப் பையில் வைத்துக் கொள்ள வேண்டும். வெளியில் எடுத்துக் கொண்டு போகலாம். அதை வைத்திருப்பவர்களுடன் ஒருவர் பேச வேண்டுமானால், அவருடைய நம்பரை 'டயல்' செய்வார். உடனே பாக்கெட்டில் உள்ள கருவியில் மணி ஒலிக்கிறது. அவர் அருகில் உள்ள ஏதேனும் ஒரு டெலிபோனை எடுத்து எக்சேஞ்ச் மூலமாகத் தம்மை டெலிபோனில் அழைத்தவருடன் பேச முடிகிறது.

ஆனால் இந்தப் 'பாக்கெட் பெல்' வைத்திருப்பவர் 'எக்ஸ்சேஞ்சி'லிருந்து பத்து கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும். இதை ஜப்பானில் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

— சதயம்

அவரருகில்....அருகில் நிற்பது யார்? ராஜா அவன் ராஜாவா...?

அவள் உதடுகள் துடிக்கின்றன. உடல் நடுங்குகிறது. கைகளை நீட்டிய வண்ணம் தாவிப் பாய்கிறாள்! ராஜா...

லக்ஷ்மி கண் விழித்தபோது, அவள் தெய்வ சந்நிதியில் இல்லை. அவர் அவளருகில் அமர்ந்திருக்கிறார். கண்ணைத் திறந்து பார்த்து விட்டு ஆயாசத்துடன் மீண்டும் மூடிக் கொள்கிறாள். அவன்...அவன். அவள் பெற்ற பிள்ளை—அவன் எங்கே?

ஹாலில் யாரோ சுவாரசியமாகப் பேசும் சத்தம் கேட்கிறது. யாருடையது அந்தப் பெண் குரல்? கண்ணைத் திறக்க நினைத்தாள். அவர்....? விழிக்காமலே இருந்து விட்டாள்!

ஹாலிலிருந்து அவர்கள் உள்ளே வரும் அரவம் கேட்கிறது. அடுத்து அவள் நெற்றியின் மீது ஆதரவாகப் படிகிறது, ஒரு மென்கரம். அதை எடுக்க விடாமல் அப்படியே ஒட்டிவைத்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றுகிறது, லட்சுமிக்கு.

லக்ஷ்மி கண் விழிக்கிறாள்.

பனிநீரில் முகிழ்ந்தெழுந்த ரோஜாவைப்போன்று அலர்ந்த அந்த முகம் — அந்தக் குவளை விழிகள் — பரபரப்புடன் லக்ஷ்மியை நோக்குகின்றன.

''எப்படி அத்தை இருக்கிறது, இப்போது?'' தேன் பாகு போன்ற அந்தக் குரலில் லட்சுமியே கரைவது போன்ற பிரமை... அந்தப் பரிவு...அது அவளுக்குப் புதிது! அதில் முழுமையுண்டு; பெண்ணுக்குப் பெண் காட்டும் அந்தப் பரிவில் தான் தாய்மையே ஒலிக்கிறது!

மீண்டும் அசதி, லக்ஷ்மியின் கண்களை மூடுகிறது. மூடிய கண்களுள்ளும் அந்தப் பெண்ணின் உருவம் தெரிகிறது.

சர்மா பொறுப்பை ஒப்படைத்த நிம்மதியில் ஊர் போய்ச் சேர்ந்து விட்டார். — அவருக்குச் சொந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் கால் நிலைக்காது!

லக்ஷ்மி—புது மணப் பெண், புகுந்த வீட்டில் கலங்கி நிற்பது போன்ற நிலை; இவர்கள் யார்? அன்னியரா? சொல்லப்போனால் அவள் இந்த வீட்டு யஜமானி—இதை நினைக்கையில் இதழோ

ரத்தில் சிரிப்பு நகையாடுகிறது. அடேயப்பா! காலமில்லாக் காலத்தில் பூக்கிறமாதிரி...!

“என்ன அத்தை இது? நான் வருவதற்குள் எல்லாக் காரியத்தையும் முடித்துவிட்டீர்களே? எனக்குக் காரியமே வைக்கவில்லையே?” — உரிமையுடன் சிணுங்கியவாறு உள்ளே நுழைகிறாள், சித்ரா.

சித்ரா—

அவள் பிள்ளையை மணக்கப் போகும்— மணக்க வைக்கப் போகும் கொடி! அவளால் லக்ஷ்மியும் மணம் பெறப் போகிறாள்!

கணவருக்கு வேண்டாதவள், ஏன், பெற்ற பிள்ளைகூடத் தாயை அழைக்கவில்லை. சித்ரா— நாளை அவள் மருமகள்; இன்று? மூன்றாமவள்?

ஆனாலும் அவள் லக்ஷ்மியின் தேவையைப் புரிந்து கொண்டவள்.

சித்ரா ராஜாவை விரும்பினாள். பெண்களே இல்லாத வீட்டில் வாழ்க்கைப்படுவது அவளுக்குக் குறையாகத்தான் இருந்தது. தாயற்று, தந்தையின் பராமரிப்பில் வளர்ந்தபோது அவள் மனம் தாய்ப் பாசத்துக்கு மிகவும் ஏங்கியது. ராஜாவையும் தன்னைப் போல் தாயற்றவன் என்று எண்ணினாலும், உண்மை தெரிந்தபோது லக்ஷ்மி அங்கே வந்து இருக்க வேண்டும் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

அழகு, ஆஸ்தி, அறிவு, குணம் — இவற்றோடு கூடிய பெண்ணை இந்த ஒரு காரணத்தால் மறுக்க முடியுமா? லக்ஷ்மிக்கு வாழ்வு!

“சித்ரா, இதோ பாரம்மா, இந்த வீட்டில் உன் மாமனாரும் கணவனும் விரும்பித்தான் இருக்கிறேன் என்று சொல்ல முடியாது உண்மையில், உன்னால்தான்.....ஆம்..ஆனால் நான் இதை எப்போதும் நம்பிவிட முடியுமா?”

“அத்தை, என்னைப் பாருங்கள்...தாயற்ற எனக்கு நீங்கள் தாயாகக் கிடைத்து விட்டீர்கள். இனி, உங்கள் பிள்ளை சொன்னால்கூட உங்களை என்னால் விடமுடியாது!...இந்தப் பாக்கியத்தை நீங்கள் எனக்குத் தரத்தான் வேண்டும்!” என்றாள் சித்ரா.

லக்ஷ்மியால் மறுக்க முடியவில்லை. அவள் தீர்மானித்து விட்டாள் — சித்ராவுக்காக அவள் அங்கே இருக்கப் போகிறாள்!

ஒரு பெண்ணால் குலைந்தது, வேறொரு பெண்ணால் நிறைவுற்றது — இது அவள் வாழ்வு!

காலமும் இதுபோல் மாறலாம். அன்று அவள் கணவனும் பிள்ளையும் மாற மாட்டார்களா?

லக்ஷ்மி பொறுப்பாள்! அதுதான் அவளுக்குக் கைவந்ததாயிற்றே!

படித்துப் பாருங்கள்

திருக்குறள் கதைகள்

“ஆகையால் வாசகர்களே, இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் நீதி என்னவென்றால்.......”

“திருக்குறள் கதை”களில் ஒவ்வொரு கதையின் இறுதியிலும் இப்படி ஒரு வாக்கியம் இருந்தால் சுலபமாகப் போயிருக்கும். சர்ச்சைக்கு இடமிராது. அதற்குப் பதில் ஒவ்வொரு கதையின் ஆரம்பத்திலும் ஒரு குறளைக் கொடுத்து விடுகிறார் ஆசிரியர். சிறு கதையின் மூலம் நீதி புகட்டுவதை விரும்பாதவர் குறளை விட்டு விட்டுக் கதையை மட்டும் படிக்கலாம். நீதியை விரும்புவோர் கதைக்கும் குறளுக்கும் என்ன சம்பந்தம் என்று யோசித்துப் பார்த்து மூளையைக் குழப்பிக் கொள்ளலாம். இலக்கியத் திறனாய்வு செய்பவர்கள் இந்தக் கதைக்கு இந்தக் குறள் பொருந்துமா அல்லது இந்தக் குறளுக்கு இந்தக் கதை பொருந்துமா என்று கச்சை கட்டிக் கொண்டு வாதாடலாம்! இன்னும் சிலர் குறளுக்காக எழுதப்பட்ட கதைகளா? அல்லது கதைகளுக்காகப் பொறுக்கி எடுக்கப் பட்ட குறள்களா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடலாம்! எவ்வளவு சிக்கல்கள் பாருங்கள்!

திருக்குறள் கதைகள் எல்லாமே நன்றாக இருக்கின்றன என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நல்ல கதைகளும் இருக்கின்றன இந்தப் புத்தகத்தில் என்று தைரியமாகச் சொல்லலாம்.

கோபுலுவின் அழகான சித்திரங்களுடன் புத்தகத்தின் முதல்தரமான அமைப்பும் அச்சும் போட்டி போடுகின்றன.

“திருக்குறள் கதைகள்” ஆசிரியர் மணியன்; கிடைக்குமிடம்: ஆனந்தவிகடன், சென்னை—2; விலை: ரூ. 2 50.

பால ராமாயணம்

சென்னை வானொலி நிலையம் வாயிலாக, பாப்பா மலர் மலரும் நேரத்தில் ஒலிபரப்பான பாடல்கள் “பால ராமாயணம்”. ரேடியோ அண்ணா ர. அய்யாசாமி, கம்பனிடம் ஆழ்ந்த பற்று கொண்டு கருத்தூன்றிப் படித்தவர். பாடல்கள் குழந்தைகளுக்காக எழுதப்பட்டவை; அதனால் எளிமையாக உள்ளன. ஆனால் சிறுவர் சிறுமியர் பிற்காலத்தில் கம்பனைப் படித்துச் சுவைக்க ஆவலைக் கிளறும் வண்ணம் பாடல்கள் கருத்துச் செறிவோடும் இலக்கிய மணத்தோடும் அமைந்துள்ளன. சொற்கள் பொருத்தமான விதத்தில் அழுத்தமாக, ஆனால் இயல்பாக விழுந்திருக்கின்றன. உதாரணத்துக்கு ஒருபாடல்:

தூக்கிய வில்லை வளைத்தது காணார்;
தொட்டு நாண்முனை வைத்ததும் அறியார்;
தாக்கின இடியென இற்றது கேட்டார்;
தரையில் வில்லின் துண்டுகள் கண்டார்!

அருமையான பால ராமாயணப் பாடல்கள் ஓவியர் விஜுவின் வண்ணப் படங்களுடன் புத்தக உருவில் வெளியாகியுள்ளன. ஒரே ஒரு குறை, பன்னிரண்டரை ரூபாய் கொடுத்து நமது குழந்தைகளில் பலர் இதனை வாங்க முடியாதே என்பதுதான்!

பிரசுரம்: புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்; 135, பவழக்காரத் தெரு, சென்னை — 1.


நங்கை யிவள் மீது
வீசும் நறுமணம்
ஊங்கள் மீதும்
நேசமுடன்
நெடுநேரம்
வீசாததை
நினைக்கக்
கூசாதோ
நெஞ்சம்!
Lakmé TALC
Lakmé
வான் மணம். மணக்கும்
இக் கணம். சற்றுநேரம் ஆன
பின்னும், இருக்கும். மணிக்கணக்
கான பின்னும் மணக்கும். இதுதான்
லக்மே டால்கம் பவுடர். மேனியோடு
இணங்கிநிற்கும் மென்மையாக. உங்களை
அடைகிறது நான்கு நறுமணங்களுடன்.
லேவெண்டர் வெட்டிவேர் நிர்வாண்
சந்தனம்.
லக்மே டால்கம்

ASP/LT-8/67 TM



ஒருமைப்பாடு வீடு

கோமதி சுவாமிநாதன்

(பேராசிரியர் நீலகண்டன் வீட்டு ஹால். நீலகண்டன் கையி லிருக்கும் புத்தகத்தைப் பார்த்தவாறு குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருக்கிறார். அவர் மனைவி பார்வதி உள்ளிருந்து வருகிறாள்.)

பார்வதி (தயக்கத்துடன்): வானிலே எப்படி இருக்கிறது?

நீலகண்டன் (திரும்பிப் பாராமலே): மப்பும் மந்தாரமு மாக இருக்கிறது. இடி மின்னலுடன் மழை பெய்யலாம். வீட்டுப் பெண்மணிகளுக்கு அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கான பண நிலை எச்சரிக்கை....

பார்வதி: அதான் சொல்லிட்டேனே மழை கொட் டும்னு. பண நிலே ஒரே வரட்சைதான்னு புரிஞ்சுபோச்சு. ஏதோ உங்கள் சிநேகிதர்களுக்கெல்லாம் விருந்து வைக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே என் பதால் கேட்டேன்.

(உள்ளே போகத் திரும்புகிறாள்.)

நீலகண்டன்: இந்தா பார்வதி! ஏன் இத்தனை அவசரம்?...

பார்வதி: எனக்குச் சமையலுள்ளே நிறைய வேலே இருக்கு.

நீலகண்டன்: ஒன் மினிட். 'பெண்கள் உணவுக் கலேயில் மட்டும்தான் வல்லவர்கள் என்பதில்லே. உளவுக் கலேயி லும் தேர்ந்தவர்கள்' என்று ஓர் ஆசாமி எழுதி வைத் திருக்கிறான்.

பார்வதி: உளறல் கலேயில் தலேசிறந்தவனான ஒருவன் தான் அப்படி எழுதியிருப்பான்.

நீலகண்டன்: ஏன் இப்படி முந்திரிக்கொட்டை மாதிரி அவசரப்படறே? நான் கேட்க வந்ததை இன்னும் கேட் கலே! அதாவது நம்ப சக குடித்தனக்காரப் பெண்மணி களுடன் பழக ஆரம்பித்தாயா?

பார்வதி: அந்தப் பத்தாசி பாயோடே இரண்டு நிமிஷம் பேசிக் கொண்டிருந்தேன்!

நீலகண்டன்: பட்டாஸ் பாயா? வெடித்துக் கொட் டிருளா?

பார்வதி: ஐயோ பாவம்! ரொம்பத் தங்கமான பொம்ம ஞட்டி. பத்தாசிபாய்னு பேரு! அவன் குரல் அவனுக்கே கேட் குமோ என்று சந்தேகப்படும் படி பேசுகிறுள்.

நீலகண்டன்: அப்புறம்...

பார்வதி: சர்தார்ஜி சம்சா ரத்துக்கு நாள் முழுதும் ரொட்டி சுடத்தான் நேரம் சரியாக இருக்கும் போலிருக் கிறது. மாடிப் பக்கம் போனுல் அவள் குரல் கேட்கவேயில்லே. சப்பாத்தி மணம்தான் அடிக் கிறது.

நீலகண்டன்: பேஷ்! பேஷ்! சாட்டர்ஜி சம்சாரம்தான் இன் னும் கல்கத்தாவிலிருந்து வந்தே சேரலே!...

பார்வதி: அதோ! அவரே வந்துண்டு இருக்கார்....

(பார்வதி உள்ளே போகிறாள். ரமானந்த சாட்டர்ஜி வருகிறார். ஆங்கிலத்தில் பேசுகிறார்.)

சாட்டர்ஜி: குட்மார்னிங் மிஸ்டர் நீலகண்டன்.

நீலகண்டன்: குட்மார்னிங் பங்கிம் சந்தர் சாட்டர்ஜி!

சாட்டர்ஜி (திடுக்கிட்டு): என் பெயரை அதற்குள் மறந்து விட்டீர்களே? என் பெயர் பங் கிம் சந்தர் இல்லே. ரமானந்த்.

நீலகண்டன்: மன்னிக்கணும்! மன்னிக்கணும்! எங்க பக்கத் திலே எல்லாம் பஜனை நடந்து முடியறபோது 'நம: பார்வதி பதயே' என்ற கோஷம் எழும். அதைத் தொடர்ந்து அடியார் கள் மெய்மறந்து 'ஹர ஹர மகா தேவ' என்று ஆவேசத் துடன் பதில் கோஷத்தைக் கோரஸாக எழுப்புவார்கள். அதுபோல சாட்டர்ஜீன்னதும் எங்கள் நினைவில் பங்கிம் சந் தர் பெயர்தான் தோன்றும்.

சாட்டர்ஜி: இலக்கியத் துறையில் அவர் மகா மேதை! அவர் எங்கே, நான் எங்கே?

நீலகண்டன்: ஏன் மிஸ்டர் சாட்டர்ஜி! ஒரு சின்ன சந் தேகம். பங்கிம் சந்தரோட பல நாவல்களை நாங்கள் தமி ழில் மொழி பெயர்த்திருக் கிறோம்; படிக்கிறோம். இது போல் தமிழ் நாவல்களை வங் காளியில் யாராவது மொழி

பெயர்த்திருக்கிறார்களா? எதையாவது படித்த ஞாபகம் உங்களுக்கு இருக்கிறதா?

சாட்டர்ஜி: மன்னிக்க வேண்டும். விசாரித்துத்தான் சொல்ல வேண்டும். எனக்குத் தெரியாது.

நீலகண்டன்: கரெக்ட். இந்த இலக்கியப் பரிமாறல் ஒரே வழியில் பாய்ந்துகொண்டிருந்தால் பரஸ்பரம் புரிந்து கொள்ள முடியாத நிலைதானே நீடித்துக் கொண்டிருக்கும்?

சாட்டர்ஜி: உங்களிடம் இரண்டு மூன்று ஆணிகள் இருக்குமா? உடனடியாகத் தேவைப்படுகிறது.

(சாட்டர்ஜி ஆணியை வாங்கிக் கொண்டு போகிறார். பார்வதி உள்ளிருந்து வருகிறாள்.)

பார்வதி: என்ன கேட்டு வாங்கிக் கொண்டு போகிறார் சாட்டர்ஜி?

நீலகண்டன்: ஓ!.... இந்த வீட்டு ஆடிட்டர் அம்மாளா? சாட்டர்ஜிக்குச் சுவரிலடிக்கிற ஆணி நாலு கொடுத்தேன். ரசீது ஒன்றும் வாங்கிக் கொள்ளவில்லை. உன் ரிப்போர்ட்டிலே பிரமாதமாக எதையும் எழுதி வைக்காதே !

பார்வதி : ஆணி எதற்காம்? சரி, சரி! காலண்டர்கள் மாட்டத்தான் இருக்கும்..... இந்தோ பாருங்கள்......

(பலதேவ்சிங் வேகமாக வருகிறார்.)

பலதேவ்சிங் (இருவரையும் பார்த்து) : நமஸ்தே! நமஸ்தே!.... நீலகண்டஜீ! ஒரு சின்ன ஹெல்ப் பண்ணணும்.

நீலகண்டன்: காத்திருக்கிறேன். சொல்லுங்கள்.

பலதேவ்சிங்: சுவரில் ஆணி அடிக்கிற சுத்தியல் இருக்கிறதா? சில நிமிடங்களில் திருப்பித் தந்து விடுகிறேன்.

நீலகண்டன்: நான் உடனடியாகத் தருகிறேன். நீங்கள் சாவகாசமாகத் திருப்பிக் கொடுக்கலாம் !

(பார்வதியைப் பார்த்துக் கையை அசைக்கிறார். பார்வதி உள்ளே போய்ச் சுத்தியலை எடுத்து வந்து மேஜை மீது வைக்கிறாள். பல்தேவ்சிங் அதை எடுத்துப் போகிறார்.)

பார்வதி : ஒருத்தர் ஆணி வாங்கிக் கொண்டு போனார். இன்னொருவர் சுத்தியல் வாங்கிக் கொண்டு போனார்.....

நீலகண்டன்: கன்யாலால் ஒருவர்தான் பாக்கி! அநேகமாக அவர் சுவரையே கேட்டாலும் கேட்பார். மனுஷன் எமன்....! ஆயுசு நூறு.... அதோ வருகிறார் பார்.....!

(கன்யாலால் வருகிறார்.)

கன்யாலால்: நமஸ்தே!மா! நமஸ்தே பாபு.....! ஒரு ஸ்டூல் இருந்தால் சில நிமிடங்கள் கொடுத்து உதவுங்களேன்!

நீலகண்டன் : தாராளமாக !.... பார்வதி! ஸ்டோர் ரூமிலே இருக்கு பார். சின்னஸ்டூல். அதை எடுத்துக் கொடு.

(பார்வதி உள்ளே போய் எடுத்துவந்து கொடுக்கிறாள்.)

கன்யாலால்: ரொம்ப தாங்ஸ் பாபுஜீ! டென் மினிட்ஸ்லே ரிடர்ன் பண்ணிடறேன்.

(போகிறார்.)

பார்வதி : சரிதான்! மூன்று பேர்களும் தங்கள் தங்கள் வீட்டில் காலண்டர்கள் மாட்டி அழகுபடுத்தப் போகிறார்கள்.

நீலகண்டன்: அதற்கு நீ ஏன் பெருமூச்சு விடுகிறாய் ?

பார்வதி : அவர்களிடம் உபரியாக ஏதாவது காலண்டர்கள் இருந்தால் கேளுங்களேன்!

நீலகண்டன்: மடத்தனமாக உளறாதே ! நான்தான் ஒரு காலண்டர் விரோதின்னு உனக்குத் தெரியுமல்லவா?... காலையிலே எழுந்தவுடனே கண்ட கண்ட மனித முகத்தில் விழித்துக் கொண்டா வேலையைத் தொடங்க வேண்டும்? சுவாமி படம் என்று கூட நம்பி ஒரு காலண்டரை மாட்ட முடியாத காலமாக இருக்கு....! அந்தச் சுவாமியின் முகத்துக்கு அஸ்திவாரமாக ஏதாவது சினிமா நட்சத்திரத்தின் முகத்தை வைத்துத் தொலைத்து விடுகிறார்கள்....

பார்வதி: உங்க லெக்சரை என்கிட்டேயே ஆரம்பித்து விடுகிறீர்கள். நான் நம் வீட்டுக்காகக் கேட்கவில்லை!.... பால்காரனும், வீட்டு வேலை செய்யும் தாயம்மாளும் காலண்டர் காலண்டர் என்று கண்டத்தில் கைவைக்காத வண்ணம் நச்சரிக்கிறார்கள்.... அவர்களுக்குக் கொடுத்தால்....

நீலகண்டன் : பால்காரனுக்கா....! கொடுக்க வேண்டியதுதான். ஜப்பானியக் கம்பெனிக் காலண்டர் ஒன்றில் கன்றுக் குட்டிப் படம் போட்டிருந்தான். செழிப்பான கன்றுக்குட்டி! தளதள வென்று இருக்கிறது. அதை வாங்கிக் கொடுத்தால் ஒரு வேளை அவன் மாடு உற்சாகத்துடன் பால் கொடுக்குமோ என்னவோ !

பார்வதி : அவனுக்கு ஒன்றும் கன்றுக் குட்டிக் காலண்டர் வேண்டாமாம். சினிமாக்கார காலண்டர் வேணுமாம்.... தாயம்மாவும் அப்படித்தான் சொல்லு.....

நீலகண்டன்: நம்ம இரண்டு பேரையும் யாராவது சினிமாவிலே நடிக்கக் கூப்பிடறானா பாரேன்! நம்ம படங்களையும் காலண்டரிலே போடுவார்கள் இல்லையா?....

பார்வதி: ஆசையைப் பார்க்கலே ஆசையை.......

(சாட்டர்ஜி, பலதேவ்சிங், கன்யாலால் மூவரும் வருகிறார்கள். தாங்கள் வாங்கிப் போன சாமான்களைக் கீழே வைக்கிறார்கள்.)

நீலகண்டன்: ஆளுக்கு எத்தனை எத்தனை காலண்டர்கள்



மாட்டினீர்கள்? ஸ்பேர் காலண்டர் ஏதா வது இருக்கிறதா?

சாட்டர்ஜீ, கன்யாலால், பலதேவ்சிங் : (ஏகோபித்து) : காலண்டரா ?

நீலகண்டன்: ஆமா ! பிறகு ஏன், ஆணி, சுத்தியல், ஸ்டூல் எல்லாம் வாங்கிக் கொண்டு போனீர்கள் ?

சாட்டர்ஜீ: வேட்டி உலர்த்தக் கொடி கட்டினேன். ஆணி தேவைப்பட்டது. இதோ இரண்டு மிச்சம்.

பலதேவ்சிங் : சில சாமான்களை ஜாதிக் காய்ப் பெட்டியில் போட்டுப் பாக் செய்தேன். அதற்கு ஆணி அடித்தேன். சுத்தியல் வேண் டாமா ?

கன்யாலால்: அலமாரி உயரத் தட்டில் புத்தகங்கள் அடுக்கினேன். ஸ்டூல் உதவிற்று.

நீலகண்டன்: பார்வதி ! கேட்டாயா ?

(மூவரும் போகிறார்கள்.)

பார்வதி: கேட்டேன்!.....

நீலகண்டன் : இது ஒருமைப்பாடு வீடாய் விட்டது, பார்த்தாயா? எங்கள் நால்வருக் குமே காலண்டர் மோகம் இல்லை!....

பார்வதி (போய்க் கொண்டே): உங்கள் பெண்ணிடம் சொல்லுங்கள். மொகஞ் சடாரோவில் காலண்டர் அகப்பட்டதா என்று ஆராய்ச்சி செய்வாள்!

(போகிறார்கள்.)

(காட்சி முடிவு)

சிலையைப் பற்றிச் .... சில பேர்!



'ரவுண்டாரு' என்ற மவுண்ட் ரோடின் மையப் பகுதியில் நிற்கும் தமிழக முதலமைச்சர் அண்ணாவின் சிலையை அண்ணாந்து பார்த் துக் கொண்டே இருப்பவர் சிலர். காரை நிறுத்திவிட் டுக் கொஞ்ச நேரம் எட்டிப் பார்த்துச் செல்பவர் சிலர்: காலை ஊன்றிச் சைக்கிளை நிறுத்திக் கொண்டு பார்த் துப் போகிறவர்களும் மிக அதிகம். மாலை நேரத்தில் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து, கீழே உள்ள படிக்கட்டில் வளைவாக உட் காரவும் ஆரம்பித்திருக் கிறார்கள்.

'கையில் வைத்திருப்பது டைரிதானே?' என்று கேட் கிறார் ஒரு வயதான ஸ்திரீ.

'இல்லே அம்மா, அது இருக்குறதுன் புத்தகம்' என்று விளக்குகிறார் உடன் வந்த மகன்.

''கையை ஏன் அப்பா அப்படி நீட்டிக் கொண்டி ருக்கிறார்?''—ஒரு குழந்தை.

''அண்ணா கூட்டத்திலே பேசும்போதெல்லாம் அப் படித்தான் ஒரு விரலைக் காட்டிப் பேசுவார்.''

''அது மட்டும் இல்லே: ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு விட்டோம் என்று சொல்லுவது போலக்கூட இல்லையா?'' இது ஓர் இளைஞன்.

''வேட்டியும் சட்டை யும் வெள்ளையாக இல் லையே'' — இது ஒருவரின் அங்கலாய்ப்பு.

''அப்படி இருந்தால் சிலை போலவே இருக் காது.''

''சிலை கிழக்குப் பக்க மாக இருந்தா ஜோரா இருக்குமே!''

''ஏன் அப்படி?''


''அங்கேதானே உதய சூரியன்!''

''ஒன்னைக் கேட்காமே வெச்சுட்டாங்களே, அடடா!'' கூட்டத்தில் சிறு சிரிப்பு.

''தினம் தினம் மாலையை மாத்தலாம். காயவுடக் கூடாது.''

''ட்ராபிக்குக்கு இடஞ் சல் இல்லாம கொஞ்சம் ஓரமா நின்னு பாருங்க சார்.'' இது பீட் கான்ஸ் டேபிள் சொன்னது.

— பாபு



வெள்ளத்தை உண்டாக்குவது எப்படி?

இரண்டு புகழ்பெற்ற வியாபாரிகள் ரயில் பிரயாணத்தில் சந்தித்துக் கொண்டார்கள். பேச்சுவாக்கில் ஒருவர் சொன்னார்: "போன வருஷம் நெருப்பு விபத்தின் மூலம் இன்ஷூரன்ஸிலிருந்து ஐம்பதினாயிரம் எனக்குக் கிடைத்தது."



மற்றவர் சளைக்கவில்லை. 'எனக்கும் வெள்ள விபத்தில் இன்ஷூரன்ஸ் மூலம் ஒரு லட்ச ரூபாய் கிடைத்தது.'

முதல்வர் சற்று யோசனை செய்துவிட்டுக்கேட்டார். 'ஆமா, நீங்கள் எப்படி வெள்ளத்தை ஆரம்பித்து வைத்தீர்கள்?'



"எங்க வாத்தியாருக்கு மாறுகண்!"

"அதுக்கு நீ ஏண்டா அழணும்? அவ்வளவு குருபக்தியா?"

"பக்கத்து சீட்டு பையன் குறும்பு பண்ணும் போது எனக்கல்லவா உதை விழுகிறது?"

சிறுவன் ஒருவன் தனது விற்பனை வண்டியில் கண்ணாடிச் சாமான்களை வைத்துக் கொண்டு விற்பதற்காகச் சென்றான். வழியில் எப்படியோ வண்டி கவிழ்ந்து கண்ணாடிச் சாமான்களெல்லாம் உடைந்து விட்டன. சிறுவன், முதலாளி தன்னை வேலையிலிருந்து நீக்கி விடுவாரே என்று கூறி அழுதான். சுற்றியிருந்தவர்களில் ஒருவர் மற்றவர்களிடம், 'நாம் நம்மிடம்



இருக்கும் சில்லறையைப் போட்டு இவனிடம் கொடுப்போம். அவன் அதை முதலாளியிடம் கொடுக்கட்டும்' என்றார். மற்றவர்களும் ஒப்புக் கொண்டு அவ்வாறே செய்தனர். எல்லோரும் போன பின்னர் சிறுவனிடமிருந்த பணத்தை அவரே வாங்கிக் கொண்டார். பிறகு "நான் தான் உன்னுடைய முதலாளி என்று யாருக்கும் தெரியவில்லை" என்றார்! - வி. ரமன்

அறுபத்து மூவர்


இத்தாலியில் மாஸிமி என்ற நான்கு வயதுச் சிறுவன் இதுவரை மொத்தம் அறுபத்து மூன்று தடவைகள் தொலைந்து இருக்கிறான். முதல்தடவை அவன் தொலைந்தபோது அவனைக் கண்டு பிடித்த போலீஸார் அவனுக்கு ஐஸ்கிரீமும், மிட்டாயும் வாங்கிக் கொடுத்தார்கள்.




'டிட்பிட்ஸி'லிருந்து எடுத்தெழுதியவர் "ஆவாரா"



வாசனை பற்றிய யோசனை





கே. ராஜாராமநாதன்

பெண்கள் மட்டும்தான் 'சென்டு' போட்டுக் கொள்வார்கள் என்பதில்லை. ஆண்களும் இப்போதெல்லாம் வாசனைத் திரவியங்களை மிகுதியாக விரும்புகிறார்கள். சில மாதங்களுக்குமுன் அமெரிக்கப் பத்திரிகையான 'எஸ்குயர்' ஆண்களுக்கான வாசனைத் திரவியங்களின் விற்பனை ஆண்டொன்றுக்கு அமெரிக்காவில் மட்டும் நாற்பது கோடி டாலர்கள் என்று மதிப்பிட்டுக் கூறியது. வாசனைத் திரவியங்கள் மட்டுமின்றி முகத்துக்கு கிரீம், ஸ்நோ, பவுடர் ஆகியவையும் ஆண்களுக்கென விசேஷமாகத் தயாராகி விற்கப்படுகின்றன.

ஆண்களுக்கான வாசனைத் திரவியங்களின் நறுமணம் சற்றுக் கடுமையானதாகவும் விறுவிறுப்புடன் கூடியதாகவும் இருக்கும். பெண்களுக்கெனத் தயாராகும் சென்டுகளின் வாசனையிலேயே மென்மையையும் கவர்ச்சியையும் உணரலாம்.

இப்போதெல்லாம் ரசாயன முறையில் சென்டுகள் ஏராளமாகத் தயாரிக்கப்படுகின்றன. எனினும், பழங்காலப் பாணியில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களிலிருந்து வடித்தெடுக்கப்படும் வாசனைத் திரவியங்களுக்குத்தான் இன்றும் மதிப்பு அதிகம். மேனாடுகளில் பல்வேறு சென்டுகளை முகர்ந்து பார்த்துத் தராதரத்தை நிர்ணயிப்போர் நிறைய ஊதியம் பெறுகின்றனர்.

சில உயர்தரமான சென்டுகளில் உள்ள மனோரம்மியமான வாசனை திமிங்கிலங்களின் குடலிலிருந்துவருகிறது என்று சொன்னால் நமது பெண்மணிகளில் பலர் சென்டு பூசுவதையே விட்டு விடலாம். ஆனால் இது உண்மை. "அம்பர் கிரிஸ்" என்ற பொருள் நோயுற்ற திமிங்கிலங்களின் குடலிலிருந்து எடுக்கப்படுகிறது. இது பல உயர்ரக சென்டுகளில் நறுமணத்தைக் கூட்டப் பயன்படுத்தப் படுகிறது. இந்த அம்பர் கிரிஸ் என்ற பொருள் கடலில் மிதந்து கொண்டிருக்கும். சில சமயங்களில் திமிங்கிலங்களுடன் போராடி வெற்றி கண்டு குடலிலிருந்து நேரடியாக எடுப்பதும் உண்டு. அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் பஹாமா தீவுகளுக்கருகே இந்த அம்பர்கிரிஸ் சேகரிப்பது ஒரு முக்கிய தொழிலாக விளங்குகிறது. அம்பர்கிரிஸ் மிகவும் மதிப்பு மிக்கது. நிரம்ப விலைக்குப் போகும். இப்பொருள் முதலில் காய வைத்து அரைக்கப்படுகிறது.







தமிழகத்தில் சென்டு போட்டுக் கொண்டு வெளி வரும் சில சஞ்சிகைகளை நாம் முகர்ந்து பார்த்திருக்கிறோம் : ஜெர்மனியில் ஒரு ஸ்தாபனம் நறுமண மூட்டப்பெற்ற நைலான் காலுறைகளைப் பெண்மணிகளுக்கு விற்கிறதாம் !

பிறகு சுத்தமான சாராயத்தை இதில் சேர்த்து ஆறு மாதங்களுக்கு அப்படியே விட்டு வைத்து விடுவார்கள். அதன்பின் அம்பர்கிரிஸ்ஸை வடிகட்டி எடுத்து வாசனைத் திரவியங்களில் சேர்க்கிறார்கள்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் 270 பவுண்டு எடையுள்ள அம்பர்கிரிஸ் பதினெட்டாயிரம் பவுண்டு (பிரிட்டிஷ் நாணயம்) விலைக்கு விற்கப்பட்டது. இப்போதும் ஓர் அவுன்ஸ் சுமார் எழுபது முதல் நூறு பவுண்டு வரை விலை போகும்.


இங்கிலாந்தில் முன்பு பாராளுமன்றத்தில் ஒரு விநோதமான சட்டம் இயற்றப்பட்டது. நாட்டில் உள்ள பெண்கள் யாரும் நறுமணமிக்க வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தி அதன் மூலம் எந்த ஆடவனையும் கவர்ந்து தன்னை மணந்து கொள்ளும்படி செய்யக் கூடாது என்றது அச்சட்டம். அதே சட்டம் வாசனைத் திரவியங்களை எந்தப் புனிதச் சடங்கின்போதும் பயன்படுத்தக் கூடாது என்றது.

அண்மையில் ஜெர்மனியில் பெண்களுக்கான காலுறைகளை நைலானில் தயாரிக்கும் ஒரு கம்பெனி, வாடிக்கைக்காரர்களுக்கு இரண்டுவிதமான காலுறைகளை விற்பனை செய்தது. ஒன்று இலேசாக நறுமணமூட்டப்பட்டது; மற்றது நறுமணமேதும் அற்றது. மற்ற எல்லா விதங்களிலும் இரண்டு ரகமும் ஒரே மாதிரி இருப்பினும் எண்பது சதவீத மாதர்கள் நறுமணமூட்டப் பெற்ற காலுறைகளையே வாங்கினர்.

ஆதிகாலத்தில் டாக்டர்கள் நோயாளியை முகர்ந்து பார்த்தே நோயின் தன்மையைக் கண்டறிய முற்பட்டனர். இது இன்றும் அன்றும் கேலிக்கு இடமானபோதிலும் சில நோய்கள் காரணமாக குறிப்பிட்ட ஒரு மணம் நோயாளியின் உடலிலிருந்து எழும்புவது உண்மையே என்று விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்கின்றனர்.

திருடன் சர்வ ஜாக்கிரதையாக விரல் ரேகை அடையாளங்களையெல்லாம் அழித்து விட்டுப் போனாலும் அவன் விட்டுச் சென்ற இலேசான மணத்தைக் கொண்டு அவனைக் கண்டுபிடிப்பது வருங்காலத்தில் சாத்திய மாகலாம்.

தீர்ப்பு .... (நாடகம்)



நாடகத்தைப் பற்றிய தீர்ப்பையும் ஆரம்பத்திலேயே கொடுத்துவிடலாம்! — 'இது ஒரு நல்ல நாடகம்' என்று.

அம்மன் கோவில் அர்ச்சகர் சிவராம குருக்களாக வருகிறார் 'மேஜர்' சுந்தரராஜன். இதுவரை மேடையில் அவர் ஏற்று நடித்திருக்கும் எத்தனையோ பாத்திரங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பாத்திரம். பஞ்சகச்சமும் குடுமியும், பாண்டு, நைட் கௌனை விடப் பொருத்தமாகத்தான் இருக்கின்றன. 'இவரா மேஜர் சந்திரகாந்தாக நடித்தார்?' என்ற ஐயப்பாடு எழும் வகையில் ஆங்கில வார்த்தைகளே கலக்காத தூய தமிழில் சம்பாஷணைகளையும் அனாயாசமாகப் பேசி நடிக்கிறார். இந்த நாடகத்தை டைரக்ட் செய்திருப்பதும் இவரேதான்.

நாஸ்திக விசுவமாகத் தோன்றும் எஸ். ஆர். வீரராகவன் நெடு நாட்களாகவே மேடையில் தலைகாட்டாமல் இருந்தபோதிலும் அவர் நடிப்பில் மெருகு ஏறியிருக்கிறதே தவிர, தேயவில்லை. நாடகம் பார்க்கிறவர்களையே நாட்டாண்மைக்காரர்களாகக் கோப உணர்ச்சி கொள்ள வைக்கும் அளவுக்கு நடிப்பில் உயர்ந்து நிற்கிறார்.

அப்பாவி ராமுவாகத் தோன்றும் ஸ்ரீகாந்த் ரசிகர்களின் அநுதாபம் அத்தனையும் மொத்தமாகக் கொள்முதல் செய்துவிடுகிறார். ஒருதலைப்பட்சமான ஆனால் வெகு வெகு நளினமான காதல் உணர்ச்சிக்குப் பாத்திரமாகி அவர் தவித்து வெற்றி பெற்றதற்கு (கதையில் அல்ல, நடிப்பில்.) இந்த நாடகத்தின் கதை வசனகர்த்தாவான தூயவன் தைரியமாகப் பொறுப்பேற்கலாம். கனமான கதையும் சுவையான சம்பாஷணைகளும் நன்கு இணைந்திருக்கின்றன.

சிவராம குருக்களின் மகள் ஜானகிதான் அரங்கில் தோன்றும் ஒரே பெண் பாத்திரம். பாவாடை தாவணியுடன் அடக்கமான கிராமத்துப் பெண்ணாகத் தோன்றும் குமாரி சசிகலா, தான் மேடையில் நடித்துக் கொண்டிருக்கும் நடிகை என்ற உணர்ச்சியைத் தோற்றுவிக்கவே யில்லை. தினசரி நாம் எதிர் வீட்டிலேயோ பக்கத்து வீட்டிலேயோ பார்க்கும் பெண்ணாகவே காட்சியளித்தாள். அவ்வளவு இயற்கை. தோற்றத்தின் இயற்கை நடிப்பிலும் நன்கு கலந்து பரிமளித்தது.

அசல் கிராமக் கதை. நாட்டாண்மைக்காரர்களும் அம்மன் கோவிலும் கிரசினாயில் லாந்தர் கம்பமும் சேர்ந்த சூழ்நிலை. அதற்கேற்பக் குமாரி சசிகலா உட்பட பலர் மேக்-அப் போட்டுக் கொள்ளாமலேயே நடித்தார்கள்.

இதைத் தயாரித்து ரசிகர்களுக்கு அளித்திருக்கும் சாம்பு நடராஜன் நாடகக் கலைக்கு நல்ல பணி செய்திருக்கிறார்.

4 தலைசிறந்த ஏஸிஸி தயாரிப்புகள்

அக்கோஸிட்


(ஆஸிட்டால் பாதிக்கப்படாத ஸிமெண்ட்)



மிகவும் சுத்தமான ஸிலிக்கேட்டுகள் சேர்ந்த அக்கோஸிட் எவ்வளவு சக்திவாய்ந்த ஆர்கானிக் மற்றும் இனார்கானிக் ஆஸிட்களாலும் பாதிக்கப்படாது. ஆஸிட் டாங்குகள் மற்றும் பிக்லிங் டாங்குகள், ஆஸிட் டவர்கள் மற்றும் ஃப்லூம்ஸ்டாக்குகள், ரியாக்ஷன் வாட்கள் மற்றும் டாங்குகள், லாபரட்டரி பெஞ்சுகளின் மேல்பரப்பு, போன்றவைகளுக்கு அக்கோஸிட் சிபாரிசு செய்யப்படுகிறது.

அக்கோஸெட்-50


(மோனோலித்திக் ரிஃப்ராக்டரி ஸிமெண்ட்)



மிகவும் நன்றாக அரைத்த உயர்தர களிமண், அதிக அளவில் அலுமினா கொண்ட சுடவைத்த ரிஃப்ராக்டரிப் பொருள்கள் மற்றும் பிரத்தியேக ரசாயனப் பொருள்கள் கொண்டது அக்கோஸெட்-50. இது அதிகரித்த வெப்பத்தாலும் பாதிக்கப்படாது. உறுதியான இணைப்பு வேலைகளுக்கும், மோனோலித்திக் மற்றும் ராம்ட் லைனிங்குகளுக்கும் இது சிறந்தது.

மிகவும் அதிகரித்த வெப்பம் உள்ள இடங்களில் அக்கோஸெட் ஸுப்பர் உபயோகியுங்கள்.


ஃபயர்ப்ரிக்குகள்



மீடியம், ஹை மற்றும் ஸுப்பர் அலுமினா கொண்ட ஃபயர்ப்ரிக்குகள் நீங்கள் குறிப்பிடும் உருவம், சைஸ் மற்றும் தரத்துடன் செய்து தரப்படும். இவை வெப்பத்தால் ஏற்படும் அழுத்தம் மற்றும் விரிசல் வெடிப்புகளை எதிர்க்கும்.

ஃபயர்க்ரீட்

வார்ப்பு செய்யக் கூடிய ரிஃப்ராக்டரி (பொடி)



உலைகளின் மேல் வளைவுகள், உலைகளின் சுவர்கள், உலை அடுப்பு, முதலியவற்றிற்கு ஏற்றது. இதை வேண்டிய உருவத்தில் வார்ப்பு செய்யலாம். மிகவும் அதிகரித்த வெப்பம் உள்ள இடங்களில் உபயோகிக்க ஃபயர்க்ரீட் ஸுப்பர் கிடைக்கும்.

தொழில் நுட்ப விவரங்கள் இலவசமாகப் பெற எழுதவும்:

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிட்டெட்

பம்பாய் . அஹமதாபாத் . பெங்களூர்
கல்கத்தா . கோயம்புத்தூர்
புது டில்லி . இந்தூர் . கான்பூர்
மதராஸ் . பாட்னா . ஸெகந்திராபாத்

ஏஸிஸி
கட்னி

தி அஸோஸியேட்டெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிட்டெட்

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிட்டெட்

ஏஸிஸி — சிறந்த ஸிமெண்டின் சீரிய சின்னம்

CMI 5407

அப்பாவி அப்பா

காந்தன்



ஸ்டுடியோவில் ஒரே அமர்க்களம். ஒரு பணக்காரர் வீட்டுக் கூடம் செட் போடப்பட்டிருந்தது. அந்தக் கூடம் மிகவும் நாகரிகமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விலை உயர்ந்த சோபாக்களும் நாற்காலிகளும் அழகாகப் போடப்பட்டிருந்தன. ஐம்பது வயது மதிக்கக்கூடிய ஒரு மனிதர் சரிகை வேஷ்டியைக் கச்சமாகக் கட்டிக் கொண்டு சில்க் ஜிப்பாவும், சரிகை அங்கவஸ்திரமுமாக விறுவிறுவென்று வேகமாக அந்த ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக மிருகக் காட்சி சாலையில், கூண்டில் அடைபட்டிருக்கும் புலி மாதிரி உலவிக் கொண்டிருந்தார். (அவர் ரொம்பக் கோபமாக இருக்கிறார் என்று நாம் பொருள் கொள்ள வேண்டும்!) ஒரு புறம் நிருபமா நின்று கொண்டிருந்தாள். தலைவிரி கோலமும், 'கிளிஸரைன்' கண்ணீரும் அவளுக்குத் தனிக் கவர்ச்சியைத் தந்தன. சோகக் காட்சியாதலால் சாதாரணப் புடவை உடுத்தியிருந்தாள்.

டைரக்டர் அந்தக் காட்சியை ஆரம்பித்து வைத்து, "ஓகே! டேக்!" என்று குரல் கொடுத்தார். உடனே விளக்குகள் எரிந்தன. காமிரா இயங்கத் தொடங்கியது.

"அப்பா! என்னை மன்னித்து விடுங்கள். நான் மணந்தால் சேகரைத்தான் மணப்பேன். அவர் குடியிருக்கும் இதயத்தை வேறு ஒருத்தருக்கு எப்படியப்பா கொடுப்பேன், எப்படியப்பா கொடுப்பேன்?" என்று கேட்டு விட்டு நிருபமா தேவி விம்மி விம்மி அழுதாள்.

"கமலா! உன் கண்ணீரைக் கண்டு நான் கலங்கிவிட மாட்டேன். உன் சொற்போரைக் கண்டு நான் சோர்ந்துவிட மாட்டேன். நான் சொன்னால் சொன்னதுதான். நீ உன் அத்தை மகன் ராமுவைத்தான் மணந்து கொள்ள வேண்டும்!" என்று உறுமும் குரலில் கூறினார் பெண்ணின் தகப்பனார்.

இந்தத் தகப்பனார் தம் பெண்ணை ஆரம்பத்திலேயே ஏன் கண்டிக்கவில்லை? தம் பெண் எவ்வளவுதான் குதித்துக் கும்மாளமடித்தாலும் ஏன் என்று கேட்காமல் இருந்தாரே, அது ஏன்? அவள் ரகசியக் காதலைப் பற்றித் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளாமலே இருந்தாரே, ஏன்?

ஏனென்றால், அதுதான் வெள்ளித் திரைத் தகப்பனாரின் வியப்புக்குரிய நிலை!

அவர் பெரிய பணக்காரர். பெரிய பங்களா. இரண்டு கார்கள். ஒரே பெண்; அவள் பட்டப் படிப்புப் படித்தவள்; ரொம்ப இடம் கொடுத்து வளர்க்கப்பட்டவள். ஆண் உடையில் ஓடி வருவாள்; 'சிக்' உடையில் பெண்மையின் வனப்பையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து நிற்பாள்; கையில் டென்னிஸ் ராக்கெட்டும், அரை நிஜாருமாகக் காட்சி தருவாள்; பலவித உடைகளில் தோன்றிப் பலவித நடனங்கள் ஆடுவாள்—ஷேக், ட்விஸ்ட், 'பால் ரூம்' என்று இப்படி மேல்நாட்டு நடனங்கள். கொட்டும் மழையில் காதலனோடு நனைந்து கும்மாளம் அடிப்பாள்; எங்கும் போவாள்; எங்கும் வருவாள்; காதலனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கூச்சமே இல்லாமல் ஊரெங்கும் சுற்றி வந்து, ஒரு 'பார்க்' விடாமல் போய்க் குதிப்பாள். ஒரு முக்கியமான விஷயம். இந்தக் கதாநாயகி குதிக்கும்போது பார்க்கில் கூட்டமே இருக்காது!

இதெல்லாம் ஒன்று, பெண்ணின் தகப்பனாருக்குத் தெரியவே கூடாது. அல்லது தெரிந்தாலும் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளக் கூடாது; கண்டிக்கக் கூடாது! கவர்ச்சிக் காட்சிகளை முன்விட்டு அப்பா அசடனாக வேண்டியதுதான், வேறு வழியில்லை!

படப் பிடிப்பு தொடருகிறது: "அப்பா!" என்றாள் நிருபமா தேவி, துக்கம் தொண்டையை அடைக்க.

"என்னை அப்பா என்று அழைக்காதே! அந்த உறவு அறுந்து போய் விட்டது! என் பேச்சைக் கேட்டு அதன்படி நடந்தால்தான் உனக்கும் எனக்கும் அந்த உறவுமுறை நிலைக்கும். நீ என் வார்த்தையை மீறி உன் விருப்பம் போல் நடப்பதானால் என்னை இந்த வீட்டில் காண மாட்டாய். நான் உன்னைத் துறந்துவிட்டு வெளியேறி விடுவேன்!" என்று இடிக் குரலில் முழங்குகிறார் அப்பா நடிகர்.

○○○

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பது சினிமா உலகில் வரும் தந்தைமார்களுக்குப் பொருந்தாது. அவர்கள் பெற்றெடுத்த செல்வங்களை அவர்களை எதிர்த்துக் கொள்வதுதான் சினிமா உலகின் லட்சணம்.

திடீரென்று 'சல்வார் கமிஸ்' உடையில் தோன்றிக் கதாநாயகி குதித்துக் கொண்டே வந்து, "அப்பா!" என்று கட்டிக் கொள்வாள். அப்பொழுது அவர் பயந்துவிடக் கூடாது; கொஞ்சம்கூடப் பதறவும் கூடாது.

''என்னம்மா, இன்னும் சின்னப் பிள்ளை மாதிரி!'' என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்ல வேண்டும். ''என்ன 'டாடி' இது! இப்படிச் சொல்றீங்க? நான் இன்னும் சின்னப் பெண்தானே?'' என்று அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு மழலை பேசுவாள். அதைச் சகித்துக் கொள்ள வேண்டும்! அதற்காக உருவாக்கப்பட்ட கதாபாத்திரம் தான் அவர்!

இடைவேளை வரும் வரையில் வெள்ளித் திரைத் தகப்பனார் தாம் பெற்ற பெண்ணின் அழிச்சாட்டியங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். இடைவேளைக்குப் பிறகு பொங்கிப் பொரும வேண்டும். ஏனென்று கேட்கக் கூடாது. அது வெள்ளித்திரைத் தகப்பனுருக்கு என்றே ஏற்பட்டுவிட்ட தலைவிதி!

○ ● ○

டைரக்டர் 'டேக்' என்றார். படப் பிடிப்பு தொடர்ந்தது.

''அப்பா, உங்கள் பிடிவாதத்தைத் தளர்த்த மாட்டீர்களா? உங்கள் மகளுக்கு வாழ்வளிக்க மாட்டீர்களா? பிறந்தபோதே தாயை இழந்துவிட்ட என்னைத் தாயும் தந்தையுமாக இருந்து ஒரு கஷ்டமும் தெரியாமல் வளர்த்தீர்களே, அப்பா! அந்த அன்பு மகள் கேட்கிறேன். அந்த ஆசை மகள் கேட்கிறேன். என்னை வாழ விடுங்கள், அப்பா!'' என்று அலறிக் கொண்டே நிருபமா தேவி அப்பா நடிகரின் காலடியில் விழுந்தாள்.

டைரக்டர் ''கட்'' என்றார்.

அப்பொழுது ஆவேசம் வந்தவளைப்போல் நிருபமாதேவியின் தாயார் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடி வந்தாள். ''நீ ஏன்டி அவர் காலிலே விழறனும்? அவரா உனக்குத் தாயும் தகப்பனுமா இருந்து காப்பாற்றினரு? எங்கே, என்னைப் பார்த்துச் சொல்லடி பார்க்கலாம்! அவரு, அதுதான் உன்னைப் பெத்தவரு, உன்னையும் என்னையும் 'அம்போ'ன்னு விட்டுட்டு ஓடிப் போனதிலிருந்து நானல்லவோ உனக்குத் தகப்பனும் தாயுமாயிருந்து காப்பாத்திக்கிட்டு வந்திருக்கேன்? இதென்னடி மாய்மாலம்!'' என்று கனிரென்று பேசி மூச்சு இரைக்கச் சற்று நிறுத்தினாள்.

''அம்மா, என்ன இது? உனக்கு என்ன வந்து விட்டது?'' என்று கலவரத்துடன் கத்தினாள் நிருபமா தேவி.




'' இப்ப நமக்கு ஒரே ஒரு பெண் குழந்தை தானே இருக்கு? இன்னும் 8 மாதத்திலே நம் குடும்பம், அளவான குடும்பமாகப் போகுது!''

வெள்ளித்திரை வெங்கு, ''சபாஷ்! சக்சஸ்! இதுதான் தத்ரூபமான காட்சி! குழந்தை நிருபமா தேவிக்கு இது ஒரு வெற்றிக் காட்சி! டைரக்டர் ஸாருக்கும் இது 'கிராண்டு சக்ஸஸ்!' '' என்று குதூகலமாக ஆரவாரித்தான்.

டைரக்டர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

''மன்னிச்சுடுங்க, டைரக்டர் ஸார்! குழந்தையின் தத்ரூபமான நடிப்பிலே என்னையே மறந்துட்டேன். 'புரொட்யூஸர்' ஐயாவும் மன்னிச்சுக்கணும்'' என்றாள் நிருபமாவின் அம்மா.

''பரவாயில்லே. குழந்தையின் நடிப்பிலே நானே அயர்ந்து போயிட்டேன். நல்ல வேளை! 'டேக்' முடிந்து விட்டது. இந்த ஸீனைப் பிரமாதமாகப் பிடித்தாகிவிட்டது. அதற்கு நீங்களே சாட்சி. உங்கள் பரவசப் பேச்சே பாராட்டுப் பத்திரம் மாதிரியாகி விட்டது!'' என்று டைரக்டர் புளகாங்கிதத்துடன் கூறினார்.





நடுத்தெரு

திரிசங்கு

வெள்ளையம்மா தலையைச் சொறிந்து கொண்டு, எதிரே வந்து நின்றாள்.

''என்னடி, என்ன வேணும்? வந்து நின்னுட்டியே!'' என்று தங்கம் கேட்டாள்.

''ஒண்ணும் இல்லீங்க. ஒரு நாலு நாளு லீவு வாங்கிக் கொடுங்க, எல்லாரிட்டியும் சொல்லி.''

''என்ன விஷயம் ?''

''இந்த ஊரை விட்டு நாலு நாள் சேந்தாப்பலே வெளியே போயி, பத்து வருசம் ஆயிருக்குமுங்க. முன்னே, அவுரு — முத்துவோடெ அப்பா — உசிரோடெ இருக்கறப்ப போனதுதான். அதுக்குப் பிற்பாடு அப்பாலெ இப்பாலெ எங்கிட்டும் போகலீங்க.''

தங்கம் வெள்ளையம்மா வேலே செய்யும் ஏழெட்டு வீடுகளில் ஒன்றுக்குத்தான் எசமானி. எனவே அவள் எல்லா வீட்டுக்குமாக எப்படி லீவு தர முடியும்?

''ஆமாம், எங்கே போகப் போறே ? ஏதாவது யாத்திரையா? அல்லது வேண்டிய ஜனங்க வீட்டிலே கல்யாணம் கார்த்தியா ? திடுதிப்புன்னு நாலு நாள் கிளம்புறியே, வெளியூருக்கு ?''

வெள்ளையம்மா விளக்கினாள். வர்ற விசாலக்கிளமை இங்கிருந்து டூரிஸ் பஸ்ஸா மில்லே, அது ஒண்ணு புறப்படுது. ஸ்ரீரங்கம், சிதம்பரம், திருவண்ணாமலே, சாத்தனூர் அணைக்கட்டாமில்லே, அங்கெல்லாம் போயிட்டுப் பிற்பாடு காஞ்சீபுரம், மதுரை பாத்திட்டு ராமேசுவரம் வரைக்கும் சுத்திட்டு வர்றாங்க. நிறையப் பேரு போறாங்க. டாக்டரு வீட்டுலே 'வேலே செய்யுதே, மூக்காயி, அதுங் கூடப் போகுது. அதுதான் நானும் போய் நாலு இடங்களைப் பாத்திட்டு வரலாமின்னு ஓர் ஆசை.''

''நல்லாப் போய் வா. எனக்கொண்ணும் ஆட்சேபணை இல்லே.''

''ஒரு நாலு நாளைக்கு நீங்க பத்துப் பாத்திரம் தேய்க்கிறது,புடவை துணிமணி தோய்க்கிறது, வீடு கூட்டறதைப் பார்த்துக்குங்க. திங்கக்கிழமை மதியத்துக்கு நான் ஓடியாந்துடறேன்.''

தங்கம் 'சரிடீ சரி' என்று கூறியது, அதற்குள் அவளுக்கு நாலு நாட்களும்தானே வீட்டு வேலே செய்து சமாளிக்க வேண்டுமே என்ற எரிச்சல் வந்த மாதிரி இருந்தது.

''அதுக்கில்லீங்க அம்மா. நீங்க மத்தவங்க வீட்டிலேயும் கொஞ்சம் சொல்லி ஏற்பாடு பண்ணித் தரணுமுங்க. உங்க கணக்கா எல்லா அம்மாக்களும் சரின்னு சொல்லிப்புட்டாப் புறப்பட்டுப் போயிருவேன்.'' வெள்ளையம்மாள் குழைந்தாள்.

''நான் என்ன சிபாரிசு பண்ணறது? நீயே போய்க் கேட்டுக்க'' என்று தங்கம் வெடுக்கென்று கூறினாள். உடனே அவள் மனம் நெகிழ்ந்தது.

''சரி, மூட்டையெல்லாம் கட்டி வச்சிக்க. நான் சொல்லிடறேன் எல்லார் வீட்டிலேயும்.''

வெள்ளையம்மாவுக்கு வெகு சந்தோஷம்.


''சரிங்கம்மா'' என்று நகர்ந்தாள்.

"முத்து வரானா உன்னோடெ? அல்லது நீமட்டும்தான் போறியா?"

"நான் ஒண்டிதானுங்க. அவன் இங்கிட்டே இருக்கட்டும். வீண் செலவுங்க, கூட்டிக் கிட்டுப் போனாப் படிப்பும் கெடும். என்னங் கம்மா சொல்றீங்க?"

தங்கம் தலையாட்டினாள்.

வெள்ளையம்மா சொல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அந்தத் தெருவில் ஏழெட்டு வீடுகளுக்கு வெள்ளையம்மாதான் வீட்டு வேலை செய்பவள். அவள் ஒருத்தி லீவு போட்டால் மறுநாள் காலை அந்த ஏழெட்டு வீட்டு எசமானிகளும் வாளியில் சாணத்தைக் கரைத்துக் கொண்டு வாசலில்



காட்சியளிப்பர். அவர்களுக்கு அவள் வெகு நாளத்துப் பழக்கம். காளிமுத்து — வெள்ளையம்மாவின் புருஷன் — இருக்கிற நாளிலேயே நடுத் தெருவில் அவள்தான் பல வீடுகளுக்கு வேலைக்காரி. அவள் புருஷனும் கூடமாட இருந்து சில வீடுகளில் தோட்ட வேலை முதலியன செய்து வந்தான். திடுதிப்பென்று சீக்குக் கண்டு அவன் இறந்து போகவே, வெள்ளையம்மாவையும், அவர்கள் பையன் முத்துவையும் காப்பாற்றும் பொறுப்பை நடுத்தெரு ஏற்றுக் கொண்டு விட்டது. "நீ ஒண்ணும் கவலைப்பட வேணாம். முத்துவை வச்சுக்கிட்டு, ஒரு விசாரமும் இல்லாமெ நீ எங்களோட தங்கிடு" என்று அப்போது உறுதி கூறி ஆறுதல் சொன்னது தங்கம்தான் என்று வெள்ளையம்மாவுக்கு அந்த எசமானியின்மீது தனிப் பிரியம். அந்த ஏழெட்டு வீடுகளிலும் பத்துப் பாத்திரம் தேய்த்து, வீடு வாசல் கூட்டி மெழுகி, துணிமணி துவைத்துப் போட்டு, கிட்டிய காசில் அம்மாவும் பிள்ளையும் வாழ முடிந்தது.

வெள்ளையம்மா தெருவுக்கே வேலைக்காரியாகப் போயினும், அத்தனை வீட்டுக் குழந்தைகளுக்கும் அவள் மேல் உயிர். எதுக்கானாலும் அவர்களுக்கு வெள்ளையம்மாதான் வேண்டும். பூ வைத்துப் பின்னி விடுவாள். மருதோன்றி அரைத்துக் கை விரல் பத்திலும் பற்றிக் கொள்ளுமாறு பூசி விடுவாள், பெண் குழந்தைகளுக்கு. ஆண் குழந்தைகளுக்குப் பம்பரத்துக்கு ஆணி போட்டுத் தருவாள்; பட்டம் பண்ணிக் கொடுப்பாள். — இப்படி எல்லோருக்குமே உதவியாக இருப்பாள். முத்துவை அம்மாக்காரிக்கும் ஒரு படி மேல் என்று கூற வேண்டும். அவன்தான் நடுத் தெருக் குழந்தைகளுக்கே தலைவன் எனலாம்.

பட்டம் விடுகிற காற்றுக் காலம் முடிந்து விட்டது என்று முத்து கூறிவிட்டால் பட்டங்கள் நின்று, 'கிட்டிப் புள்' தொடங்கும். தெரு நெடுக எங்கும் கிட்டிப் புள் ஆட்டமாக இருக்கும். ஓயாது, பத்து நிமிஷங்களுக்கு ஒரு தரம் 'முத்து முத்து' என்று அவனை அவர்களுக்கு அழைத்தாக வேண்டும். அவன் மேல் அவர்களுக்கு அவ்வளவு பிரியம்!

2

ணொள் — ணொள் — ணொள் — ணொள்!

காலையிலிருந்தே வாசலில் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. தங்கம் எட்டிப்

பார்த்தாள். குரைத்துக் கொண்டிருந்தது எப்போதும் தெருவிலே காணப்படும் சிவப்பு நாய்தான்; சற்று மெலிந்து காணப்பட்டது. குழந்தைகள் எல்லோரும் நாயைச் சுற்றி நின்றனர்.

"வீணா அதுங்கிட்டே சீண்ட்ரம் பண்ணாதீங்கோ" என்று தங்கம் உரக்க அதட்டல் போட்டாள்.

"நாங்க ஒண்ணும் சீண்ட்ரம் பண்ணலே" என்று அவ்வீட்டுப் பிள்ளையாண்டான் மூர்த்தி பதில் சொன்னான்.

"பின்னே ஏன் அது ளொள் ளொள்னு கத்திண்டே கிடக்கு?"

"நாய் ளொள் ளொள்னு கத்தாமே, பின்னே மேமேன்னு கத்தும்?" — எதிர்த்துக் கேட்டவன் எதிர்த்த வீட்டு யாமுனன். ஒரே சிரிப்பு, தெருவே அதிரும்படியாக. எல்லாக் குழந்தைகளும் இடி இடியென்று சிரித்து விட்டதில் தங்கத்துக்கு ஒரு வினாடி முகம் சிறிதாய்விட்டது.

"யாமுனன் தானே சொன்னது? வரவர அவனுக்குக் கொழுப்பு ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. அவன் அம்மாகிட்டே சொல்லி, செம்மையா அடி வாங்கி வைக்கிறேன்." தங்கம் உள்ளே சென்று விட்டாள்.

ளொள் — ளொள் — ளொள் — ளொள்!

மீண்டும் நாயின் குரைப்பொலி தொடங்கியது.

இப்போது வீட்டு எசமானர் வந்து எட்டிப் பார்த்தார்.

"டேய், ராதா மாமா வந்து பார்க்கிறார். நாயை விட்டுடுவோம்" என்று இரகசியமான குரலில் மூன்றும் வீட்டுக் கோமளி சொன்னாள். அவளுக்கு 'ராதா மாமா' என்றால் அவ்வளவு பயம். வேறொன்றுமில்லை. காரணம் "ஏண்டி கோமாளி" என்று அவர் அவளை எப்போதும் பரிகாசம் செய்வார். அதனால் அவரைக் கண்டாலே அவளுக்கு வெட்கம், பயம், எதிரே நிற்கத் தயக்கம் எல்லாம்!

"என்னடா பண்றீங்க நாயை எல்லாருமாச் சேர்ந்து?" என்று ராதா மாமா ஆகிய காஷியர் ராதாகிருஷ்ணய்யர் உறுமினார்.

'ஒண்ணும் பண்ணலே மாமா" என்று எவனோ பதில் கூற, அவர் விடாமல், "பின்னே, அது ஏன் வள்வள்னு குரைச்சிண்டே இருக்கு அப்போ பிடிச்சு?" என்று கேட்டார்.

யாமுனன் குரல் அவரைச் சமாளித்தது. "வள் வள்னு குரைக்கலே, மாமா. ளொள் ளொள்னு குரைக்கிறது?" ஒரே சிரிப்பு.

"உனக்கு உடம்பு துளுத்துப் போச்சுடா!" என்று கூறிவிட்டு அவர் உள்ளே சென்று விட்டார்.

ளொள் — ளொள் — ளொள் — ளொள்!

பழையபடி உள்ளேயிருந்து தங்கம் வெளியில் வந்தாள்.

"ஏண்டா, நாயைப் பிடிச்சுக் கட்டிப் போட்டு என்னவோ பண்றேள்? எங்கேயாவது மேலே புடுங்கி வைக்கப் போறது?" என்று கூறியவாறு அங்கே கவனித்தாள். முத்து நடுநாயகமாக அமர்ந்திருந்தான். அவன் அருகே சிவப்பு நாய் அமர்ந்திருந்தது. சுற்றிலும் முத்துவின் சகாக்கள், சீடர்கள்!

"என்ன பண்ணிண்டிருக்கேள் எல்லோருமா?"

"ஒண்ணும் இல்லேம்மா. நம்ம சேப்பு நாய் இருக்குதில்லே, அதுக்கு உடம்புலே சொறி மாதிரி இருக்குது. அதுதான் மருந்து போடறோம்" என்றான் முத்து.

"ஏதுடா மருந்து? என்ன மருந்து அது?" என்று எதிர் வீட்டு யாமுனனின் தாயும் வந்து சேர்ந்து கொண்டாள்.

"டாக்டர் மாமா ஆத்துலேந்து கோமளி வாங்கிண்டு வந்தாள்" என்று ஒரு குரல் கூறியது.

"ராஜ வைத்தியம்தான் நடக்கிறது. தெரு நாய்க்கு. பாத்தியா தங்கம், இந்தக் கூத்தை?" என்று சுதா — யமுனனின் தாயார் தங்கத்தைப் பார்த்து வியந்து கொண்டாள்.

"என்ன வேணாலும் பண்ணட்டும். நாய் பிடுங்காமல் இருந்தாச் சரி" என்று தங்கம் முடித்தாள்.

இப்போது முத்து பேசினான். "சொறி புடிச்சாத்தான் கடிச்சுடும் நாய். இல்லாட்டி ஒண்ணும் பண்ணாதம்மா. அதுனாலேதான் காயத்துக்கெல்லாம் மருந்து போட்டுக் கட்டறோம், சொறி புடிக்காமே இருக்கட்டுமின்னு!"

எல்லாப் பிள்ளைகளும் முத்துவைச் சுற்றி வாலைச் சுருட்டிக் கொண்டு அமர்ந்திருந்த அழகே போதும் எனும்படியாக அந்தக் காட்சி இருந்தது.

"இன்னிக்கு உங்களுக்குப் பள்ளிக்கூடம் ஒண்ணும் கிடையாதா?" என்று இடறென்று மூன்றும் வீட்டுக் கோமளியின் தகப்பனார் வந்து விரட்டல் போட்டதும், ஒரு கணம் குழந்தைகள் ஒடுங்கிப் போயினர். "இன்னிக்குத்தான் லீவு ஆச்சேடா? ஏண்டா பயப்படறே சொல்ல?" என்று எவனோ நினைவூட்ட, யாமுனன் சொன்னான்: "காதுலே விழுந்துதா மாமா? இன்னிக்கு ஸ்கூல் லீவு."

"எதுக்குடா லீவு இன்னிக்கு? நாய்க்கு மருந்து போட்டுக் கட்டறதுக்கா?"

அந்த வீட்டினுள்ளிருந்தே பதில் வந்தது. "பக்கத்து ஊர் திரௌபதியம்மன் கோவில் திருவிழா இல்லியா இன்னிக்கி? உங்க ஆபீசுக்கெல்லாம்தான் ஒண்ணுமே கிடையாது. குழந்தைகளுக்கு லீவு விடமாட்டாளா தேர், திருவிழான்னு?"

அவர் உள்ளே சென்றுவிட்டார்.


"மாமி என்னவோ கோவிச்சிண்டாப் போலிருக்கு. அதுதான் மாமா ஒண்ணும் பேசாமே உள்ளே ஓடிவிட்டார்" என்று யாமுனன் கூறவே, எல்லாரும் 'கொல்' லென்று சிரித்தனர்.


முத்துகூடச் சிரித்து விட்டான்.

3

ஜிலுங் ஜிலுங்கென்ற ஓசையுடன் பெரிய மாடுகள் இரண்டு பூட்டிய வண்டி கிளம்பியது.

"குழந்தைகளா, சமத்தா இருங்கோ. நாங்கள்ளாம் எட்டு மணிக்குள்ளே வந்துடறோம்" என்று வண்டியினுள்ளிருந்தபடியே தங்கம் நடுத் தெருக் குழந்தைகள்


உங்கள் வாட்டத்துக்கு காரணம் நாளைக்கு பெண் பார்க்க வருவதால்
கவலை வேண்டாம்! ரூ 5000ம் மதிப்புள்ள நகைகளை ரூ 2.50ல் பெறலாம்!! அலிமா தங்க கவரிங் நகைகள் தங்க நகைகள் போல் உழைப்புள்ளவை, உடனடியாகவும் வாங்கலாம்!
அப்படியா!
உன் உகந்த யோசனைக்கு என் பாராட்டு!
பாராட்டு எனக்கு வேண்டாம், அலிமா தங்க கவரிங் நகைகளுக்குச் சொல்லுங்கள்!



PBL

கல்யாண விசேஷ விற்பனை!

காஞ்சிபுரம்
பனாரஸ்
பட்டு சேலைகள்
மற்றும்
மில் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

பனகல் பார்க், தி.நகர், சென்னை-17 · போன்: 443435
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. போன்: 86966

தயாரிப்பு நிலையம்:

15, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம் - போன்: 562

RAE/PB/2

அவ்வளவு பேரையும் பார்த்துக் கூறுகிறாற் போலச் சொன்னான்.

''கோமளி, சமத்தா இருடி. முத்து, பார்த்துக்கோடா எல்லாரையும்'' — இது கோமளியின் அம்மா.

''சரிங்கம்மா'' என்று முத்து தலையை அசைத்தான்.

''யாமுனனைக் கவனிச்சுக்கோ. அவன் ஊர் மேயப் போயிடுவான்'' என்று அவனுடைய தாயார் கூறவே, அவன், ''ஆமா மாம்'' என்று முகத்தில் அழகு காட்டினான். வண்டி புறப்பட்டது.

''முத்து, யாமுனன், கோமளி, மூர்த்தி, ராதை, பட்டு, பாரதி, ரேவதி, நீலகண்டன்—எல்லாரையுமே சொல்றேன். நாய்கிட்டே சீண்ட்ரம் பண்ணாதீங்கோ. ஒரு சமயம் போல இருக்காது. எங்கியாவது புடுங்கி வைக்கப் போறது'' என்று எச்சரித்துவிட்டு வண்டிக்காரனை நோக்கித் தங்கம், ''ஓட்டு, போகலாம்'' என்று உத்தரவிட்டாள்.

வண்டி நகர்ந்தது.

வருடா வருடம் திரௌபதியம்மன் திருவிழாவுக்குப் பெரிய இரட்டை மாட்டு வண்டி கட்டிக் கொண்டு நடுத்தெருப் பெண்டிர் அந்த ஏழெட்டு வீடுகளிலிருந்தும் போய் வருவதுண்டு. முன்பு ஆட்டுக்கடா வெட்டிப் பலி கொடுப்பதெல்லாம் இருந்தது. அந்த வழக்கம் யாவும் நின்ற பின்பும் குழந்தைகள் பயப்படும் என்று எண்ணித் தாய்மார்கள் அவர்களை வீட்டில் விட்டுவிட்டுப் போவது வழக்கம். அத்தனை வால்களுக்கும் வண்டியில் இடம் இல்லாதிருப்பதும் காரணமாய் இருக்கலாம்.

இப்பொழுது வண்டி முழுச் சுமையுடன் அம்மன் சந்நிதானத்தில் போய் நின்றது. கூட்டமாவது கூட்டம். சொல்லி முடியாது. வெகு நேரம் நின்று, முன் சென்று தேங்காய், பழம், பாக்கு வெற்றிலையைப் பூசாரியிடம் நீட்டி அர்ச்சனை போலப் பண்ணி வாங்குவதற்குள் மணி ஏழு ஆகிவிட்டது. அடுத்தடுத்து ஒவ்வொருவர் தட்டாக அம்மன் அருகே வரை சென்றுவிட்டுத் திரும்பக் கால் மணியாகியது.

தங்கத்தின் தாம்பாளம் பூசாரியிடம் சென்றிருந்த சமயம், பின்னால் ஏதோ கசமுசப்புக் காதில் விழுந்தது. ஜனங்கள் தம்முள் பேசிக் கொண்டது வீணில் விஷயம் பிரசாரம் அடைய வேண்டாம் என்பது போல இருந்தது. ஆயினும் செய்திகளுக்குத் தான் கால்கள் நிரம்ப உண்டே? நடுத்தெரு கோஷ்டியில் எவளோ ஒருத்தியின் காதில் விழுந்தது. நேடுகச் சென்று விட்டது.

''சித்தெ முன்னாடி நடுத்தெரு அக்ரகாரத்துலே சொறி நாய் ஒண்ணு யாரையோ குழந்தையைக் கடிச்சுடுத்தாம். தெருவிலே எல்லாருமா விளையாடிண்டிருந்துதுகளாம். ஆம்புலன்ஸ் வண்டிக்குச் சொல்லி அனுப்பி இப்பத்தான் போறதாம்.''

இதுதான் காதில் விழுந்த செய்தி. நடுத்தெருக் கோஷ்டி அப்படியே அர்ச்சனையைப் பாதி ஆனதும் ஆகாததுமாக முடித்துக்கொண்டு, தட்டுத் தாம்பாளங்களை வாரிச்



''என் குழந்தைகளைப் பார்த்தியா? எங்களை விட உயரமாக வளர்ந்திருக்குதுங்க!''

''ரொம்ப சரி, செட்டியார்வாள்! அசலைவிட வட்டி வளர்ந்துடறதில்லையா?''

சுருட்டி வண்டியில் போட்டுக் கொண்டு தலைதெறித்தாற்போல் ஓடியது. நடுத்தெருவே அடித்துப் போட்டாற்போல் அமைதியாகக் காட்சி யளித்தது. வண்டி ஜிலுங் ஜிலுங் கென்று ஆடி அசைந்து கொண்டு போய் நிற்கவே, தொப்புத் தொப்பென்று உள்ளேயிருந்தவர்கள் அனைவரும் குதித்துத் தத்தம் வீட்டினுள் பாய்ந்தோடினர்.

தங்கம் வாசலில் மூர்த்தியைக் கண்டதும் 'அப்பாடா' என்று ஒரு பெருமூச்சு விட்டாள்.

''முத்துவைக் கடிச்சுடுத்து சேப்பு நாய். அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கா'' என்று மூர்த்தி கூறவே, தங்கம் நெட்டுயிர்த்தாள், காலம்பரலேந்து அந்த நாய் கிட்டே சீண்ட்ரம் பண்ணாதீங்கோ, வேண்டாம், ஒரு சமயம் போல இருக்காதுன்னு அடிச்சிண்டேன். கேட்டாத்தானே? பாவம், எல்லாரையும் விட்டுட்டு அவனைக் கடிச்சு வச்சதாக்கும், அவன் அம்மா நம்மகிட்டே விட்டுட்டுப் போயிருக்கா அவனை. வீண் பொல்லாப்புத்தான் வரப் போறது!''

மறுநாள் மாலை தங்கம் இன்னும் மூன்று வீட்டுத் தோழிமாரை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். அங்கு முத்துவுக்கு உடம்பு எப்படி இருக்குமோ, ஒருகால் நாய் அவன் காலைக் கடித்துக் குதறிப் போட்டிருக்குமோ என்றெல்லாம் அஞ்சியவாறு அவர்கள் சென்றனர்.

தங்கத்தினால் தன் மனத்தில் உள்ளதை அடக்கிக் கொள்ள முடியாது.

''சுதா! நான் ஒப்புக்கறேன். என்னதான் வெள்ளையம்மா தங்கமானவ, அவ பிள்ளை முத்து மேலேயும் நமக்கெல்லாம் எவ்வளவோ ஆசை உண்டுன்னாலும், யாரையோ நாய் கடிச்சுட்டுதுன்னு காதுலே விழுந்ததும், என் வாய் அம்மன்கிட்டே நம்ம மூர்த்திக்கு

ஒண்ணுமில்லாமே இருக்கணுமேன்னுதான் வேண்டிண்டது.''

சுதாவும் இதே போல் கூறினாள்: ''நான் மட்டும் என்ன வேண்டிண்டேன்? எல்லாம் உன்னைப் போலத்தான். அதுவும் அந்தக் கட்டேலே போறவன் யாமுனன் நாயோ டேயே இருந்தான். அவனுக்கு ஒண்ணு மில்லாமே இருக்கணுமேன்னுதான் எனக்கு விசாரம். வீட்டுலே வந்து இறங்கி, அவனைப் பார்த்தப்புறம்தான் எனக்கு இருப்புக் கொண்டது.

ஒருத்தி உண்மையைச் சொல்ல முன் வந்தால் மற்றவர்கள் பின்பற்றுவதில் என்ன தயக்கம்? ஆம், உண்மைகூட ஒரு தொத்து நோய் போலும். சுதா நிறுத்தியதும் கோமளி யின் தாயும் இதேபோல் தானும் அம்ம விடம் வேண்டிக் கொண்டதைக் கூறினாள்.

''கொஞ்சம் மெதுவாப் பேசடி. இது ஆஸ்பத்திரி'' என்று தங்கம் நினைவூட்டுவதற் கும், ''எங்கே, போயிட்டே இருக்கீங்க நீளமா? நான் இங்கிட்டுப் படுத்திருக்கேன்'' என்று முத்துவின் குரல் அவர்களைப் பற்றி நிறுத்துவதற்கும் சரியாக இருந்தது. ஒரு கணம் சுதா தன்னையறியாது, ''நாமபாட் டிலே இரைஞ்சு பேசிண்டே வந்தோமே. முத்துவோட காதிலே விழுந்திருக்குமோ, என் னவோ? அவன் ரொம்ப சமர்த்து. நம்மை யெல்லாம் 'கடைசிலே இவ்வளவுதானா இவாள்ளாம்'னு நெனைச்சிருப்பான்'' என்று வருத்தம் தெரிவிக்கும் குரலில் பேசினாள்.

முத்து, ''நீங்க ஒண்ணும் பயப்பட வேணாம்மா. இன்னும் ரெண்டு ஊசி போட்டு ஞாயித்துக்கிழமை கார்த்தாலே என்னை அனுப்பிடுவாங்க. டாக்டர் சொன்னாரு'' என்று அவர்களுக்குத் தைரியம் ஊட்டினான்.

தங்கம் சொன்னாள்—''உங்கம்மா வர்றதுக் குள்ளே வீட்டுக்கு வந்து சேர்ந்துடு, முத்து. வெள்ளையம்மாவுக்கு நாங்க உன்னைப் பத்திப் பதில் சொல்லி மாளாது.''

முத்து சிரித்தான். ''போங்கம்மா, உங்களை யெல்லாம் எங்கம்மா என்ன பண்ணிட முடியும்? நீங்க எங்கம்மாகிட்டே பயப்படறாப் பலே பேசறீங்களே.''

அவர்கள் முகம் அசடு வழிந்தது.

தங்கம் சுதாவைப் பார்த்தாள். சுதா கோமளியின் தாயைப் பார்த்தாள். அவள் இன்னொருத்தியைப் பார்த்தாள்.

''கவலைப்படாமே போங்கம்மா!'' என்று முத்து கூறவே, அவர்கள் ''சரிடாப்பா!'' என்று விடைபெற்றுக் கொண்டனர்.

4

வெள்ளையம்மா வந்துவிட்டாள்.

முத்து பக்கத்தில் அமர்ந்திருந்தான். அவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, யாரும் வரவில்லையே என்று கவனித்துக் கொண்டு, பேசலானான்.

''அம்மா, இந்த மாதிரி என்னைத் தனியா விட்டுட்டுப் போகாதே இனி. நான் இருக்க மாட்டேன்.''

'என்ன பேச்சிது?' என்று அவனை வெள்ளை யம்மா வியப்புடன் நோக்கினாள்.

''ஆமாம்மா, நான் தனியா இனி இருக்க மாட்டேன்.''

என்னதான் ஊருக்கே சமர்த்தானாலும், தாய்க்குப் பிள்ளைதானே?

''ஏண்டா, என்னா வந்திரிச்சு?''

''ஆமாம், உனக்குத் தெரியாதம்மா. நாய் கடிச்ச சங்கதி காதுலே விழுந்தப்ப, நம்ம தங்கம்மா — சுதாம்மா — எல்லாரும் நாய் தங்க வீட்டுப் பிள்ளையைக் கடிச்சிருக் காம இருக்கோணுமின்னுதான் வேண்டிக் கிட்டாங்க.''

வெள்ளையம்மா வாயைப் பிளந்து கொண்டு கேட்டாள்.

''என் காதாலே கேட்டேன். தங்கம்மா சொன்னாங்க, மூர்த்தியை நாய் கடிச்சிருக்கப் படாதின்னு வேண்டிக்கிட்டதாக. இதே கணக்கா சுதாம்மா, எல்லாரும் சொன் னாங்க. நான் கட்டில்லே படுத்திருக்கறப்ப, அவங்க இப்படிப் பேசிக்கிட்டே போனாங்க. நான் அம்பிட்டும் கேட்டேன். இல்லாட்டி, சொல்லுவேனா?''

வெள்ளையம்மாவின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

''போடா, பைத்தியக்காரா! துளியுண்டு இருந்துக்கிட்டு, என்னவோ பெரியவங்க மாதிரிப் பேசிக்கிட்டு இருக்கியே!'' என்று அவள் அவன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி இட்டாள்.

பயணத்துக்குக் கொண்டு போன பையை அவள் காலிலே செய்து கொண்டிருந்தாள்.

''நீ முதல்லெ ஒரு வேலை செய்யி. இந்தா!'' என்று பையினுள்ளிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை வெளியே எடுத்தாள். முத்து ஆவலோடு கவனித்தான். பொட்ட லத்தைத் திறந்தால், உள்ளே பிளாஸ்டிக் மோதிரங்கள் இருந்தன. வெள்ளையம்மா பேசினாள்—'விபூதி, குங்குமம், துளசி—பிரசாத மெல்லாம் நானே குடுத்துடறேன். நீ போய் இந்த மோதிரத்தை, எல்லாப் புள்ளைங்க கிட்டேயும் குடுத்திட்டு வா. இது மூர்த்திக்கி, இது கோமளிக்கி, இது யாமுனனுக்கு....'' இப்படி எல்லாக் குழந்தைகள் பேரையும் சொல்லி ஆளுக்கொரு மோதிரம் எடுத்து வைத்தாள்.

''ஏதும்மா இது?'' — முத்துவின் வியப் புடன் வந்த கேள்வி இது.

''ராமேசுவரத்திலே வாங்கினேன். ராமர் போட்ட மோதிரம்; ஒண்ணு இருபது காசு. நம்ம புள்ளைங்களுக்கு எதிரைச்சும் வேணுமான்னிட்டு வாங்கியாந்தேன்.''

''மொத்தம் எத்தினியம்மா?''


''பத்து வாங்கியாந்தேன். நான் வேலை செய்யற எட்டு வீட்டிலியும் இருக்கற புள் ளைங்க பத்துப் பேருக்கும்!''

முத்துவின் குரல் தழுதழுத்தது—''எனக்கு இல்லியாம்மா?''

வெள்ளையம்மா வெலவெலத்துப் போனாள்.

''என் மூளையெச் சொல்லணும்! மறந்தே போயிட்டேன் முத்து, உன்னை. நீ வருத்தப் படாதே, இதுக்காவ!''

முத்து வருத்தப்பட்டானா? தெரியாது!



மனைவி மத்தாப்பூ கணவன் என்ன?

திருமண வாழ்க்கை என்பது ஒரு வெடிக் கடை. இதில் மனைவி முதல் ஆண்டு மத்தாப்பாக இருக்கிறாள். கணவன் சடபுடா வெடியாக இருக்கிறான். பிறகு குழந்தைகள் என்ற சீன வெடி ரகத்தைக் கொளுத்தியதும் மனைவி அதிர்வேட்டாகிறாள். கணவன் புஸ்வாணம் ஆகி விடுகிறான்!

அனுப்பியவர் ச. கணேசன்


மணமானவள் என்று தெரிந்தால்....!

ஆன்ட்வெர்ப் நகர இன்ஷ்யூரன்ஸ் காரியாலயம் ஒன்றின் அதிகாரி தங்கள் காரியாலயத்தில் வேலை செய்யும் பெண்களுக்கெல்லாம் விநோத உத்தரவு ஒன்று போட்டுள்ளார். பெண்கள் எல்



லோரும் தங்களது அலுவலக மேஜை மீது தங்களது கணவர் அல்லது குழந்தைகளின் புகைப் படத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அந்த உத்தரவு. இதற்கு அவர் கூறும் காரணம்: "மணமான பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தால் ஆண்கள் தாங்கள் வந்த வேலையில் கவனமாயிருப்பார்கள்."

ஆதாரம் ராம்பினர்
தகவல் ச. ஸ்ரீதரன்



எம். பி.க்களுக்கு மட்டும்!

லண்டனில் உள்ள உள்துறை இலாகா, அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஆபாசப் புத்தகங்கள் மட்டும் கொண்ட நூல் நிலையம் ஒன்றைத் திறந்திருக்கிறது. இதில் அனுமதி எம். பி.களுக்கு மட்டும்!

தகவல் எறும்பு - ஆதாரம் லிங்க்



பிச்சைக்காரன்: பசி உயிர் போகிறது சார்!

வீட்டுக்காரர் (இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட்): சீக்கிரம் ஒரு பாலிஸி எடுத்துக் கொள்!

இதுவும் ஒரு சாதனைதான்!



-முகுந்தன்-

இங்கிலாந்தில் ஒரு மதுபானக் கடை.

இரண்டு குடிப் பிரியர்கள் உரத்த குரலில் ஏதோ வாதம் செய்து கொண்டிருக்கிறார்கள். என்னவென்று அருகில் போய் உற்றுக் கேட்கிறோம்.

''உலகத்திலேயே மிகவும் நீளமான நதி நைல்தான்!.....'' என்கிறார் ஒருவர் அழுத்தந் திருத்தமாக.

''இல்லை. அமேஸான்தான்!....'' என்று அடித்துப் பேசுகிறார் மற்றொருவர்.

வாய்ச் சண்டை முற்றி, கைச் சண்டையாக மாறுகிற வரையில் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் கடைக்காரர், சட்டென்று ஒரு புத்தகத்தை எடுத்து அவர்கள் முன் நீட்டுகிறார். இருவரும் ஆவலுடன் பாய்ந்து அதை வாங்கி அவசர அவசரமாகப் புரட்டிப் பார்க்கிறார்கள்.

அந்தப் புத்தகத்திலே அவர்களது சச்சரவுக்கான விடை இருக்கிறது. நைல் நதியின் நீளம் 4164 மைல் என்றும் அமேஸான் நதி ஒன்றில் மட்டும்தான் 3750 மைல் வரை பிரயாணம் செய்ய முடியும் என்றும் அதில் கண்டிருக்கிறது. உலகில் வேறெந்த நதியிலும் அவ்வளவு தூரம் பயணம் செய்வதற்கில்லையாதலால் ஒருவகையில் பார்க்கப்போனால் அமேஸான்தான் நீண்ட நதி என்று கொள்ள வேண்டும்.

இரண்டு குடிகாரர்களும் கூறியது ஒவ்வொரு விதத்தில் சரியாக இருப்பதால் இருவருடைய முகங்களும் மலர்கின்றன. புத்தகத்தைக் கடைக்காரரிடமே கொடுத்துவிட்டு இன்னும் கொஞ்சம் மதுவருந்தச் செல்கிறார்கள், தோளில் கைபோட்டபடி.

பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், பிரான்சிலும், ஜெர்மனியிலும் மதுபானக் கடைகளில் மட்டுமல்லாது பத்திரிகைக் காரியாலயங்களிலும், பொது நூலகங்களிலும் தவறாமல் இடம் பெற்றிருக்கும் அந்தப் புத்தகத்தின் பெயர் —

'கின்னஸ் புக் ஆப் வேர்ல்ட் ரிகார்ட்ஸ்.'

ஒவ்வொரு பதிப்பின்போதும் பத்து லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் இந்தப் புத்தகத்தை வெளியிடுபவர்கள் சாதாரணமாகப் புத்தகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அல்ல. ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய மது உற்பத்தியாளர்களான ஆர்தர் கின்னஸன் அண்ட் கம்பெனிக்காரர்கள்தான்.

உலக சாதனைகளையெல்லாம் — நீளம், உயரம், அகலம், வேகம், ஆழம் என்று பலவிதமாகத் தொகுத்து இப்படியொரு புத்தகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு எப்படித் தோன்றியது?

ஹியூ பீவர் என்று ஒருத்தர். 1954-ல் அவர் இந்தக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக இருந்தார். பீவர் விடுமுறை நாட்களில் பறவைகளை வேட்டையாடப் போவார். அப்படி ஒரு சமயம் போனபோது ஒரு பறவையைக் குறி பார்த்துச் சுட்டார்.



அந்தப் பறவையோ சூப்பர்ஸானிக் விமான வேகத்தில் பறந்தே போய் விட்டது. பறவையைச் சுட முடியாமற் போனதை விட அது எவ்வளவு மைல் வேகத்தில் பறந்திருக்கும் என்கிற குறுகுறுப்பே பீவரின் மனத்தில் மேலோங்கியிருந்தது. ஆனால் யாரைக் கேட்டால் இதற்கு விடை கிடைக்கும்?....

பீவர் பல கலைக் களஞ்சியங்களைப் புரட்டிப் பார்த்தார். பறவைகள் சம்பந்தப்பட்ட நூல்களைப் படித்துப் பார்த்தார். ஊஹூம்; விடை கிடைக்கவில்லை. அப்புறம்தான் தம்மிடம் செய்தி அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சாதேவே என்பவரைக் கேட்டார். இது மாதிரி விஷயங்களையெல்லாம் மாக்விர்டர் சகோதரர்களிடம் கேட்டால், 'டக் டக்' என்று பதில் சொல்வார்களே!.... என்று வழிகாட்டிய சாதேவே அந்த இரட்டையரை மறு நாளே வரவழைக்கவும் செய்தார். மாக்விர்டர் சகோதரர்கள் அந்தப் பறவை எதுவென்றும் அதன் வேகம் என்னவென்றும் பளிச்சென்று சொன்னவுடனேயே பீவருக்கு ஒரு யோசனை தோன்றிவிட்டது: 'இவர்களை வைத்துக் கொண்டு இது மாதிரியான விஷயங்களைத் தொகுத்து வெளியிட்டால் என்ன?'

இப்படித்தான் உருவாகியது இந்தப் புத்தகம்.



மாக்விர்டர் சகோதரர்களின் தந்தை லண்டனில் ஒரு பத்திரிகையாசிரியர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் சகோதரர்கள் 'அதிசயம், ஆனால் உண்மை' போன்ற விவரங்களைத் தொகுத்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் பீவரின் அறிமுகம் அவர்களுக்குக் கிட்டியது. புத்தகம் வெளிவந்தவுடனேயே பிரபலமாகியதோடு, மாக்விர்டர் சகோதரர்களுக்கும் பெயரும் பணமும் சேர்ந்தன.

இந்தப் புத்தகத்தில் என்னென்ன, சுவாரசியமான விஷயங்கள் இருக்கும்?


இதுவரை ஒரே சந்தர்ப்பத்தில் அதிகப் பேருடன் கைகுலுக்கிய நபர் யார் என்று தெரிய வேண்டுமா?

இந்தப்புத்தகம் விடைகூறும். விடை: டெட்டி ரூஸ்வெல்ட். 1907ல் வெள்ளை மாளிகையில் நடந்த ஒரு விருந்துபசாரத்தின் போது 8513 பேருடன் கைகுலுக்கியிருக்கிறார் அவர்!

உலகத்திலேயே அதிகமாகத் தற்கொலைகள் நிகழும் இடம் எது?

நீங்கள் நினைப்பதுபோல ஜப்பானில் அல்ல; ஹங்கேரியில். இதிலே இன்னொரு ஆச்சரியகரமான விஷயம் என்னவென்றால் ஹங்கேரியில்தான் ஜனனவிகிதம் மிகவும் குறைச்சல்!

உலகிலேயே மிகவும் உஷ்ணமான இடம் எங்கே இருக்கிறது? மெக்ஸிகோவில் ஸான் லூயி பொடாஸி என்கிற இடம் தான் என்கிறது இந்தப் புத்தகம். அங்கே வெப்பநிலை 136·4·F ரொம்பவும் சகஜமாம்!



ஆயுள், உயரம் — இவை பற்றிய தகவல்கள் சேகரிப்பது தான் கொஞ்சம் சிரமமான வேலை என்கிறார்கள் புத்தக ஆசிரியர்களான சகோதரர்கள். காரணம், ஆதாரம் ஏதுமின்றி இவர்கள் எந்தத் தகவலையும் இதுவரை ஏற்றுக் கொண்டது கிடையாது; மேற்படி இரண்டு விஷயங்களும் ஆதாரத்தோடு கிடைப்பது மில்லை! 113 வருடங்களும் 124 நாட்களும் வாழ்ந்த ஒரு பிரஞ்சு — கனடிய ஆசாமிதான் இதுவரை ஆயுள் ரிக்கார்ட் ஏற்படுத்தியவர். அவரைக் காட்டிலும் தானே நீண்ட ஆயுள் வாழ்கிறவர் என்று வால்டர் வில்லியம்ஸ் என்ற அமெரிக்கர் இவர்களுக்கு எழுதினாராம். 1860—ல் அமெரிக்க உள்நாட்டுப் போரிலேயே தாம் பங்கேற்றிருப்பதாகவும் இவர் சொன்னார். அப்புறம் விசாரித்துப் பார்த்தால் 1860—ல் வில்லியம்ஸ் ஐந்து வயதுக் குழந்தை என்று தெரியவந்தது. ஆனால் அதற்குள் அவர் வாங்க வேண்டிய யுத்தகாலபென்ஷனையெல்லாம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மண்டையையும் போட்டு விட்டார்.

செல்டே என்று ஒரு சர்க்கஸ் பேர்வழி. அவர்தான் உலகத்திலேயே ரொம்ப உயரமானவர் என்றும் அவரது உயரம் ஒன்பதடி மூன்றங்குலம் என்றும் விளம்பரம் செய்திருந்தார்கள். மாக்விர்டர் சகோதரர்கள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. அப்புறம் ஒரு டாக்டரை வைத்துக் கொண்டு பரிசோதனை செய்து பார்த்ததில் அந்த ஆசாமி ஏழடி எட்டங்குலம்தான் உயரம் என்பது தெரிய வந்தது!

இதேபோலத்தான் இரண்டாம் உலகப் போரில் அடிபட்ட தனக்கு 414 தடவைகள் ஆபரேஷன் செய்யப்பட்டதாகச் சொல்லிக் கொண்டு வந்தார் ஒருத்தர். அது பொய்யென்று நிரூபித்து அனுப்பி விட்டார்கள் இந்த இரட்டையர்கள்.


வெறும் புள்ளி விவரங்களைத் தவிர சில சுவாரசியமான விஷயங்களும் இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. அவற்றில் சில:

லாஸ் ஏஞ்ஜல்ஸில் ஒருவர் எட்டு வருடகாலம் தொடர்ந்து விக்கலால் அவதிப் பட்டிருக்கிறார். இந்த எட்டு வருடத்தில் பதினறு கோடி தடவை விக்கியிருக்கிறார். அவருடைய எடை 138 பவுண்டிலிருந்து 78 பவுண்டாகக் குறைந்து விட்டது.

கண்டா முண்டான் சாமான்களை விழுங்கியதில் ஒரு சாதனை இதோ: ஒருவருடைய வயிற்றிலிருந்து 258 பொருள்கள் வெளியே எடுக்கப்பட்டன. அவற்றில் 29 ஆணிகள், 26 சாவிகள், 16 மெடல்கள், மூன்று ஜெபமாலைகளும் இருந்தன!

1910ம் ஆண்டில் ஹாங்காய் நகரில் வசித்து வந்த ஒரு சீன மத குருவுக்குத்தான் மிகவும் நீளமான நகங்கள் இருந்தன. அவற்றின் நீளம் 22— அங்குலம். இதை வளர்க்க அவருக்கு 27 வருடங்கள் பிடித்தன!

சென்டிலியன் என்பதுதான் எண்களுக்குள்ளேயே மிகப் பெரியஎண். அதை எப்படி எழுதுவது? 1 என்று போட்டுவிட்டுத் தொடர்ச்சியாக அறுநூறு பூஜ்யங்கள் போடவேண்டுமாம்.



UNO, UNICEF என்றெல்லாம் ஆங்கிலச் சொற்களைச் சுருக்கி எழுதுகிறோமல்லவா? இந்தச் சுருக்கங்களில் மிகப் பெரியது. A.U.C.S.R.L.F.R.V.W.A.M.என்பதாகும். இதன் விரிவு All Union Central Scientific Research Laboratory for the Restoration of Valuable Works of Art Museums.

1961ம் ஆண்டில் கலிபோர்னியா மாநிலம், லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகரில் டக்ளஸ்வில்லியம்ஜான்ஸ்டன் என்பவர் தாம் கண்டெடுத்த இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் டாலர்களை அதன் சொந்தக்காரர்களிடம் அப்படியே சேர்ப்பித்தார். இதுவரை இப்படி யாருமே செய்ததில்லை என்று கூறப்படுகிறது. டக்ளஸுக்கு வந்த கடிதங்களில் பல அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எழுதி யிருந்தனவாம்!

நூற்றுக் கணக்கான பத்திரிகைகளையும் உலகெங்கிலுமிருந்து தங்களுடைய விசேஷ நிருபர்கள் அனுப்பும் செய்திகளையும் படித்துப் பார்த்து இப்படியொரு அற்புதமான நூலைத் தொகுக்கும் மாக்விர்டர் சகோதரர்கள் பெயரும் அவர்களுடைய புத்தகத்தில் இடம் பெற வேண்டியதுதான் என்பதில் சந்தேகம் இல்லையல்லவா?

வட்ட மேஜை

★ உள்ளத்தில் பதிந்த உருவம்

★ வியத்தகு சிறப்பு

★ பொறுமைக்கு ஒரு சோதனை!

ஸ்ரீ சுறுதன ஷெணாய் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கடிதத்தின் மொழிபெயர்ப்பு.

• என் பெயரைப் பார்த்ததுமே நான் தமிழன் அல்ல என்பதைப் புரிந்துகொண்டிருப்பீர்கள். சுமார் இருபது வருடங்களுக்கு முன் தமிழ் படிக்கக் கற்றுக்கொண்டேன். அந்த ஆரம்ப காலத்திலிருந்தே கல்கியின் நூல்களைப் படிப்பதில் அளவில்லாத ஆர்வம் கொண்டிருந்தேன். தமிழ் எழுதத் தெரியாது எனக்கு. ஆனால் சுமாராகப் பேசுவேன்..

அண்மையில் உலகத் தமிழ் மகாநாடு சென்னையில் நடைபெற்றபோது நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களைக் கவனத்துடன் படித்து வந்தேன். எத்தனையோ சிலைகள் எழுப்பப்பட்டபோது கல்கி அவர்களின் சிலை விடுபட்டுப் போனது எனக்கு ஏமாற்றம் அளித்தது. தமிழ் இலக்கியத்தைப் பாமர மக்களுக்குக் கொணர்ந்து தந்தது கல்கி அவர்கள்தான் என்று நான் சொன்னால் அது தவறாகாது என எண்ணுகிறேன். தமது சிறுகதைகள், நாவல்கள், விமரிசனங்கள், பயணக் கட்டுரைகள் முதலியவற்றால் மக்களை மகிழ்வித்ததுடன் வேறு பல புதிய எழுத்தாளர்களையும் தோற்றுவித்து, ஊக்குவித்து ஆதரவு காட்டியிருக்கிறார். அவர்களைப் பாமரருக்கும் புரியும்படியான தமிழை எழுதச் சொல்லியிருக்கிறார். பலவிதங்களில் அவரை ஒரு முன்னோடி எனச் சொல்லலாம்.

21–1–68 கல்கி இதழைப் பார்த்தபோது எனக்குச் சந்தோஷம் கலந்த வியப்பளிக்கும் செய்தி அதில் இருக்கக் கண்டேன். கல்கி அவர்களுக்குச் சிலை எழுப்பும் யோசனை கல்கி ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டதுடன் அந்த யோசனை அமைச்சர்களால் ஏற்கப்பட்டதாகவும் படித்து மகிழ்ந்தேன். தங்கள் முயற்சி சிறக்க எனது நல்வாழ்த்துக்களை அளிக்கிறேன்.

பதினேழு ஆண்டுகளுக்கு முன்னால் எனது அருமை நண்பன் ஒருவன் சிவகாமியின் சபதம் நாவலை என் பக்கம் தள்ளிவிட்டான். அந்தப் பெரிய புத்தகத்தை, ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களை மிகுந்த சிரமப்பட்டு, ஆனால் மிகுந்த அக்கறையுடன் படித்து முடித்தேன். பிறகு கல்கி அவர்களுக்கு அடக்கத்துடன் எளிய முறையில் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினேன்.

அந்தப் பெரிய மனிதர் உடனடியாக எனக்குப் பதில் எழுதினார். எனக்கு நன்றி தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் தாம் எழுதப் போகும் சில நூல்களை யொட்டி எனது யோசனைகளையும் ஏற்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பின் வெகு சீக்கிரத்திலேயே விதி குறுக்கிட்டு அவரை நம்மிடமிருந்து பிரித்து என்னைக் கோபத்துக்கும் வருத்தத்துக்கும் ஆளாக்கியது.

தமிழ் எழுத்தாளர்களுக்குள் கல்கி அவர்களது எழுத்தே எனக்கு மிகவும் பிடித்தமானது. அவரது பொன்னியின் செல்வனும் அமரதாராவும் இன்னும் என்னிடத்தில் உள்ளன.

உங்களது நியாயமான துணிவான முயற்சிக்கு எளியேனது பாராட்டுதல்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

கொச்சின்–3 வி. எஸ். ஷெணாய்

19–1–68

'கல்கி' பொங்கல் இதழில் வெளியான 'நடு வழியில் ஒரு ரயில்' என்ற நெடுங் கதையைப் படித்துப் பேருவகை அடைந்தேன். நீராவி இன்ஜின் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆசிரியர் எவ்வளவு கவனத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்டிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது பெரு வியப்பு உண்டாகிறது. பண்டு என்கிற அவல — ஆனால், அமர — பாத்திரத்தைச் சிருஷ்டிப்பதற்காக, ஸ்ரீ வேணுகோபாலனே இன்ஜினில் உதவியாளராகப் பயிற்சி ஏதும் பெற்றாரா என்று கூட எண்ணத் தோன்றுகிறது! அவ்வளவு சிறப்பு!

தஞ்சை

17–1–68 டி. எஸ். கே.

திருவையாற்றில் தியாகபிரும்ம உற்சவத்தில் நடைபெற்ற கச்சேரிகளை ஆறு நாட்களாக வானொலியில் அஞ்சல் செய்யக் கேட்டேன். நடைபெற்ற கச்சேரிகளில் பாதிக்கு மேல் எனக்குச் சங்கீதத்தில் உள்ள ஈடுபாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட்டன. காது கொடுத்துக் கேட்க முடியாத வகையில் பாடியவர்களுக்கெல்லாம் ரேடியோவில் இடம்கொடுத்து எங்களைப் போன்றவர்களின் பொறுமையைச் சோதித்து விட்டார்கள். இந்த வகையில் திருவையாறு உற்சவம் நடைபெற்றால் நல்ல கச்சேரிகளைக் கேட்டு ரசிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களைப் போன்றவர்கள் கண்டிப்பாக சங்கீதத்தையே வெறுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். இதே போல் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இனி வருகிற ஆண்டுகளிலாவது இந்த முறையிலே நடைபெறாமல் நல்ல வித்வான்களுக்கெல்லாம் அதிக நேரம் கொடுத்து ரேடியோவில் அஞ்சல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருவாரூர் ஆர். ரங்கநாயகி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


திகைப்பூட்டும் வனப்பு!
மனையலங்காரத் துணிகள்
தயாரிப்பாளர்கள்:
MAFATLAL GROUP
மபத்லால்
க்ரூப்

H. 156-TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி